The Climate Change Glossary

காலநிலை மாற்றம்: சொற்களஞ்சியம்

in partnership with

TNGCC
Tamil Nadu Green Climate Company

CLIMATE TRENDS

The Climate Change Glossary

காலநிலை மாற்றம்: சொற்களஞ்சியம்

in partnership with

TNGCC
Tamil Nadu Green Climate Company

CLIMATE TRENDS

Introduction

Climate change is the largest threat facing humanity today and its impact is being increasingly felt in every geography of the planet - from cities to coasts, mountains to deserts and farms to forests. Several studies have shown that India is among the most vulnerable countries with regards to climate change impacts and could face catastrophic damages if not prepared. The country has already set ambitious targets to achieve net zero and this decade will be critical in its efforts to progress rapidly on these so as to join the international efforts to contain global warming. For India to achieve its targets, sub-national i.e. state level action will be critical - And for this, more focus is needed at the regional level about national and international discussions and action in this space.

Over the last decade, climate change has evolved into a complex subject with new terms and definitions making their way into international, national and sub-national texts every year in an attempt to keep up with accelerating and intensifying impacts. As research and knowledge in a subject grows, it is only common that we make space for a larger vocabulary of related words. But while these words are becoming common parlance in the English language internationally and in Hindi in India, at the regional level, there remains a barrier that hinders access to this knowledge due to the limitations in the local language.

From first being merely mentioned at national and international summits, climate today is being investigated at its roots, bringing the discussion to each individual state and its role in averting a climate crisis. Documents and reports released by bodies such as the Conference of Parties (COP) and by the International Panel for Climate Change (IPCC) are now being debated at length on regional television shows, bringing the matter to people's living rooms. While this is to be appreciated,

the lack of corresponding terms in Tamil, makes it harder for both Tamil media and audiences to get into the finer details of the subject.

Several of these words meant to describe climate related terms already exist in Tamil, which is considered to be one of the oldest languages in the world. But they are not commonly used or combined to create meaning for new phenomena, technologies or impacts that we are currently witnessing. Climate change is a reality that affects everyone and to address it, awareness is crucial. And awareness comes with access to the right information and language to be used. As research in this sphere develops and science grows, so must the language and communication efforts surrounding it. To this end, Climate Trends has developed a glossary of climate related terms in Tamil, making it accessible for anyone willing to learn, read or inform themselves about climate in their language.

Tamil Nadu has already been named one of the leaders in the country's efforts to tackle climate change, thanks to the initiatives of the government in the last two years. From setting up a Green Climate company to launching the Climate change mission, the state has shown foresight and initiative in handling the crucial need to build climate resilience, aptitude and ensure mitigation. From alternative sources of energy to scientific methods being used to address climate change, there needs to be common parlance which can be used to ensure every resident of the state has the right tools to participate in the upcoming changes that the world will see. We believe that this glossary of relevant terms, phrases, abbreviations and meaning will further the efforts to improve communication and literacy surrounding climate.

Acknowledgements

This glossary is the labour of a lot of people's effort and time. We would like to thank the translators and reviewers who worked with Climate Trends to create this document. This includes **Hari Bharathi** (Translator), **Kavitha Muralidaran** (Independent Researcher) and **Theodore Baskaran** (Author and Environmentalist).

முன்னுரை

காலநிலை மாற்றம் மனிதர்குலத்துக்கு ஏற்பட்டிருக்கும் மிகப் பெரிய அச்சுறுத்தல். இதனுடைய தாக்கம் பூமியின் பல்வேறு புவியியல் அம்சங்களில்-அதாவது நகரங்கள், கடற்கரைகள், பாலைவனம், பண்ணைகள், காடுகள் போன்றவற்றில் காணப்படுகிறது. காலநிலை மாற்றத்தின் பாதிப்புக்குள்ளாகும் நாடுகளின் பட்டியலில் இந்தியாவும் அடங்கும். போதுமான முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்காவிட்டால் இந்த பாதிப்புகள் பேரழிவை ஏற்படுத்தும் என்று ஆய்வுகள் கூறுகின்றன. காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ள இந்தியா ஏற்கனவே கார்பன் நடுநிலைமை போன்ற இலக்கை நிர்ணயத்துள்ளது. இந்த லட்சியங்களை அடையவும் புவி வெப்பமடைவதை தடுக்கும் உலகளாவிய நடவடிக்கைகளுடன் சேருவதற்கும் வரும் பத்தாண்டு காலம் மிகவும் முக்கியமானது. இந்தியா இந்த இலக்கை அடைவதற்கு மாநில அளவிலான நடவடிக்கைகள் முக்கியம். அது போல வட்டார நடவடிக்கைகளிலும் தேசிய மற்றும் சர்வதேச விவாதங்களையும் நடவடிக்கைகளையும் கொண்டு சேர்க்க வேண்டும்.

கடந்த பத்தாண்டு காலத்தில் தீவிரமடைந்துள்ள காலநிலை மாற்றத்தாக்கங்களால் சர்வதேச, தேசிய மற்றும் வட்டார வழக்கில் புதிய சொற்கள் மற்றும் வரையறைகளை கலந்து காலநிலை மாற்றம் என்பது ஒரு சிக்கலான தலைப்பாக உருமாறியுள்ளது. ஆராய்ச்சியும் அறிவும் வளர வளர மொழியின் சொல்லதிகாரத்தை விரிவு படுத்துவது இயல்பானது. உலகளவில் ஆங்கிலத்திலும் இந்தியாவில் ஹிந்தியிலும் இந்த வளர்ச்சி காணப்படுகிறதே தவிர பல வட்டார மொழிகளுக்கு அவை இன்னும் எட்ட வில்லை. இதனால் காலநிலை மாற்றம் பற்றிய புதிய கண்டுப்பிடிப்புகளையும் அறிவையும் வட்டார மொழிகளில் அணுகுவது தடையாக உள்ளது.

ஒரு காலத்தில் தேசிய மற்றும் சர்வதேச உச்சி மாநாட்டில் காலநிலை மாற்றம் என்பது பேசப்பட்டது. ஆனால் இன்று அதன் வேரிலிருந்து ஆராய்ச்சி செய்து பேரிழப்பை தடுக்கத்தக்க நடவடிக்கைகளை ஒவ்வொரு மாநிலத்துக்கும் கொண்டு போய் சேர்க்கப்படுகிறது. சர்வதேச மாநாடுகளான கான்பரன்ஸ் ஆப் பார்ட்டிஸ் மற்றும் சர்வதேச குழுவான இன்டர்கவர்மென்டல் பேனல் போர் கிளைமேட் சேன்ஜ் போன்ற மன்றங்களில்

வெளியிடப்படும் ஆய்வுகளும் ஆவணங்களும் இப்பொழுது வட்டார தொலைக்காட்சி நிகழ்ச்சிகளின் மூலம் மக்களின் வீட்டிற்கே வந்து சேர்க்கப்படுகிறது. இது ஒரு சிறப்பான முயற்சி என்றாலும் அந்த ஆவணங்களில் உள்ள சொற்களுக்கு இணையான தமிழ் சொற்கள் இல்லாதது ஊடகத்துக்கு மக்களுக்கும் அந்த ஆவணங்களில் உள்ள நுணுக்கங்களை புரிந்துகொள்ள தடையாக இருக்கிறது.

தமிழ் மிக தொன்மையான மொழிகளில் ஒன்றாக இருப்பதால் காலநிலை மாற்றம் குறித்த சொற்கள் பல ஏற்கனவே நமது வட்டார வழக்கில் உள்ளது. ஆனால் அவை பேச்சு வழக்கிலும் இல்லை, வளர்ந்து வரும் ஆய்விற்கும் பெருகி வரும் அறிவிற்கும் ஏற்றார் போல ஒருங்கிணைந்து வர இயல்பானதாகவும் இல்லை. காலநிலை மாற்றம் என்பது அனைவரையும் பாதிக்க கூடியது. அதனால் அதைப்பற்றிய விழிப்புணர்வு மிகவும் முக்கியம். விழிப்புணர்வு பெற முதலில் சரியான தகவல்களை அணுகவும் எளிதான மொழியும் வேண்டும். காலநிலை மாற்றம் தொடர்பான அறிவியலும் ஆராய்ச்சியும் வளர வளர மொழியும் சொற்களஞ்சியமும் வளர வேண்டும். தமிழில் காலநிலை மாற்றம் பற்றிய தகவல்களையும் தொழில்நுட்பங்களையும் படித்து புரிந்து விழிப்புணர்வு பெற விரும்புவர்களுக்கு கிளைமேட் ட்ரென்ட்ஸ் இந்த சொற்களஞ்சியத்தை உருவாக்கியுள்ளது.

காலநிலை மாற்றத்தின் தாக்கங்களை எதிர்கொள்ள கடந்த இரண்டு ஆண்டுகள் தமிழக அரசு பல நடவடிக்கைகளை எடுத்து இந்தியாவின் முன்னணி மாநிலமாக திகழ்கிறது. தொலைநோக்கு பார்வையுடனும் வருங்காலத்தில் ஏற்படக்கூடிய பேரிடரை தவிர்க்கவும் தேவையான விரிதிறனை வளர்க்கும் வகையில் சமீபத்தில் காலநிலை மாற்ற இயக்கம் மற்றும் பசுமை காலநிலை நிறுவனம் போன்றவற்றை நிறுவியிருக்கிறது தமிழக அரசு. காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ள தேவையான மாற்று எரிசக்தி மற்றும் அறிவியல் பூர்வமான வழிமுறைகளை கையாள மக்களுக்கு வட்டார வழக்கில் இந்த அறிவை புகுத்துவது மிகவும் அவசியம். இந்த சொற்களஞ்சியம் மூலம் மக்களுக்கு காலநிலை மாற்றம் பற்றிய அறிவும் விழிப்புணர்வும் கூடும் என்று நம்புகிறோம்.

ஒப்புகைகள்

இந்த சொற்களஞ்சியம் பலரது உழைப்பாலும் அன்பாலும் உருவாகியிருக்கிறது. இதில் கிளைமேட் ட்ரென்ட்சுடன் பணியாற்றிய மொழிப்பெயர்ப்பாளர்களுக்கும் விமர்சகர்களுக்கு நன்றிகள். குறிப்பாக **ஹரி பாரதி** (மொழிப்பெயர்ப்பாளர்) **கவிதா முரளிதரன்** (சார்பற்ற ஆய்வாளர்) மற்றும் **தியோடர் பாஸ்கரன்** (சுற்றுப்புறச்சூழல் ஆய்வாளர் மற்றும் எழுத்தாளர்) அவர்களுக்கு நன்றி.

A

Adaptation

Action that helps cope with the effects of climate change - for example construction of barriers to protect against rising sea levels, or conversion to crops capable of surviving high temperatures and drought. (BBC)

தகவமைப்பு

காலநிலை மாற்றத்தின் பாதிப்புகளிலிருந்து தாக்கு-பிடிப்பதற்கு உதவக் கூடிய தகவமைப்பு நடவடிக்கை — உதாரணமாக கடல் மட்ட உயர்விலிருந்து காத்துக் கொள்வதற்கு தடுப்புகளை அமைத்தல், அதிக வெப்பநிலையிலும், வறட்சியிலும் பிழைத்திருக்க கூடிய உணவுப் பயிர்களுக்கு மாறுதல் போன்றவை.

Adaptation fund

A fund for projects and programmes that help developing countries cope with the adverse effects of climate change. It is financed by a share of proceeds from emission-reduction programmes such as the Clean Development Mechanism. (BBC)

தகவமைப்பு நிதி

காலநிலை மாற்றத்தின் தாக்கத்திலிருந்து வளரும் நாடுகளை காத்திட உதவும் திட்டங்களுக்காகவும், செயற்பாடுகளுக்காகவும் வழங்கப்படுவதே இந்த நிதி. 'தூய்மையான வளர்ச்சி முறைகளைப் (Clean Development Mechanism) போன்ற உமிழ்வை குறைக்கும் திட்டங்களுக்கான நிதியில் ஒரு பங்கே இதற்காக ஒதுக்கப்படுகின்றது.

Aerosol

The definition of an aerosol is a suspension of tiny particles or droplets in the air, such as dusts, mists, or fumes. These particles may be inhaled or absorbed by the skin, and can sometimes cause adverse health effects for workers. Aerosols influence climate in two primary ways: by changing the amount of heat that gets in or out of the atmosphere, or by affecting the way clouds form. (Centre for Disease Control and Prevention, National Geographic)

வளிமக்கரைசல்

தூசு, பணி, புகை போன்ற அளவில் சிறிய துகள்கள் அல்லது துளிகள் காற்றில் மிதந்த வண்ணம் இருப்பது வளிமக்கரைசல் எனப்படுகிறது. இந்த துகள்கள் சுவாசிக்கும் பொழுது உள்ளிழுக்கப்படுவதும், அல்லது தோலினால் உறியபட்டும் உடலினுள் செல்கையில், அங்கிருக்கும் தொழிலாளர்களுக்கு தீவிர உடல் உபாதைகளை கொடுக்கிறது. இந்த வளிமக்கரைசல் காலநிலையை இரண்டு விதத்தில் பாதிக்கிறது: ஒன்று, வளிமண்டலத்தில் எவ்வளவு வெப்பம் உள்நுழையவோ வெளியேற்றப்படவோ உள்ளது என்பதை தீர்மானிப்பது; இரண்டாவது, மேகங்கள் உருவாகும் முறைகளை பாதிப்பது.

Afforestation

Planting of new forests on lands that historically have not contained forests. (IPCC)

காடு வளர்ப்பு

வரலாற்று ரீதியில் முன்னதாக காடுகளே இல்லாத நிலங்களில் புதுகாடுகளை அமைப்பது.

Agro-Forestry

Agroforestry is a collective name for land-use systems and technologies where woody perennials (trees, shrubs, palms, bamboos, etc.) are deliberately used on the same land-management units as agricultural crops and/or animals, in some form of spatial arrangement or temporal sequence. In agroforestry systems there are both ecological and economical interactions between the different components. Agroforestry can also be defined as a dynamic, ecologically based, natural resource management system that, through the integration of trees on farms and in the agricultural landscape, diversifies and sustains production for increased social, economic and environmental benefits for land users at all levels (Food and Agriculture Organisation of the United Nations)

வேளாண்-காடுவளர்ப்பு

வேளாண்-காடுவளர்ப்பு என்பது வேளாண் பயிர்களோ, விலங்குகளோ வளர்க்கப்படும் அதே நிலங்களில் பல ஆண்டுகள் வளர்ந்து நிற்கக் கூடிய மரங்கள், புதர்ச்செடிகள், பனை , மூங்கில் போன்ற தாவரங்களை குறிப்பிட்ட இடம் மற்றும் கால இடைவேளையில் வளர்க்கும் தொழில்நுட்பம் மற்றும் நிலப் பயன்பாட்டு திட்டங்களை கூட்டாக குறிக்கப் பயன்படும் சொல். இந்த வேளாண்-காடு வளர்ப்பு முறைகளில் பல்வேறு-பட்ட பொருளியல் மற்றும் சூழலியல் காரணிகளுக்கு இடையில் தொடர்பு இருந்துகொண்டே இருக்கும். இதனை ஒரு இயக்கம் நிறைந்த, சூழலியல் அடிப்படையிலான, இயற்கை வளமேலாண்மை அமைப்பு என்று கூறலாம். காரணம், இது வேளாண் நிலங்களிலும், பண்ணைகளிலும் மரங்களை நட்டு வளர்ப்பதன் மூலம் நிலத்தைப் பயன்படுத்துவோருக்கு பல்வேறு தளங்களில் மற்றும் நீடித்தகாலத்திற்கு சமூக, பொருளா-தார மற்றும் சுற்றுசூழல் பயன்களை உருவாக்கும்.

Air pollution

Air pollution refers to the release of pollutants into the air—pollutants which are detrimental to human health and the planet as a whole. It is essentially the introduction of substances (gases or aerosols) which will have a direct (primary pollutants) or indirect (secondary pollutants) harmful effect. This can be through natural processes or human activity. (NRDC)

காற்று மாசு / காற்று மாசுபடுதல்

வளிமண்டலத்தில் மனித உடல் நலத்திற்கும் புவியின் நலனிற்கும் தீங்கு விளைவிக்கும் பொருட்களை வெளியேற்றுவது காற்று மாசு. குறிப்பாக நேரடியாகவோ (முதன்மை மாசு) அல்லது மறைமுகமாகவோ (இரண்டாம் தர மாசு) வாயு, நுண்துகள், வளிமக்கரைசல் போன்றவற்றை வெளி-யேற்றுவதால் வரும் விளைவு இது. இது இயற்கை-யாகவோ, மனித செயல்பாடுகளினாலோ நிகழ்வது.

Air Quality Index

The Air Quality Index (AQI) is the system used to warn the public when air pollution is dangerous. The AQI tracks ozone (smog) and particle pollution (tiny particles from ash, power plants and factories, vehicle exhaust, soil dust, pollen, and other pollution), as well as four other widespread air pollutants. Keeping track of the current air quality information can help one take steps to protect themselves, children, and others from unhealthy levels of air pollution. (Lung.org)

காற்றின் தரக் குறியீடு

காற்றுல் மாசு ஆபத்தான நிலையை எட்டுகையில், பொது மக்களை எச்சரிப்பதற்காக உருவாக்கப்பட்ட அமைப்பே 'காற்றின் தர குறியீடு'. இந்த அமைப்பு காற்றில் கலந்துள்ள ஓசான், நுண்துகள்கள் (மின் ஆலைகள், தொழிற்சாலைகள், வாகனங்கள் போன்றவற்றில் இருந்து வெளியேறும் சாம்பல் போன்ற நுண்துகள்கள், தூசு, மகரந்தம், போன்றவை), அதனுடன் பிற முக்கிய 4 மாசுபடுத்திகளையும் கண்காணிக்கின்றது. இவ்வாறு தினசரி காற்று மாசின் அளவை கண்காணிப்பதால் பொதுமக்கள், குழந்தைகள், உடல்நலக் குறை பாடு உடையோர் காற்று மாசிலிருந்து தங்களை தற்காத்துக் கொள்ள தேவையான நடவடிக்கை கள் எடுக்க இது உதவும்.

Annex I Countries

The industrialised countries (and countries in transition to a market economy) which took on obligations to reduce their greenhouse gas emissions under the Kyoto Protocol. Their combined emissions, averaged out during the 2008-2012 period, should be 5.2% below 1990 levels. (BBC)

இணைப்பு 1 நாடுகள்

இவை தொழில்மயமாக்கப்பட்ட நாடுகள் (மற்றும் சந்தை பொருளாதாரத்திற்கு மாறிக்க ொண்டு இருக்கும் நாடுகள்). இந்த நாடுகள் க்யோடோ நெறிமுறைகளின் படி தனது பசுமையில்ல வாயுக்களின் உமிழ்வை குறைக்க உறுதியேற்றி-ருப்பவை . இந்த நாடுகளின் மொத்த உமிழ்வு 1990களின் அளவை விட 5.2 சதவிகிதம் குறை வாக இருக்கவேண்டும் (2008இல் இருந்து 2012 வரை கணக்கிடப்பட சராசரி இது).

Annex II Countries

Countries which have a special obligation under the Kyoto Protocol to provide financial resources and transfer technology to developing countries. This group is a sub-section of the Annex I countries, excluding those that, in 1992, were in transition from centrally planned to a free market economy. (BBC)

இணைப்பு 2 நாடுகள்

இந்த அட்டவணையில் உள்ள நாடுகள் க்யோடோ நெறிமுறைகளின் படி வளரும் நாடுகளுக்கு பொருளாதார வளங்களையும், தொழில்நுட்ப பரிமாற்றங்களையும் செய்ய வேண்டிய நாடுகள். இந்த நாடுகள் அட்டவணை ஒன்றில் உள்ள நாடுகளுள் ஒரு சிறிய துணைப்பிரிவு. 1992இல் மையத்திட்டம் வகுக்கும் பொருளாதார அமைப்பில் இருந்து சந்தை பொருளாதார அமைப்பிற்கு மாறிக் கொண்டிருந்த நாடுகள் இந்த பிரிவில் சேராது.

Anthropocene

The 'Anthropocene' is a proposed new geological epoch resulting from significant human-driven changes to the structure and functioning of the Earth System, including the climate system. (IPCC)

மானுட யுகம்

இது புதிதாக முன்மொழியப்பட்ட ஒரு புதிய புவியியல் யுகம். இந்த யுகத்தில் புவியின் அமைப்பு மற்றும் இயக்கம் போன்றவற்றில் (காலநிலை அமைப்பு உட்பட) மனித செயல்பாடுகளால் ஏற்படும் மாற்றங்கள் குறிப்பிடத்தகுந்தனவாக இருக்கும்.

Anthropogenic

Resulting from or produced by human activities (IPCC)

மானுடவிளைவு

மனித நடவடிக்கை களால் உருவாகும் விளை வுகள் இவ்வாறு அழை க்கப்படுகின்றன.

Anthropogenic climate change

Man-made climate change - climate change caused by human activity as opposed to natural processes. (BBC)

மானுடவியலால் உருவாகும் காலநிலை மாற்றம் (அ) மனிதரால் உருவாகும் கால நிலை மாற்றம்

மனிதரால் உந்தப்பட்ட காலநிலை மாற்றத்தை இது குறிக்கிறது. இயற்கையாக நிகழும் காலநிலை மாற்றத்திலிருந்து இது வேறுபட்டது.

Anthropogenic emissions

Emissions of greenhouse gasses, greenhouse gas precursors, and aerosols caused by human activities. These activities include the burning of fossil fuels, deforestation, land use changes, livestock production, fertilization, waste management, and industrial processes. (IPCC)

மானுட உமிழ்வு

எரிப ொருட்களின் பயன்பாடு, காடழிப்பு, நிலப் பயன்பாட்டின் மாற்றம், கால்நடை வளர்ப்பு, ரசாயன உரங்கள் பயன்பாடு, கழிவு மேலாண்மை, தொழிற்-சாலைகள் போன்ற மனிதசெயல்பாடுகளால் நிகழக்கூடிய பசுமை இல்லவாயு, அவற்றை உருவாக்கக்கூடிய முன்னோடி பொருட்கள், வளிமக்-கரைசல் போன்றவற்றின் உமிழ்வு.

Anthropogenic removals

Anthropogenic removals refer to the withdrawal of GHGs from the atmosphere as a result of deliberate human activities. These include enhancing biological sinks of CO2 and using chemical engineering to achieve long-term removal and storage. Carbon capture and storage (CCS) from industrial and energy-related sources, which alone does not remove CO2 in the atmosphere, can reduce atmospheric CO2

மானுட உமிழ்வு நீக்கம்

வளிமண்டலத்தில் உள்ள பசுமை இல்ல வாயுக்களை மனிதனின் திட்டமிட்ட செயல்பாடுகள் மூலம் நீக்கும் வழிமுறை கள். உயிரியல் கரிம உறிஞ்சிகளை உருவாக்குதல், வேதிப் பொறியியலை பயன்படுத்தி கரிமத்தை பிரித்து எடுத்து நெடுங்காலம் சேமித்து வைக்கும் வழிமுறைகளை உருவாக்குதல் போன்ற-வை இவற்றுள் அடங்கும். தொழிற்சாலைகள் மற்றும் ஆற்றல் சார்ந்த மூலங்களில் இருந்து

if it is combined with bioenergy production (BECCS). (IPCC)

வெளிவரும் கரியமில வாயுவை பிரித்தல் மற்றும் சேமித்தல் வழிமுறை களை மட்டும் பயன்படுத்தி வளிமண்டலத்தில் உள்ள கரியமில வாயுவை குறைக்க முடியாது. உயிரி-ஆற்றல் உற்பத்தி போன்றவற்றையும் செயல்படுத்த வேண்டும்.

Aosis

The Alliance of Small Island States comprises 42 island and coastal states mostly in the Pacific and Caribbean. Members of Aosis are some of the countries likely to be hit hardest by global warming. The very existence of low-lying islands, such as the Maldives and some of the Bahamas, is threatened by rising waters. (BBC)

தீவுநாடுகளின் கூட்டணி

சிறிய தீவுநாடுகள் கூட்டணி என்பது பசிபிக் மற்றும் கரீபியன் கடலில் உள்ள 42 தீவுகள் மற்றும் கடற்கரை நாடுகளை உள்ளடக்கியது. இந்த கூட்டணியின் உறுப்பு நாடுகள் உலக வெப்பமயமாதலால் மிகவும் தீவிரமாக பாதிப்படையக் கூடியவை. கடல் நீர்மட்ட உயர்வினால் பஹாமாஸ், மாலத்தீவுகள் போன்ற நாடுகளின் தாழ்நிலமான சில தீவுகள் ஆபத்தை எதிர்நோக்குகின்றன.

Article 6

Article 6 of the Paris Agreement allows countries to voluntarily cooperate with each other to achieve emission reduction targets set out in their NDCs. This means that, under Article 6, a country (or countries) will be able to transfer carbon credits earned from the reduction of GHG emissions to help one or more countries meet climate targets. (World Bank)

ஆறாம் பிரிவுக்கூறு / ஆறாம் ஷரத்து

பாரிஸ் ஒப்பந்தத்தின் ஆறாம் பிரிவுக்கூறு உலக நாடுகள் தங்களது NDC யில் (தேசிய அளவில் தீர்மானிக்கப்பட்ட பங்களிப்புகள்) அவை முன்வைத்திருக்கும் உமிழ்வைக் குறைக்கும் இலக்கினை பிற நாடுகளுக்கு இடையில் உள்ள சில புரிந்துணர் ஒத்துழைப்பின் மூலம் அடைவதை அனுமதிக்கிறது. அதாவது ஒரு நாடு தனது பசுமை இல்ல வாயுக்களின் உமிழ்வு குறைப்பின் மூலம் பெற்ற கரிம வரவினத்தை ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நாடுகளுக்கு கொடுத்து காலநிலை மாற்ற இலக்கினை அந்த நாடுகள் அடைய உதவலாம்.

Atmospheric aerosols

Microscopic particles suspended in the lower atmosphere that reflect sunlight back to space. These generally have a cooling effect on the planet and can mask global warming. They play a key role in the formation of clouds, fog, precipitation and ozone depletion in the atmosphere. (BBC)

வளிமண்டல வளிமக்கரைசல்

தாழ்வான வளிமண்டலப் பகுதியில் காற்றுடன் கலந்துள்ள நுண்துகள்கள். இவை சூரியக் கதிர்களை திருப்பி எதிரடிப்பு செய்யக்கூடியவை. பூமி வெப்பமாவதை ஒரு குறிப்பிட்ட அளவுக்கு குறைத்து, பூமியைக் குளிரூட்டுகின்றன. மேகங்கள் உருவாதல், பனி, மழைப்பொழிவு, ஓசான் மண்டல அடர்த்தி குறைவு போன்றவற்றில் இவற்றுக்கு முக்கியப் பங்குண்டு.

Attribution science

Attribution science figures out the likelihood or severity of a particular event happening today compared to how it might have unfolded in an imaginary world that humans have not warmed. (Columbia Climate School)

கற்பித்துக் கூறும் அறிவியல்

ஒரு குறிப்பிட்ட நிகழ்வு, இன்றைய நிலையில் எவ்வாறான தாக்கங்களை, தீவிரத்தன்மையை கொண்டுள்ளது என்பதை, மனிதர்களால் வெப்பமாதல் நடக்காத கற்பனை உலகில் அந்த நிகழ்வு எவ்வாறான தாக்கங்களை கொண்டிருக்கும் என்பதை வைத்து அறிந்திட முனையும் அறிவியல் துறை.

B

Background emissions

Air pollution that is not produced locally. While total concentration is the sum of locally and non locally produced pollution, only the locally produced pollution can be locally regulated. (American meteorological Society)

பின்புல உமிழ்வு

உள்ளூர் அளவில் உருவாக்கப்படாத காற்று மாசு. மொத்த உமிழ்வின் அளவு, உள்ளூர் அளவிலும் உள்ளூரல்லாத பிற இடங்களில் உருவாகும் மாசு என்றாலும் கூட உள்ளூர் அளவில் உருவாகும் மாசினை மட்டும் தான் உள்ளூர் அளவில் கட்டுப்படுத்த முடிகிறது.

Bali action plan

A plan drawn up at the UN Climate Change Conference in Bali, in December 2007, forming part of the Bali roadmap. The action plan established a working group to define a long-term global goal for reduction of greenhouse gas emissions, and a “shared vision for long-term co-operative action” in the areas of mitigation, adaptation, finance and technology. (BBC)

பாலி செயல்திட்டம்

பாலி செயல்திட்டம் என்பது 2007ஆம் ஆண்டு டிசம்பர் இந்தோனேசியாவில் உள்ள பாலி தீவில் நடைபெற்ற ஐ.நா. காலநிலை மாற்ற மாநாட்டில் உருவாக்கப்பட்ட வழிகாட்டு வரைமுறையின் ஒரு பகுதியாகும். இந்த செயல்திட்டம் உலகத்தின் பசுமையில்ல வாயுக் குறைப்பின் நீண்ட கால இலக்கினை உருவாக்குவதற்கும் காலநிலை மாற்றத்தின் பாதிப்புகளை குறைத்தல்,

தகவமைத்தல், பொருளாதார, தொழில்நுட்ப தளங்களில் ஒரு நீண்ட கால புரிந்துணர்வு ஒத்துழைப்பினை உருவாக்குவதற்கும் ஒரு 'செயற்குழுவை' உருவாக்கியது.

Bali roadmap

A plan drawn up at the UN Climate Change Conference in Bali, in December 2007, to pave the way for an agreement at Copenhagen in 2009 on further efforts to reduce greenhouse gas emissions after the expiry of the Kyoto Protocol. The roadmap gave deadlines to two working groups, one working on the Bali action plan, and another discussing proposed emission reductions by Annex I countries after 2012. (BBC)

பாலி செல்ல வேண்டிய பாதை

2007ஆம் ஆண்டு டிசம்பர் பாலியில் நடைபெற்ற ஐ.நா. காலநிலை மாற்ற மாநாட்டில் ஒரு திட்டம் வகுக்கபடுகிறது. க்யோடோ தீர்மானம் காலாவதி-யான பின்பு 2009ஆம் ஆண்டு கோபன்ஹேகனில் ஒரு தீர்மானம் நிறைவேற்றுவதற்கான ஒரு வழிகாட்டு வரையறையாக இந்த திட்டம் செயல்படுகிறது. இது இரண்டு குழுக்களுக்கு காலவரையறையை நிர்ணயிக்கிறது. ஒன்று, பாலி செயல்திட்டத்தை உருவாக்குவது. மற்றொன்று, 2012ஆம் ஆண்டிற்குப் பிறகு அட்டவணை ஒன்றாம் நாடுகளுக்கான உமிழ்வுக் குறைப்பை முன்மொழிவ-தற்கான விவாதத்தை நிகழ்த்துவது.

Baseline/Reference

The baseline (or reference) is the state against which change is measured. A baseline period is the period relative to which anomalies are computed. The base-line concentration of a trace gas is that measured at a location not influenced by local anthropogenic emissions.

A baseline period is needed to define the observed climate with which climate change information is usually combined to create a climate scenario. When using climate model results for scenario construction, the baseline also serves as the reference period from which the modeled future change in climate is calcu-lated. (IPCC)

அடிக்கோள்/ குறிப்பு

அடிக்கோள் (அல்லது குறிப்பு) என்பது, மாற்றங்களை அளப்பதற்காக பயன்படுத்தப்படும் ஒரு அடிப்படை நிலை. அடிக்கோள் காலம் என்பது, அக்காலத்தில் நிலவிய அளவுகள்/தன்மைகளை விட எவ்வளவு ஏற்றத்தாழ்வு நிகழ்ந்துள்ளது என்பதை கண்டறிய அடிக்கோளாக கருதப்படும் காலம்.அடிக்கோளாக கருதப்படும் ஒரு வாயுவின் அளவு, மனித உமிழ்வின் தாக்கம் இல்லாத இடத்தில் எடுக்கப்பட்ட ஒன்றாக இருத்தல் வேண்டும்.

இந்த அடிக்கோள் காலம் காலநிலை ஆய்வுகளில் பெறப்படும் தகவல்களில் இருந்து காலநிலையின் தன்மையை புரிந்து கொள்ள பயன்படுகிறது. காலநிலை மாதிரிகளின் முடிவுகளில் இருந்து ஒரு காட்சயுருவாக்கத்தை கட்டமைக்கையில், இந்த அடிகோள் காலம் ஒரு அடிப்படை அளவில் இருந்து வருங்காலத்தில் நிகழப்போகும் காலநிலை மாற்ற மாதிரிகளை கட்டமைக்க உதவுகிறது.

Baseline for cuts

The year against which countries measure their target decrease of emissions. The Kyoto Protocol uses a baseline year of 1990. Some countries prefer to use later baselines. Climate change legislation in the United States, for example, uses a 2005 baseline. (BBC)

இலக்குகளுக்கான அடிக்கோள்

நாடுகள் தங்கள் உமிழ்வுகளை குறைக்க இலக்காக வைக்கும் அளவை, எந்த வருடத்தினை அடிக்-கோளாக வைத்து கணக்கிடுகிறார்களோ, அந்த வருடத்தை குறிக்கும் சொல் இது. கியோடோ நெறிமுறைகளில், 1990ஆம் ஆண்டே, அடிக்கொலாக வைக்கப்பட்டது. சில நாடுகள் இதற்கு பின்பான வருடங்களில் ஒன்றை தேர்ந்தெடுத்துள்ளன. உதாரணமாக, ஐக்கிய நாடுகளின் காலநிலை மாற்றத்திற்கான சட்டம் 2005ஐ அடிக்கோளாக கொண்டுள்ளது.

Biodiversity

The variability among living organisms from terrestrial, marine and other ecosystems. Biodiversity includes variability at the genetic, species and ecosystem levels. (IPCC)

பல்லுயிரியம்

தரைவாழ், கடல்வாழ் மற்றும் பிற சூழல் அமைப்புகளில் வாழும் உயிரினங்களிடையே உள்ள வித்தியாசங்களை குறிக்கிறது. இந்த வேறுபாடு மரபணு அளவிலோ, சிற்றின அளவிலோ அல்லது சூழல் அமைப்புகளின் அளவிலோ இருக்கும்.

Biofuel

A fuel derived from renewable, biological sources, including crops such as maize and sugar cane, and some forms of waste. (IPCC)

உயிர் எரிபொருள்

சோளம் கரும்பு போன்ற புதுப்பிக்கப்படக்கூடிய, உயிரியல் ஆதாரங்களில் இருந்தும் அது சார்ந்த கழிவுகளில் இருந்தும் எடுக்கப்படும் எரிபொருள்.

Black carbon

The soot that results from the incomplete combustion of fossil fuels, biofuels, and biomass (wood, animal dung, etc.). It is the most potent climate-warming aerosol. Unlike greenhouse gasses, which trap infrared radiation that is already in the Earth's atmosphere, these particles absorb all wavelengths of sunlight and then re-emit this energy as infrared radiation. (BBC)

கருங்கரிமம்

புதைபடிவ எரிபொருள், உயிரி எரிபொருள், மரம், விலங்குளின் சாணம் போன்ற உயிர்பொருண்மை-யின் முழுமையற்ற எரிதலால் உருவாகும் புகைக்கரி 'கருங்கரிமம்' எனப்படுகிறது. இது எளிமையாக புவிவெப்பத்தை அதிகரிக்கும் ஆற்றல் வாய்ந்த வளிமக்கரைசல். வளிமண்டலத்தில் ஏற்கனவே இருக்கின்ற அகச்சிவப்பு கதிர்களை பிடித்து வைத்துக்கொள்ளும் பிற பசுமை இல்ல வாயுக்களை போன்றில்லாது, கருங்கரிமம் சூரிய ஒளியில் அனைத்து அலைநீளத்திலும் உள்ள கதிர்களை உறிந்து, அதனை அகச்சிவப்பு கதிர்களாக மாற்றி வெளியேற்றுகிறது.

Blue carbon

The term “blue carbon” refers to the carbon stored in coastal and marine ecosystems. The so-called blue carbon ecosystems – mangroves, tidal and salt marshes, and seagrasses – are highly productive coastal ecosystems that are particularly important for their capacity to store carbon within the plants and in the sediments below. (UNESCO)

நீலக்கரிமம்

நீலக்கரிமம் என்பது கடல் மற்றும் கடற்கரைசார் சூழல் அமைப்புகளில் சேமித்து வைக்கப்பட்ட கரிமம். நீலக்கரிம சூழல் அமைப்புகள் என்று அழைக்கப்படும் அலையாத்திக் காடுகள், உவர் சதுப்பு நிலங்கள், கடல்புற்கள் போன்றவை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த அதீத உற்பத்தித் திறன் கொண்டவையாகும். இதற்கு காரணம், கரிமத்தை இங்கிருக்கும் தாவரங்கள் மற்றும் அதன் கீழுள்ள படிமங்களில் சேமித்துவைக்கும் இதன் ஆற்றல்தான்.

Blue economy

According to the World Bank, the blue economy is the “sustainable use of ocean resources for economic growth, improved livelihoods, and jobs while preserving the health of ocean ecosystem. (World Bank)

நீலப் பொருளாதாரம்

உலக வங்கியின் கூற்றுப்படி, நீலப் பொருளாதாரம் என்பது பொருளாதார வளர்ச்சி, மேம்பட்ட வாழ்வாதாரங்கள் மற்றும் வேலைகளுக்கு கடல் வளங்களை பயன்படுத்தும் அதே வேளையில், கடலின் சூழல் அமைப்புகளின் ஆரோக்கியத்தைப் பாதுகாத்து கடல் வளங்கள் நிலையாக நீடிக்கும் பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபடுவது ஆகும்.

Blue hydrogen

Blue hydrogen is hydrogen produced from natural gas with a process of steam methane reforming, where natural gas is mixed with very hot steam and a catalyst. A chemical reaction occurs creating hydrogen and carbon monoxide. Water is added to that mixture, turning the carbon monoxide into carbon dioxide and more hydrogen. If the carbon dioxide emissions are then captured and stored underground, the process is considered carbon-neutral, and the resulting hydrogen is called “blue hydrogen.” (CNBC)

நீல ஹைட்ரஜன்

இயற்கை எரிவாயுவுடன் மிகவும் வெப்பமான நீராவியும், வினையூக்கியும் சேர்க்கப்படு-ம்போது நீராவி இயற்கை வாயுவில் உள்ள மீத்தேனை உடைத்து ஹைட்ரஜனையும், கார்பன் மோனாக்சைடையும் உருவாக்குகிறது. இந்த கலவையில் மீண்டும் நீரை சேர்த்தால், கார்பன் மோனாக்சைடு அதனுடன் வினைபுரிந்து கார்பன் டையாக்ஸைடாக (அதாவது கரியமில வாயுவாக) மாறுகிறது. இதில் இன்னும் அதிகமான ஹைட்ரஜன் வெளியேற்றப்படுகிறது. இந்த முறையில் உருவாகும் கரியமில வாயுவை பிடித்து அதனை நிலத்தடியில் சேமித்தால், இந்த முறை கரிம-சமன் செய்யப்பட்ட முறையாக மாறிவிடுகிறது. இதிலிருந்து வெளிவரும் ஹைட்ரஜன் ‘நீல ஹைட்ரஜன்’ எனப்படுகிறது.



Business as usual (BAU)

A scenario used for projections of future emissions assuming no action, or no new action, is taken to mitigate the problem. Some countries are pledging not to reduce their emissions but to make reductions compared to a business as usual scenario. Their emissions, therefore, would increase but less than they would have done. (BBC)

எப்போதும் போல

பிரச்சனைகளின் தீவிரத்தை குறைக்க எந்தவொரு நடவடிக்கையும் எடுக்காமல் இருந்தால் வருங்கால-த்தில் உமிழ்வின் நிலை என்னவாக இருக்கும் என்ற ஒரு நடப்பை உணர்த்துகிறது இச்சொல். சில நாடுகள் தங்கள் உமிழ்வை குறைக்கப்போவ-தாக கூறாமல், மேற்கூறப்பட்டுள்ள எந்த செயலும் மேற்கொள்ளாத நிலையை கருத்தில் கொண்ட வருங்கால கணிப்பைவிட குறைவாக உமிழ்வதாக வாக்களித்துள்ளன. அதாவது, இப்போது உமிழப்படும் அளவை விட குறைவாக உமிழ முடியாது ஆனால், நாங்கள் எந்த நடவடிக்கையும் எடுக்காத வருங்கால நிலையை விட குறைவாக உமிழ்வோம் என்கின்றன இந்த நாடுகள்.

C

Cap and trade

An emission trading scheme whereby businesses or countries can buy or sell allowances to emit greenhouse gasses via an exchange. The volume of allowances issued adds up to the limit, or cap, imposed by the authorities. (BBC)

உமிழ்வு உச்சவரம்பும் வணிகமும்

இது ஒரு உமிழ்வு வர்த்தக திட்டம். இதில் வணிகங்களும், நாடுகளும் தங்களுக்கு நிர்ணயிக்க-ப்படுள்ள பசுமை இல்ல வாயுக்களை வெளியேற்றும் அளவினை விற்றல்-வாங்கல் முறையில் கைமாற்றிக்கொள்ள முடியும். இவ்வாறு கைமாற்றி வந்த கூடுதல் உமிழ்வு வெளியேற்ற அளவுகள், தங்களுக்கு முன்னதாக நிர்ணயிக்கப்பட்டிருந்த அளவில் கூடிக்கொள்ளும்.

Carbon budget

Like a household budget, climate science sets a carbon budget for the amount of greenhouse gases that can be 'spent' (emitted) for a given level of global warming. If we exceed this budget, global temperatures will become higher. Carbon budgets measure how much CO2 is produced by industry, homes and all other parts of the economy to calculate by how much emissions must be cut in the future. The aim is to reach net-zero emissions – striking an equal balance between the carbon released into the atmosphere and that removed from it. (World Economic Forum + ACT Climate Change Council)

கரிம நிதிநிலை

வீட்டு வரவு செலவு கணக்கைப் போல, காலநிலை அறிவியலாளர்களும், பூமி ஒரு குறிப்பிட்ட வெப்பத்தை தாண்டாமல் இருக்க மொத்தமாக எவ்வளவு பசுமை இல்ல வாயுக்களை வெளியேற்றிக்கொள்ளலாம் என்பதை குறிக்கும் வகையில் கார்பன் வரவு செலவுகளை நிர்ணயிக்கின்றனர். நிர்ணயிக்கப்பட்ட இந்த வரவு செலவுகளை மீறினால், புவியின் வெப்பம் நாம் நினைத்ததை விட அதிகமாகிவிடும். தொழிற்சாலைகள், வீடுகள் மற்றும் இதர பொருளாதார நடவடிக்கைகள் அனைத்தும் எவ்வளவு கார்பனை வெளியேற்றுகின்றன என்பதை கணக்கிட்டு, அதை எவ்வளவு குறைக்க வேண்டும் என்பதையும் நிர்ணயிக்கின்றனர். வளிமண்டலத்தில் வெளியேற்றப்பட்ட கார்பன் அளவையும், அகற்றப்பட்ட கார்பன் அளவையும் சமநிலையில் வைத்து, மனித செயல்பாட்டால் எந்தவொரு கார்பனும் உபரியாக வெளியேற்றப்படாமல் இருக்க வேண்டும் என்பதே இதன் குறிக்கோள்.

Carbon capture and storage

The collection and transport of concentrated carbon dioxide gas from large emission sources, such as power plants. The gasses are then injected into deep underground reservoirs. Carbon capture is sometimes referred to as geological sequestration. (BBC)

கரிம சேகரிப்பும் சேமிப்பும்

செறிவூட்டப்பட்ட கரியமில வாயுவை மின்னுற்பத்தி நிலையம் போன்ற மிகப்பெரிய உமிழிகளில் இருந்து சேகரித்து, வேறு இடத்திற்கு கொண்டு சென்று சேமித்தல். இந்த வாயுக்கள் நிலத்தடியில் மிக ஆழமான சேமிப்புதேக்கங்களில் நிரப்பப்படும். இது போன்ற கரிம தன்மயமாக்கள், புவிவியல் தன்மயமாக்கள் எனப்படுகிறது.



Carbon credits

Carbon credits are like points that are issued to someone for either avoiding carbon dioxide emission or absorbing some amount of CO2 back from the atmosphere. One credit is awarded for a one-tonne reduction in CO2.

The entity that has saved carbon credits can sell it and make money. The entity concerned gets a reward for not spewing or for sequestering CO2. And the buyer of the credit is basically paying a penalty for emitting or not being able to sequester CO2. (Business Standard)

கரிம புள்ளிகள்

கரிமவாயுவின் உமிழ்வை தவிர்த்த அல்லது, கரிமவாயுவை வளிமண்டலத்தில் இருந்து அகற்றிய நாடுகளை ஊக்கப்படுத்த கொடுக்கப்படும் புள்ளிகளை இது குறிக்கிறது. ஒரு டன் கரிமத்தை குறைத்தால் ஒரு புள்ளி கொடுக்கப்படுகிறது.

இவ்வாறு புள்ளிகளை சேகரித்துள்ள நிறுவனங்கள், அந்த புள்ளிகளை விற்று பணமாக்கிக் கொள்ளலாம். இந்த பணம் அந்த நிறுவனத்திற்கான வெகுமதி-யைப் போல. இந்த புள்ளியை பணம் கொடுத்து வாங்கும் நிறுவனத்திற்கு இது தண்டனையைப் போல.

Carbon dioxide (CO2)

Carbon dioxide is a gas in the Earth's atmosphere. It occurs naturally and is also a by-product of human activities such as burning fossil fuels. It is the principal greenhouse gas produced by human activity. (BBC)

கரியமில வாயு

புவியின் வளிமண்டலத்தில் உள்ள ஒரு வாயு. இது இயற்கையான உமிழ்வுகளிலும், புதைபடிம எரிபொருள் எரிப்பு போன்ற மனித செயல்பாடுகளின் பக்கவிளைவாகவும் வெளியாகின்றது மனித செயல்பாடுகளால் உருவாக்கப்படும் பசுமையில்ல வாயுக்களில் முதன்மையானது கரியமில வாயு.

Carbon dioxide (CO2) equivalent

Six greenhouse gases are limited by the Kyoto Protocol and each has a different global warming potential. The overall warming effect of this cocktail of gases is often expressed in terms of carbon dioxide equivalent - the amount of CO2 that would cause the same amount of warming. (BBC)

கரியமில நிகரி

க்யோடோ நெறிமுறையின் படி, பசுமையில்ல வாயுக்களான ஆறு வாயுக்களுக்கும் புவியை வெப்பமாக்கும் திறன் வெவ்வேறு அளவில் உள்ளது. கரியமில வாயுவின் வெப்பமாக்கும் திறனை அடிப்படையாகக் கொண்டு, பிற வாயுக்களின் வெப்பமாக்கும் திறன் எத்தனை கரியமில வெப்பமாக்கும் திறனுக்கு சமம் என்று கணக்கிடப்-படுகிறது. இவ்வாறு பதுமை இல்ல வாயுக்களின் வெப்பமாக்கும் திறனை வெளிப்படு-த்தப் பயன்படு-த்தப்படும் அளவுகோலுக்குத் தான் 'கரியமில நிகரி' என்று பெயர்.

Carbon emissions

Carbon dioxide emissions are those stemming from the burning of fossil fuels and the manufacture of cement. They include carbon dioxide produced during

கரிம உமிழ்வு

கரியமில உமிழ்வு புதைபடிம எரிபொருள் எரிப்பு, சிமண்ட் உற்பத்தி போன்றவற்றில் நடைபெறுகிறது. திட, திரவ மற்றும் வாயு

consumption of solid, liquid, and gas fuels and gas flaring. (World Bank)

நிலையில் உள்ளஎரிபொருட்களை நுகர்வதாலும் வாயு எரிப்பு போன்றவற்றாலும் கரியமில வாயு உற்பத்தியாகின்றது.

Carbon footprint

The amount of carbon emitted by an individual or organisation in a given period of time, or the amount of carbon emitted during the manufacture of a product. (BBC)

கரிம கால்தடம்

ஒரு தனிநபராலோ அல்லது ஒரு நிறுவனத்தாலோ ஒரு குறிப்பிட்ட காலத்தில் உமிழப்படும் கரிமத்தின் அளவு. அல்லது ஒரு பொருளை உற்பத்தி செய்வதற்கு உமிழப்படும் கரிம அளவு.

Carbon intensity

A unit of measure. The amount of carbon emitted by a country per unit of Gross Domestic Product. (BBC)

கரிம அடர்த்தி

ஒரு நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் ஒரு அலகிற்கு உமிழப்படும் கரிமத்தின் அளவு.

Carbon leakage

A term used to refer to the problem whereby industry relocates to countries where emission regimes are weaker, or non-existent. (BBC)

கரிம கசிவு

கரிம உமிழ்வை தணிக்கை செய்யும் அமைப்புகள் பலவீனமாக உள்ள அல்லது இல்லவே இல்லாத நாடுகளுக்கு உற்பத்தி தொழிற்சாலைகளை இடமாற்றம் செய்வது.

Carbon markets

A trading system through which countries may buy or sell units of greenhouse-gas emissions in an effort to meet their national limits on emissions, either under the Kyoto Protocol or under other agreements, such as that among member states of the European Union. (OECD)

கரிம சந்தை

இது ஒரு வர்த்தக அமைப்பு. இதில் நாடுகள் அவற்றின் பசுமை இல்ல வாயு உமிழ்வை விற்கவும், வாங்கவும் முடியும். இதை செய்வதன் மூலம் கியோடோ நெறிமுறை, ஐரோப்பிய நாடுகளின் உடன்படிக்கை போன்றவற்றில் இவை ஏற்றுக்கொண்ட இலக்கை அடைய முடியும்.

Carbon neutral

A process where there is no net release of CO2. For example, growing biomass takes CO2 out of the atmosphere, while burning it releases the gas again. The process would be carbon neutral if the amount taken out and the amount released were identical. A company or country can also achieve carbon neutrality by means of carbon offsetting. (BBC)

கரிம சார்பின்மை

புதிதாக கரியமில வாயுவை வெளியேற்றாத முறை. உதாரணமாக உயிர்பொருன்மைகளான தாவரங்கள் போன்றவற்றை வளர்ப்பதால் வளிமண்டல கரியமில வாயு உரிஞ்சப்படுகிறது. பின்னர் அவற்றை எரிக்கையில் அது மீண்டும் வெளியேறுகிறது. இதில் உரியப்பட்ட கரிம அளவும், வெளியேற்றப்பட்ட கரிமத்தின் அளவும் ஒன்றாக இருந்தால் இந்த முறை

‘கரிம சார்பற்ற’ முறையாகும். ‘கரிம ஈடுசெய்தல்’ போன்றவற்றை கையாள்வதாலும் நாடுகளும் நிறுவனங்களும் ‘கரிம சார்பற்ற’ தன்மையை அடைய முடியும்.

Carbon offsetting

A way of compensating for emissions of CO2 by participating in, or funding, efforts to take CO2 out of the atmosphere. Offsetting often involves paying another party, somewhere else, to save emissions equivalent to those produced by your activity. (BBC)

கரிம ஈடுசெய்தல்

உமிழப்பட்ட கரிம வாயுவை ஈடுகட்டும் வகையில், வளிமண்டலத்தில் உள்ள கரிமவாயுவை பிடித்து வைப்பதற்கான திட்டங்களை முன்னெடுப்பது அல்லது அத்திட்டங்களுக்கு நிதி வழங்குவது போன்ற செயல்களை இது குறிக்கிறது. இந்த ஈடுகட்டும் செயல் பெரும்பாலும் எங்கோ இருக்கும் வேறொரு தரப்பிற்கு பணத்தை வழங்கி தாம் வெளியேற்றிய அளவுக்கு ஈடான கரிம வாயுவை சேமிக்க வைப்பதாகவே இருக்கும்.

Carbon sequestration

The process of storing carbon dioxide. This can happen naturally, as growing trees and plants turn CO2 into biomass (wood, leaves, and so on). It can also refer to the capture and storage of CO2 produced by industry. See Carbon capture and storage. (BBC)

கரிம தன்மயமாக்கல்

கரிம தன்மயமாக்கல் என்பது கரியமில வாயுவை சேமித்து வைக்கும் முறை. இயற்கையாகவே மரம், செடிகள் போன்றவை வளர்ந்து உயிர்பொருண்மை-யாக மாறுகையில் இது நிகழ்கிறது. இது தவிர தொழிற்சாலைகள் உற்பத்தி செய்யும் கரியமில வாயுவை சில முறைகள் மூலம் பிடித்து சேமிக்கும் முறையையும் இது குறிப்பிடுகிறது. கரிம சேகரிப்பு மற்றும் சேமிப்பை காண்க!

Carbon sink

Any process, activity or mechanism that removes carbon from the atmosphere. The biggest carbon sinks are the world’s oceans and forests, which absorb large amounts of carbon dioxide from the Earth’s atmosphere. (BBC)

கரிம உறிஞ்சி

வளிமண்டலத்தில் உள்ள கரிமத்தை பிரித்து எடுக்கும் எந்த ஒரு செயலோ, முறையோ, இயக்கமோ ‘கரிம உறிஞ்சி’ எனப்படுகிறது. உலகின் மிகப்பெரிய கரிம உறிஞ்சிகள் காடுகளும், பெருங்கடல்களுமா-கும். இவை வளிமண்டலத்தில் இருந்து மிகப்பெரிய அளவில் கரியமில வாயுவை உறிஞ்சிக்கொள்கிறது.

Certified Emission Reduction (CER)

A greenhouse gas trading credit, under the UN Clean Development Mechanism programme. A CER may be earned by participating in emission reduction

அங்கீகரிக்கப்பட்ட உமிழ்வு குறைப்பு

ஐக்கிய நாடுகளின் சுத்தமான வளர்ச்சி முறை நடவடிக்கைகளின் கீழ் பசுமை இல்ல வாயுக்களை வர்த்தகம் செய்வதற்காக கிடைக்கும் மதிப்பு

programmes - installing green technology, or planting forests - in developing countries. Each CER is equivalent to one tonne of carbon dioxide. (BBC)

இது. வளரும் நாடுகளிலே பசுமை தொழில்நுட்பங்களை நிறுவுதல், காடுகளை வளர்த்தல் போன்ற உமிழ்வை குறைக்கும் நடவடிக்கைகளில் பங்கேற்கும் நாடுகளுக்கு அங்கீகரிக்கப்பட்ட உமிழ்வு குறைப்பு வழங்கப்படும். இது ஒவ்வொன்றும் ஒரு டன் அளவிலான கரிம வாயுவிற்கு சமமானதாக கருதப்படுகின்றது.

CFCs

The short name for chlorofluorocarbons - a family of gases that have contributed to stratospheric ozone depletion, but which are also potent greenhouse gases. Emissions of CFCs around the developed world are being phased out due to an international control agreement, the 1989 Montreal Protocol. (BBC)

குளோரோ புளோரோ கார்பன்

குளோரோ புளோரோ கார்பன் எனப்படும் ஒரு வாயுக்குழுமத்தின் சுருக்கமான பெயர். இந்த குழுமத்தில் உள்ள வாயுக்கள் வளிமண்டலத்தில் ஸ்ட்ராட்டோஸ்பியர் அடுக்கில் இருக்கும் ஓசோனின் அளவை குறைக்கின்றன. இவை முக்கியமான பசுமை இல்ல வாயுக்களாகவும் இருக்கின்றன. இந்த வாயுக்களின் உமிழ்வை 1989ஆம் ஆண்டு போடப்பட்ட 'மாண்ட்ரியல் நெறிமுறைகளின்' படி உலக வளர்ந்த நாடுகள் நிறுத்திவிட்டன.

Clean coal technology

Technology that enables coal to be burned without emitting CO2. Some systems currently being developed remove the CO2 before combustion, others remove it afterwards. Clean coal technology is unlikely to be widely available for at least a decade. (BBC)

தூய்மையான நிலக்கரி தொழில் நுட்பம்

நிலக்கரியை எரிக்கையில் அதிலிருந்து கரியமில வாயு வெளியேறாமல் எரிய வைக்கும் தொழில்நுட்பம். சில தொழில்நுட்பம் கரியமில வாயுவை எரிப்பிற்கு முன்பே பிரித்து விடுகிறது; பிறவை எரிப்பிற்கு பின்பு பிரிக்கிறது. ஆனால் இந்த தொழில்நுட்பம் குறைந்தது இன்னும் பத்தாண்டுகளுக்கு பரவலான உபயோகத்திற்கு வந்து சேராது.



Clean Development Mechanism (CDM)

A programme that enables developed countries or companies to earn credits by investing in greenhouse gas emission reduction or removal projects in developing countries. These credits can be used to offset emissions and bring the country or company below its mandatory target. (BBC)

தூய்மை வளர்ச்சி

வளர்ந்த நாடுகளையும் அங்கிருக்கும் நிறுவனங்களையும் வளரும் நாடுகளின் பசுமை இல்ல வாயுக்களின் உமிழ்வுக் குறைப்பு அல்லது உமிழ்வு நீக்க வளர்ச்சித் திட்டங்களில் முதலீடு செய்து அதற்கு சிறப்பு புள்ளிகளை வழங்கும் திட்டம். இந்த புள்ளிகள் இந்த நாடுகள் அல்லது நிறுவனங்களின் உமிழ்வு இலக்குகளை குறைத்து, வேறொரு முறையில் உமிழ்வை ஈடுகட்டுவதற்கு உதவுகிறது.

Climate action

Climate action is any policy, measure, or program that reduces greenhouse gases, builds resilience to climate change, or supports and finances those goals. Climate action is therefore enormously diverse, ranging from cities committing to more efficient building standards, companies putting a price on carbon in their investment decisions, or a coalition of companies and farmers' groups that deploys climate-smart agriculture practices. (Action Lac)

காலநிலை செயல்பாடு

பசுமையில்ல வாயுக்களை குறைப்பது, காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ளும் திறனை வளர்ப்பது, இவற்றுக்கு துணை நிற்பது அல்லது நிதி கொடுப்பது போன்றவற்றை ஊக்குவிக்கும் எந்த ஒரு கொள்கை, நடவடிக்கை, திட்டமாக இருந்தாலும் அதனை காலநிலை செயல்பாடு என்பர். உதாரணத்துக்கு நகரங்களில் வளங்களை திறமையாக கையாளும் கட்டிட தரத்தை உறுதிபடுத்துவது, நிறுவனங்களில் முதலீடு பற்றிய முடிவுகளில் கரிமத்துக்கான விலையையும் உட்படுத்துவது, நிறுவனங்களும் விவசாயக் குழுக்களுக்கிடையே கூட்டணி வைத்து காலநிலைக்கேற்ற விவசாய பழக்கங்களை பின்பற்றுவது என பல்வேறுபட்ட செயல்களும் காலநிலை செயற்பாடாக கருதப்படும்.

Climate change

A pattern of change affecting global or regional climate, as measured by yardsticks such as average temperature and rainfall, or an alteration in frequency of extreme weather conditions. This variation may be caused by both natural processes and human activity. Global warming is one aspect of climate change. (BBC)

காலநிலை மாற்றம்

உலக அளவிலும், பிராந்திய அளவிலும் காலநிலையை பாதிக்கக் கூடிய சராசரி வெப்பநிலை, மழைப்பொழிவு, அதிதீவிர வானிலை நிகழ்வுகளுக்கிடையே உள்ள நேரம் போன்றவற்றில் நிகழும் மாற்றங்கள். இந்த மாற்றங்கள் இயற்கையாகவும், மனித செயல்பாடுகளாலும் நிகழும். புவி வெப்பமயமாதல் என்பதும் இந்த மாற்றத்தின் ஒரு அம்சம் தான்.

Climate change impacts

Climate-change impacts are the consequences of climate change – both expected and realised – for natural and human systems. (Nature)

காலநிலை மாற்ற பாதிப்புகள்

காலநிலை மாற்றத்தினால் வரும் பாதிப்புகள் என்பது இயற்கை மற்றும் மனித அமைப்புகளில் காலநிலை மாற்றத்தினால் ஏற்படும் விளைவுகள். அது எதிர்பார்க்கப் படுவதாகவோ அல்லது ஏற்கனவே உணரப் படுவதாகவோ இருக்கலாம்.

Climate finance

Climate finance refers to local, national or trans-national financing—drawn from public, private and alternative sources of financing—that seeks to support mitigation and adaptation actions that will address climate change. (UNFCCC)

காலநிலை நிதி

காலநிலை மாற்றத்தின் தாக்கங்களை குறைக்கும் அல்லது அதனை தாக்குபிடிப்பதற்கான செயல்பாடுகளுக்காக பொதுமக்கள், தனியார் மற்றும் இதர வழிகளில் சேகரிக்கப்பட்ட உள்ளூர், தேசிய அளவில் அல்லது தேசம் கடந்த நிதி பங்கீட்டை காலநிலை நிதி என்கின்றனர்.

Climate justice

Justice that links development and human rights to achieve a human-centred approach to addressing climate change, safeguarding the rights of the most vulnerable people and sharing the burdens and benefits of climate change and its impacts equitably and fairly. (IPCC)

காலநிலை நீதி

காலநிலை நீதி என்பது காலநிலை மாற்றத்தின் பாதிப்புகளை கையாள்வதற்கு வளர்ச்சியையும் மனித உரிமைகளையும் நீதியின் அடிப்படையில் இணைத்து ஒரு 'மானுட மைய அணுகுமுறையினை' பயன்படுத்துவது. இது பாதிப்பிற்கு உள்ளாகும் எளிய மக்களின் உரிமைகளை உள்ளடக்கியதாகவும்; காலநிலை மாற்றத்தின் பயன்களையும் பாதிப்புகளையும் அனைவருக்கும் சமமாக, நியாயமான முறையில் பிரிப்பதாகவும் இருக்க வேண்டும்.

Climate Technology Centre and Network (CTCN)

The CTCN is the implementation arm of the Technology Mechanism of the United Nations Framework Convention on Climate Change, and is hosted by the UN Environment Programme. The Centre promotes the accelerated transfer of environmentally sound technologies for low carbon and climate resilient development at the request of developing countries. The CTC provides technology solutions, capacity building and advice on policy, legal and regulatory frameworks tailored to the needs of

காலநிலை தொழில் மையமும் பிணையமும்

இது ஐநாவின் சூழல் திட்டத்தால் வழங்கப்படும், ஐநா காலநிலை மாற்றத்துக்கான வரையறை மாநாட்டின் தொழில்நுட்ப முறைகளை செயல்படுத்தும் ஒரு அங்கம். இது கரிம அளவை குறைக்க சூழலுக்கு தீங்கற்ற தொழில்நுட்பத்திற்கு விரைந்து மாறுவதை மற்றும் வளரும் நாடுகளின் தேவைக்கேற்ப காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ளும் வகையிலான வளர்ச்சியையும் ஊக்குவிக்கிறது. உலக அளவில் இருக்கும் தொழில்நுட்ப நிருவனங்ககள், கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றில்

individual countries by harnessing the expertise of a global network of technology companies and institutions. (Climate Technology Centre and Network)

இருக்கும் நிபுணர்களைக் கொண்டு நாடுகளுக்கு தேவைப்படும் தொழில்நுட்பங்கள், திறன் மேம்பாடு, கொள்கை, சட்டம், ஒழுங்குப்படுத்தும் வரையறை போன்றவற்றுக்கான அறிவுரை ஆகியவற்றை தனிப்பட்ட அளவில் வழங்குகிறது.

Conferences of the Parties (COP)

The Conference of Parties, known as COP, is the decision-making body responsible for monitoring and reviewing the implementation of the United Nations Framework Convention on Climate Change. It brings together the 197 nations and territories – called Parties – that have signed on to the Framework Convention. The COP has met annually since 1995. (WMO)

காலநிலை மாநாடு

ஐக்கிய நாடுகளின் காலநிலை மாற்றத்துக்கான வரையறை மாநாட்டின் (UNFCCC United Nations Framework Convention on Climate Change) முடிவுகளை எடுப்பதற்கும் அவற்றின் அமலாக்கத்தினை கண்காணிப்பதற்கும் விமர்சிப்பதற்கும் உருவாக்கப்பட்ட ஒரு அமைப்பு. மாநாட்டின் வரையறையை ஏற்று கையெழுத்திட்ட 197 நாடுகள் மற்றும் பிராந்தியங்கள் இதில் அங்கம் வகிக்கின்றன. 1995இல் இருந்து வருடம் ஒருமுறை கூடுகின்றனர்.

Common but Differentiated responsibilities (CBDR)

Common but differentiated responsibility (sometimes with the addition of the phrase 'and respective capacities') is a principle of international law which means that different countries have different capabilities and responsibilities to address cross-border environmental issues such as climate change.

It balances:
The need for all states to take individual responsibility for environmental destruction and its mitigation **with...**
The recognition that states aren't equally responsible for the problem nor equally capable of responding to it. (Oxford Climate Society)

பொதுவான ஆனால் வேறுபாடுகளுடைய பொறுப்புகள்

'பொதுவான ஆனால் வேறுபாடுகளுடைய பொறுப்புகள்' என்பது காலநிலை மாற்ற ஒப்பந்தங்கள் மற்றும் சர்வதேச சட்டங்களில் பயன்படுத்தப்படும் ஒரு கொள்கை. இதன் அடிப்படை சர்வதேச அளவில் நிகழும் காலநிலை மாற்றத்தின் விளைவுகளை எதிர்கொள்வதற்கு ஒவ்வொரு நாட்டிற்கும் வேறுபட்ட திறன்களும் பொறுப்புகளும் உள்ளன என்பதை நிறுவுவது.

அதாவது காலநிலை மாற்றத்தையும் அதன் சூழல் பாதிப்புகளையும் எதிர்கொள்ள ஒவ்வொரு நாடும் தவறாமல் பங்களிக்க வேண்டும். அதே நேரம் எல்லா நாடுகளும் ஒரே அளவில் இந்த காலநிலை மாற்றத்திற்கு காரணம் இல்லை. அதனால் அதை எதிர்கொள்ளும் பொறுப்புகளும் ஒரே அளவில் இருக்க முடியாது, அதற்கான திறன்களும் எல்லா நாடுகளுக்கும் ஒரே அளவில் இருக்க முடியாது என்பதை ஏற்றுக்கொள்வது.

Convention on Biological Diversity

The Convention on Biological Diversity (CBD) is the international legal instrument for "the conservation of biological diversity, the sustainable use of its components and the fair and equitable sharing of the benefits arising out of the utilization of genetic resources" that has been ratified by 196 nations. (United Nations)

பல்லுயிரிய மாநாடு

பல்லுயிரிய மாநாடு என்பது, "உயிர் பன்மயத்தை பாதுகாப்பது, அவற்றை கூறுகளை வளங்குன்றாமல் பயன்படுத்துவது மற்றும் அவற்றின் மரபணு வளத்தில் இருந்து கிடைக்கும் நன்மைகளை நியாயமான, சமமான முறையில் பங்கிடுவது' என 196 நாடுகளால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒத்திசைவை உறுதிப்படுத்தும் சர்வதேச அளவிலான சட்டக்கருவி.

Country in transition

Broadly speaking, any ex-Soviet bloc state. At the time the Kyoto Protocol was adopted in 1997, these countries were on the path from a Communist planned economy to a market economy. Many of them would now be categorised as market economies. Countries in transition to a market economy are grouped with industrialised countries in Annex I of the Kyoto Protocol, so they have emission reduction commitments to meet in the 2008-2012 period. In some cases their industrial base collapsed to such a degree in the early 1990s that they will have no difficulty meeting these commitments. (BBC)

மாறிக்கொண்டிருக்கும் நாடுகள்

முன்னாள் சோவியத் ஒன்றியத்திலும் சார்பில் இருந்த நாடுகள். 1997இல் க்யோடோ நெறிமுறை ஏற்கப்பட்ட சமயத்தில் இந்த நாடுகள் 'கம்யூனிச திட்டமிட்ட' பொருளாதார அமைப்பில் இருந்து சந்தை பொருளாதார அமைப்பிற்கு மாறிக்கொண்டிருந்தது. தற்போது இதில் பல நாடுகள் சந்தை பொருளாதாரத்தை ஏற்ற நாடுகளாக அறிவிக்கப்பட்டு விட்டன. இந்த நாடுகள் அட்டவணை ஒன்றில் உள்ள தொழில்மயப்பட்ட நாடுகளுடன் இணைத்து பார்க்கப்பட்டது. அதனால் அதற்கு 2008 முதல் 2012 ஆம் ஆண்டிற்குள் அடைய வேண்டிய உமிழ்வுக் குறைப்பு இலக்குகளும் உண்டு. சில நாடுகளுக்கு 1990களில் ஏற்பட்ட தொழில் அடிப்படைத் தகர்ப்பு, மேற்சொன்ன இலக்குகளை எளிதாக அடைய வழிவகுத்து கொடுத்தது.

D

Dangerous climate change

A term referring to severe climate change that will have a negative effect on societies, economies, and the environment as a whole. The phrase was introduced by the 1992 UN Framework Convention on Climate Change, which aims to prevent "dangerous" human interference with the climate system. (BBC)

ஆபத்தான காலநிலை மாற்றம்

மிக தீவிரமான காலநிலை மாற்றத்தினால் ஒட்டுமொத்தமாக சமூகம், பொருளாதாரம், சுற்றுசூழல் என அனைத்தும் எதிர்மறையாக பாதிப்படைவதை குறிக்கும் பதம். இது 1992ஆம் ஆண்டு ஐ. நா. காலநிலை மாற்றத்துக்கான வரையறை மாநாட்டில் அறிமுகம் செய்யப்பட்ட பதம். இதன் நோக்கம் காலநிலை அமைப்புகளை நேரடியாக பாதிக்கும் ஆபத்தான மனித தலையீடு-களை தடுப்பதும் தவிர்ப்பதும் ஆகும்.

Decarbonisation

The term decarbonization literally means the reduction of carbon. Precisely meant is the conversion to an economic system that sustainably reduces and compensates the emissions of carbon dioxide (CO2). The long-term goal is to create a CO2-free global economy.

It also refers to measures through which a business sector, or an entity – a government, an organisation – reduces its carbon footprint, primarily its greenhouse gas emissions, carbon dioxide (CO2) and methane (CH4), in order to reduce its impact on the climate. (Engie + Volkswagen)

கரிமக்குறைப்பு

கரிம அளவை குறைப்பதையே இச்சொல் குறிக்கிறது. துல்லியமாக கூறவேண்டுமெனில், கரிம அளவை ஒரு பொருளாதார அமைப்பாக மாற்றி, அதன் மூலம் நிலைத்த வழியில் கரிமவாயு உமிழ்வை குறைப்பதும் ஈடு செய்வதும் போன்ற-வற்றை இச்சொல் குறிக்கிறது. இதன் நீண்ட கால இலட்சியம், உலக பொருளாதாரத்தை கரிமவாயு அற்றதாக மாற்றுவதே.

ஒரு வணிக நிறுவனமோ, அரசு அல்லது பிற அமைப்புகளோ எந்த அளவு தனது கரிம கால்தடத்தினை குறைக்க வேண்டும் என்பதையும் இது குறிக்கிறது. அடிப்படையில் இது பசுமை இல்ல வாயுக்களான கரியமில வாயு மற்றும் மீத்தேன் போன்றவற்றின் உமிழ்வினால் காலநிலை பாதிக்க-ப்படுவதை குறைப்பது.

Deforestation

The permanent removal of standing forests that can lead to significant levels of carbon dioxide emissions. (BBC)

காடழிப்பு

வளர்ந்து நிற்கும் காட்டினை நிரந்தரமாக அழித்தொழிப்பது. இது குறிப்பிடத்தக்க அளவிற்கு கரியமில வாயு உமிழ்விற்கு காரணமாகிறது.

Deglaciation

Deglaciation refers to the retreat or melting of ice sheets and glaciers. Glaciers retreat when ice mass is lost through the melting of ice or through sublimation, the process by which ice evaporates. Several factors impact the rate of deglaciation. A rise in carbon dioxide levels in the atmosphere results in an increase in global temperatures. This warming is considered a primary cause of deglaciation in the 21st century. (National Geographic)

பனிப்பாறை உருகுதல்

பனியாறுகள் பின்வாங்குவதையும், உருகுவதையும் இச்சொல் குறிக்கிறது. உருகுவதாலும், ஆவியாவதாலும் பனிக்கட்டிகள் குறைவதால் பனியாறு பின்வாங்குகின்றன. வளிமண்டலத்தில் கரிமவாயுவின் அளவு அதிகமாவதால் புவி வெப்பம் அதிகரிக்கின்றது. இந்த வெப்பமாதல் நிகழ்வே 21ஆம் நூற்றாண்டில் பனி உருகுவதற்கு முதன்மை காரணமாக உள்ளது.

Desalination

Desalination refers to the removal of the excess salt or other minerals from water, such as seawater, to obtain freshwater suitable for irrigation or human consumption. (Science Direct)

உப்புநீக்கம்

கடல்நீர் போன்ற அதிகமான உப்பும் பிற தனிமங்களும் இருக்கும் நீரில் இருந்து அவற்றை பிரித்து எடுத்து, பாசனத்திற்கும் பிற மனித பயன்பாடுகளுக்கும் பொருத்தமான நன்னீரை உருவாக்குவது.

Desertification

Desertification is the degradation of land in arid, semi-arid and dry sub-humid areas. It is caused primarily by human activities and climatic variations. (United Nations)

பாலைவனமாதல்

வறட்சி, மித வறட்சிப் பிரதேசங்கள் மற்றும் ஈரப்பதம் குறைந்த இடங்களிலும் உள்ள நிலத்தின் தன்மை குறைதல். இது அடிப்படையில் மனித செயல்பாடுகளாலும் காலநிலை மாற்றங்களினாலும் நிகழும்.

Disaster

Severe alterations in the normal functioning of a community or a society due to hazardous physical events interacting with vulnerable social conditions, leading to widespread adverse human, material, economic, or environmental effects that require immediate emergency response to satisfy critical human needs and that may require external support for recovery. (IPCC)

பேரிடர்

ஒரு சமூகத்தின் இயல்பான செயல்பாடுகளை மிகவும் தீவிரமாக மாற்றக்கூடிய ஆபத்தான நிகழ்வுகள் 'பேரிடர்கள்' எனப்படுகிறது. இது சமூக நிலைமைகளையும், பெரிய அளவில் மனித உயிர், உடைமை, பொருளாதார மற்றும் சூழல் பாதிப்புகளை ஏற்படுத்தக் கூடியது. இந்த நேரங்களில் மனித தேவைகளை நிறைவேற்ற மிக விரைவான அவசரகால உதவிகள் தேவைப்படுகின்றன. இதில் இருந்து மீண்டுவர வெளியில் இருந்து வரும் உதவிகளும் முக்கியமானது.

Disaster management

Social processes for designing, implementing, and evaluating strategies, policies, and measures that promote and improve disaster preparedness, response, and recovery practices at different organizational and societal levels. (IPCC)

பேரிடர் மேலாண்மை

பல்வேறு நிறுவனங்கள் மற்றும் சமூக அளவில் பேரிடர்களை சந்திக்க தயாராதல், வினையாற்றுதல், மீண்டெலுதல் போன்றவற்றை மேம்படுத்த வடிவமைப்பு, செயல்படுத்துதல், மற்றும் மதிப்பீடு போன்றவற்றை உருவாக்கும் சமூக செயல்முறைகள் 'பேரிடர் மேலாண்மை' எனப்படுகிறது.

Disaster Risk Management (DRM)

Processes for designing, implementing, and evaluating strategies, policies, and measures to improve the understanding of disaster risk, foster disaster risk reduction and transfer, and promote continuous improvement in disaster preparedness, response, and recovery practices, with the explicit purpose of increasing human security, well-being, quality of life, and sustainable development. (IPCC)

பேரிடர் அபாய மேலாண்மை

பேரிடர் அபாய மேலாண்மை என்பது மனிதர்களின் பாதுகாப்பு, நலன், வாழ்வின் தரம், வளங்குன்றா வளர்ச்சி ஆகியவற்றை கருத்தி கொண்டு பேரிடரின் அபாயத்தை புரிந்து கொள்ள, குறைக்க, பரிமாற்றம் செய்ய மற்றும் பேரிடரை சந்திப்பதற்கு தயார்நிலையில் இருக்க, அதற்காக செயலாற்ற, மீண்டெழ தேவைப்படும் வடிவமைப்பு, செயற்படுத்துகை மற்றும் உத்திகள், கொள்கைகள், நடவடிக்கைகள் ஆகியவற்றை மதிப்பிடுவது போன்ற செயல்முறைகள் ஆகும்.

Disaster Risk Reduction (DRR)

Denotes both a policy goal or objective, and the strategic and instrumental measures employed for anticipating future disaster risk; reducing existing exposure, hazard, or vulnerability; and improving resilience. (IPCC)

பேரிடர் அபாய குறைப்பு

கொள்கை இலக்குகள் அல்லது நோக்கங்கள் மற்றும் வருங்கால பேரிடர் அபாயத்தை எதிர்கொள்ள செயல்படுத்தப்படும் உத்திகள், தேவையான நடவடிக்கைகள் 'பேரிடர் அபாய குறைப்பு' எனப்படும். இது நிலவும் வெளிப்பாடு, ஆபத்து, எளிதில் பாதிக்கப்படக்கூடிய தன்மை ஆகியவற்றை

குறைக்கவும் மற்றும் எதிர்கொள்ளும் திறனை அதிகரிக்கவும் உதவும்.

E

Early warning system

The set of technical, financial and institutional capacities needed to generate and disseminate timely and meaningful warning information to enable individuals, communities and organizations threatened by a hazard to prepare to act promptly and appropriately to reduce the possibility of harm or loss. (IPCC)

முன்னெச்சரிக்கை அமைப்பு

ஒரு ஆபத்தினால் பாதிக்கப்படும் நிலையில் இருக்கும் மக்களுக்கு, சமூகங்களுக்கு, நிறுவனங்களுக்கு அந்த ஆபத்து ஏற்படப் போகும் முன்பு; அவர்கள் விரைந்து செயல்பட்டு, இழப்புகளை குறைப்பதற்கான அல்லது தடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள எச்சரிக்கை செய்யும், தொழில்நுட்ப பொருளாதார மற்றும் அமைப்பு ரீதியிலான முன்எச்சரிக்கைக் கொள்திறன்.

Ecosystem

An ecosystem is a functional unit consisting of living organisms, their non-living environment, and the interactions within and between them. (IPCC)

சூழலமைப்பு

சூழலமைப்பு என்பது வாழும் உயிரினங்களுக்கும், உயிரற்ற அதன் சுற்றுப்புறச் சூழலுக்கும் இடையில் நடைபெறும் தொடர்புகளை உள்ளடக்கிய ஒரு இயங்கும் அடிப்படை அலகு.

Ecosystem-based adaptation

The use of biodiversity and ecosystem services as part of an overall adaptation strategy to help people to adapt to the adverse effects of climate change. Ecosystem-based adaptation uses the range of opportunities for the sustainable management,

சூழல்சார் தகவமைப்பு

ஒரு இடத்தில் இருக்கும் உயிர்பன்மையம் மற்றும் சூழல் அமைப்புகள் பல்வேறு சேவைகளை வழங்கும். இதனை அடிப்படையாய் வைத்து ஒரு முழுமையான தகவமைப்பு திட்டத்தை காலநிலை மாற்றத்தின் பாதிப்புகளில் இருந்து தற்காத்துக்

conservation, and restoration of ecosystems to provide services that enable people to adapt to the impacts of climate change. It aims to maintain and increase the resilience and reduce the vulnerability of ecosystems and people in the face of the adverse effects of climate change. (IPCC)

கொள்ள உருவாக்குவது. இது சூழல் அமைப்புகளின் வளங்குன்றா மேலாண்மை, பாதுகாப்பு மற்றும் மறுசீரமைப்பு போன்றவற்றில் தமது வளங்களையும் வாய்ப்புகளையும் செலவழித்து காலநிலை மாற்ற பாதிப்புகளில் இருந்து மக்களை காக்க வழிவகுக்கும். இது சூழல் அமைப்புகள் மற்றும் மக்கள் காலநிலை மாற்ற பாதிப்புகளில் இருந்து மீண்டெழுவதற்கும், பாதிப்படையும் தன்மையை குறைப்பதற்கும் ஏற்ற திட்டங்களை வகுப்பதை குறிக்கோளாக கொண்டது.

El Niño-Southern Oscillation (ENSO)

The term El Niño was initially used to describe a warm-water current that periodically flows along the coast of Ecuador and Peru, disrupting the local fishery. It has since become identified with a basin-wide warming of the tropical Pacific Ocean east of the dateline. This oceanic event is associated with a fluctuation of a globalscale tropical and sub-tropical surface pressure pattern called the Southern Oscillation. This coupled atmosphere– ocean phenomenon, with preferred time scales of two to about seven years, is known as the El Niño-Southern Oscillation (ENSO). It is often measured by the surface pressure anomaly difference between Tahiti and Darwin or the sea surface temperatures in the central and eastern equatorial Pacific.

During an ENSO event, the prevailing trade winds weaken, reducing upwelling and altering ocean currents such that the sea surface temperatures warm, further weakening the trade winds. This event has a great impact on the wind, sea surface temperature and precipitation patterns in the tropical Pacific. It has climatic effects throughout the Pacific region and in many other parts of the world, through global teleconnections. The cold phase of ENSO is called La Niña. (IPCC)

எல் நீனோ-தெற்கத்திய அலைவு

‘எல்-நினோ’ என்பது துவக்கத்தில், உள்ளூர் மீன்பிடி தொழிலை பாதிக்கும் வண்ணம், ஈக்குவடார் மற்றும் பெருவின் கடற்கரையோரம் ஓடும் ஒரு வெப்பநீரோட்டத்தைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டது. பின்பு இது பன்னாட்டு நாள் கோட்டிற்கு கிழக்கே, பசிபிக் பெருங்கடலின் வெப்பமண்டல பிரதேசத்தில் ஏற்படும் வெப்பமயமாதலை குறிக்கப் பயன்படுகிறது. இந்த பெருங்கடல் நிகழ்வு உலக அளவில் வெப்பமண்டலம் மற்றும் துனைவெப்ப மண்டலங்களுக்கு இடையில் நடைபெரும் மேற்பரப்பு காற்றழுத்த வேறுபாட்டு நிகழ்வான ‘தெற்கத்திய அலைவு’டன் தொடர்புகொண்டது. வளிமண்டலம் மற்றும் பெருங்கடல் என இரண்டு தளங்களில், இரண்டிலிருந்து ஏழு வருடங்கள் வரை நிகழும், இந்த நிகழ்வு ‘எல் நீனோ-தெற்கத்திய அலைவு’ (ENSO) எனப்படுகிறது. இது பொதுவாக தஹிதி தீவுகள் மற்றும் ஆஸ்திரேலியாவின் டார்வின் நகருக்கு இடையில் இருக்கும் மேற்பரப்பு காற்றழுத்த வேறுபாட்டினை அளவிடுவதன் மூலமோ அல்லது மத்திய மற்றும் கிழக்கு வெப்பமண்டல பசிபிக் பெருங்கடலின் மேற்பரப்பு வெப்பநிலையை அளவிடுவதன் மூலமோ கணக்கிடப்படுகிறது.

ENSO நிகழும் போது வடமேற்கு மற்றும் தென்மேற்கு நோக்கி வீசும் ‘தடக்காற்றினை’ செயலிழக்க



செய்து கடலின் மேற்பரப்பை அமைதியாக்கி, நீரோட்டங்களை திசைமாற்றுகிறது. இது வெப்பநிலையை மேழும் கூட்டுகிறது; மீண்டும் தடக்காற்றினை மேழும் செயலிழக்க செய்கிறது. இந்த நிகழ்வு பருவக்காற்றுகள், கடல் பரப்பு வெப்பநிலை, வெப்பமண்டல பசிபிக் பிரதேசத்தின் மழைப்பொழிவு என பலவற்றை பாதிக்கிறது. உலக அளவில் இருக்கும் புவியியல் தொடர்புகளின் மூலம் இந்த நிகழ்வின் தாக்கம் பசிபிக்கிலும் மற்றும் உலகின் பிற இடங்களிலும் காலநிலையை பாதிக்கிறது. எல்-நினோவின் குளிர் நிலைக்கு லா-நினா என்று பெயர்.

Emergent risks

A risk that arises from the interaction of phenomena in a complex system, for example, the risk caused when geographic shifts in human population in response to climate change lead to increased vulnerability and exposure of populations in the receiving region. (IPCC)

உருவாகும் மறையிடர்

பல்வேறு அடுக்குகள் கொண்ட சிக்கலான ஒரு அமைப்பில் இரண்டு நிகழ்வுகள் மோதிக் கொள்வதனால் உருவாகும் புதிய இடர்கள். உதாரணமாக காலநிலை மாற்றத்தினால் நடைபெறும் பூகோள மக்கட்தொகை இடப்பெயர்வு, அவர்கள் சென்று சேரும் இடத்தில் இருக்கும் மக்களுக்கு பாதிப்பாக இடராக அமையும்.

Emission inventory

An emissions inventory is a database that lists, by source, the amount of air pollutants discharged into the atmosphere during a year or other time period. (EPA)

உமிழ்வு விவரப்பட்டியல்

உமிழ்வு விவரப்பட்டியல் என்பது ஒரு வருடத்திலோ அல்லது குறிப்பிட்ட கால அளவிலோ வளிமண்டலத்தில் வெளியேற்றப்படும் காற்று மாசின் அளவையும், அதன் மூலத்தையும் பட்டியலிட்டு வைத்திருக்கும் ஒரு தகவல்பட்டியல்.

Emission scenario

A plausible representation of the future development of emissions of substances that are potentially radiatively active (e.g., greenhouse gases, aerosols) based on a coherent and internally consistent set of assumptions about driving forces (such as demographic and socioeconomic development, technological change) and their key relationships. Concentration scenarios, derived from emission scenarios, are used as input to a climate model to compute climate projections. (IPCC)

உமிழ்வு காட்சி

உமிழ்வு காட்சி என்பது நிலையான மற்றும் ஒத்திசைவான அனுமானங்களின் மூலம் வருங்காலத்தில் உமிழ்வில் இருக்கும் கதிரியக்க தன்மையதான பொருட்களும் (பசுமைஇல்ல வாயுக்கள், வளிமக்கரைசல் போன்றவை) அதனை அதிகரிக்கச் செய்திடும் காரணிகளும் (மக்கள்தொகை, சமூக பொருளாதார வளர்ச்சி, தொழில்நுட்ப மாற்றங்கள் போன்றவை) அதற்கு இடையிலான உறவுகளும் எவ்வாறு இருக்கும் என்ற அடிப்படையில் கட்டமைக்கப்பட்ட ஒரு நம்பத்தகுந்த

வருங்கால உருவகம். இது போன்ற உமிழ்வு உருவாக்கங்களின் துணையுடன், அதனை உள்ளீடாக வைத்து தான் காலநிலை கணிப்புகளை செய்ய காலநிலை மாதிரிகள் உருவாக்கப்படுகின்றன.

Emissions trading

A market-based instrument aiming at meeting a mitigation objective in an efficient way. A cap on GHG emissions is divided in tradeable emission permits that are allocated by a combination of auctioning and handing out free allowances to entities within the jurisdiction of the trading scheme. Entities need to surrender emission permits equal to the amount of their emissions (e.g., tonnes of CO2). An entity may sell excess permits to entities that can avoid the same amount of emissions in a cheaper way. Trading schemes may occur at the intracompany, domestic, or international level (e.g., the flexibility mechanisms under the Kyoto Protocol and the EUETS) and may apply to carbon dioxide (CO2), other greenhouse gases (GHGs), or other substances. (IPCC)

உமிழ்வு வணிகம்

இது திறமையான முறையில் உமிழ்வை குறைக்கும் நோக்கில் சந்தை சார்ந்து உருவாக்கப்பட்ட ஒரு பொருளாதார திட்டம். பசுமை இல்ல வாயுக்கள் உமிழ்வில் போடப்பட்ட உச்சவரம்பை வர்த்தகம் செய்யத்தக்க அனுமதிச்சீட்டுகளாக மாற்றி, இந்த வர்த்தக வரம்பிற்கு உட்பட்ட நிறுவனங்களுக்கும் அமைப்புகளுக்கும் ஏலம் மூலமாகவோ, அல்லது இலவச சலுகையாகவோ கொடுப்பது. எந்த ஒரு நிறுவனமும் தனது உமிழ்வின் அளவிற்கு (எ.கா. டன்கள் கரியமில வாயு) ஏற்ப அனுமதிச்சீட்டுகளை சமர்ப்பிக்க வேண்டும். தனது உமிழ்விற்கு அதிகமாக உள்ள அனுமதியினை ஒரு நிறுவனம் இன்னொரு நிறுவனத்திற்கு விற்கலாம். இது போன்ற வர்த்தகம் நிறுவனங்கள் அல்லது தொழிற்சாலை அளவிலோ, உள்நாட்டு அல்லது சர்வதேச அளவிலோ நடைபெறலாம். கரியமில வாயு, பிற பசுமை இல்ல வாயுக்கள் அல்லது பிற பொருட்கள் இது போன்ற வர்த்தகம் செய்யப்படுகிறது.

Emission Trading Scheme (ETS)

A scheme set up to allow the trading of emissions permits between business and/or countries as part of a cap and trade approach to limiting greenhouse gas emissions. The best-developed example is the EU's trading scheme, launched in 2005. See Cap and trade. (BBC)

உமிழ்வு வணிகத்திட்டம்

உமிழ்வு உச்சவரம்பு மற்றும் வணிக திட்டத்தின் ஒரு பகுதியாக தொழில் நிறுவனங்களுக்கு இடையிலும் நாடுகளுக்கு இடையிலும் உமிழ்வு அனுமதிச்சீட்டுகளை வர்த்தகம் செய்ய அமைக்கப் படும் தளம். 2005ஆம் ஆண்டு நிறுவப்பட்ட, ஐரோப்பிய யூனியன் வணிகத்திட்டம் இதற்கு ஒரு நல்ல எடுத்துக்காட்டு. பார்க்க: உமிழ்வு உச்சவரம்பு மற்றும் வர்த்தகம்

Energy access

Access to clean, reliable and affordable energy services for cooking and heating, lighting, communications and productive uses. (IPCC)

ஆற்றல் பெறும் வாய்ப்பு

உணவு சமைத்தல் மற்றும் வெப்பம், வெளிச்சம், தொலைதொடர்பு, இன்ன பிற ஆக்கப்பூர்வமான பயன்பாடுகளுக்கு சுத்தமான, நீடித்து நிலைக்கக்கூடிய மற்றும் மலிவான ஆற்றல் பெறுவதற்கு உள்ள வாய்ப்பு.

Energy security

The goal of a given country, or the global community as a whole, to maintain an adequate, stable and predictable energy supply. Measures encompass safeguarding the sufficiency of energy resources to meet national energy demand at competitive and stable prices and the resilience of the energy supply; enabling development and deployment of technologies; building sufficient infrastructure to generate, store and transmit energy supplies and ensuring enforceable contracts of delivery. (IPCC)

ஆற்றல் பாதுகாப்பு

குறிப்பிட்ட நாடுகளிலும், உலகம் முழுவதிலும் உள்ள சமூகங்களின் குறிக்கோள் என்பது தேவையான அளவிற்கு நிலைத்த கணிக்கக்கூடிய ஆற்றலை பெறுவது தான். தேசிய அளவில் ஏற்படும் ஆற்றல் தேவையை அதன் நிலையான, சரியான விலையில் பூர்த்தி செய்ய அதற்கான ஆதாரமூலங்களை பாதுகாப்பது; அதற்கான தொழில்நுட்பங்களை உருவாக்குவது, நிலைநிறுத்துவது; அவற்றின் உருவாக்கம், சேமிப்பு, பகிர்மானம் முதலியவற்றிற்கான உள்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குவது; ஒப்பந்தங்களை நிறைவேற்றுவது போன்ற நடவடிக்கைகள் தான் ஆற்றல் பாதுகாப்பு நடவடிக்கைகள்.

Extreme weather event

An extreme weather event is an event that is rare at a particular place and time of year. Definitions of rare vary, but an extreme weather event would normally be as rare as or rarer than the 10th or 90th percentile of a probability density function estimated from observations. By definition, the characteristics of what is called extreme weather may vary from place to place in an absolute sense. When a pattern of extreme weather persists for some time, such as a season, it may be classed as an extreme climate event, especially if it yields an average or total that is itself extreme (e.g., drought or heavy rainfall over a season). (IPCC)

தீவிர வானிலை நிகழ்வு

குறிப்பிட்ட இடத்தில், வருடத்தின் குறிப்பிட்ட அந்த காலத்தில் மிகவும் அரிதான ஒரு வானிலை நிகழ்வு நடைபெறுவது. அரிது என்பதன் விளக்கம் பல்வேறு வகைகளில் வழங்கப்படும். ஆனால் தீவிர வானிலை நிகழ்வில் அதன் அரிய தன்மை நிகழ்வு அடர்சார்பு வரைபடத்தின் ஓரத்தில் நிலைப்பெறும் 10 அல்லது 90 சதவிகிதமாக இருக்கும். அறுதியாக வரையறுக்கையில் தீவிர வானிலை என்பதன் தன்மையும் அளவும் இடத்திற்கு இடம் மாறுபடும். இது போன்ற தீவிர வானிலை நிகழ்வுகள் குறிப்பிட்ட காலத்திற்கு மேல் (உதாரணமாக ஒரு பருவகாலத்திற்கு) நிலைபெறுகிறது எனில் அதனை தீவிர காலநிலை நிகழ்வு என்கிறோம். குறிப்பாக அதன் சராசரியோ, அதன் மொத்த மதிப்போ இயல்பான நிலையில் இருந்து தீவிரமாக இருக்கையில். (உதாரணமாக ஒரு பருவகாலத்திற்கு நிலைபெறும் வறட்சி அல்லது கனமழை)

EU burden-sharing agreement

A political agreement that was reached to help the EU reach its emission reduction targets under the Kyoto Protocol (a reduction of 8% during the period 2008-2012, on average, compared with 1990 levels). The 1998 agreement divided the burden unequally amongst member states, taking into account national

ஐரோப்பிய ஐக்கியம் சுமை பகிரும் ஒப்பந்தம்

க்யோடோ நெறிமுறைகளின் படி தனது பசுமை இல்ல வாயுக்களின் உமிழ்வை குறைக்கும் இலக்குகளை எட்ட ஐரோப்பிய யூனியனில் அதன் உறுப்பு நாடுகளிடையே போடப்பட்ட ஒரு அரசியல் ஒப்பந்தம். 1998இல் போடப்பட்ட

conditions, including greenhouse gas emissions at the time, the opportunity for reducing them, and countries' levels of economic development. (BBC)

இந்த ஒப்பந்தம் அதன் உறுப்பு நாடுகளுக்கு இடையிலாக இந்த உமிழ்வு குறைப்பு சுமைகளை அந்தந்த நாடுகளின் நிலை, தற்போதைய உமிழ்வு, அதை குறைப்பதற்கான வாய்ப்புகள், மற்றும் அந்த நாடுகளின் பொருளாதார முன்னேற்றம் போன்றவற்றினை கருத்தில் கொண்டு சமமற்ற முறையில் பிரிக்கிறது. இது அந்த நாடுகளின் தன்மைக்கேற்ப உமிழ்வுக் குறைப்பு இலக்குகளையும் சுமைகளையும் தருகிறது.

Extinction

Species are extinct if there are no living examples left. Extinction happens if a species fails to adapt to changes in its environment. Anthropogenic climate change is recognized as a major threat to global biodiversity, one that may lead to the extinction of thousands of species over the next 100 years. (Royal Society Publishing)

அற்றுப்போதல்

ஒரு உயிரினம் அதன் இனத்தில் ஒன்று கூட இல்லாமல் அழிந்து போவது அற்றுப்போதல் எனப்படுகிறது. இது ஒரு உயிரினம் சுற்றுசூழலில் ஏற்படும் மாறுதல்களுக்கு தக்கவாறு தகவமைத்துக் கொள்ளாமல் இருக்கையில் நிகழ்கிறது. மனித செயல்பாடுகளால் நிகழும் காலநிலை மாற்றம் அடுத்த நூறு வருடங்களில் ஆயிரக்கணக்கான உயிரினங்களை அற்றுப்போகச் செய்யும், உலக உயிர்பன்மையத்துகான பெரிய அச்சுறுத்தலாக உள்ளது.

F

FAME

The Faster Adoption and Manufacturing of Electric Vehicles (FAME) scheme was launched in April 2015 under the National Electric Mobility Mission, to encourage electric and hybrid vehicle purchase by providing financial support. Its first phase ran for four years until 2019. The second phase (FAME II) is a 3-year subsidy programme. It aims at supporting the electrification of public & shared transportation. (IEA)

மின்சார ஊர்திகளுக்கு வேகமாக தகவமைத்து கொள்ளும், மற்றும் தயாரிக்கும் திட்டம்

இந்த திட்டம் 2015 ஏப்ரல் மாதம், தேசிய மின்சார இயக்கப் பணியின் கீழ் மின்சார மற்றும் எரிபொருள்-மின்சாரக் கலவை வாகனங்களை ஊக்குவிக்கும் வகையில் கொண்டுவரப்பட்டது. இதன் முதல் கட்டம் நான்கு வருடங்களுக்கு தொடர்ந்தது. இரண்டாம் கட்டம், மூன்று வருட மானிய திட்டமாக அமைந்தது. இத்திட்டம் போக்குவரத்தை மின்சாரமாக்குவதை ஊக்குவிக்கிறது.

Feasibility

The degree to which climate goals and response options are considered possible and/or desirable. Feasibility depends on geophysical, ecological, technological, economic, social and institutional conditions for change. Conditions underpinning feasibility are dynamic, spatially variable, and may vary between different groups. (IPCC)

சாத்தியக்கூறு

காலநிலை இலக்குகளும், பதில் நடவடிக்கைகளும் எந்த அளவிற்கு சாத்தியப்படும் வாய்ப்பு உள்ளது அல்லது விரும்பத்தக்கது என்பதை இச்சொல் குறிக்கிறது. இதன் மாற்றம் புவியின் இயற்பியல், சூழலியல், தொழில்நுட்பம், பொருளாதாரம், சமூகவியல் மற்றும் நிறுவனத்தின் நிலை ஆகியவற்றை நம்பியுள்ளது. சாத்தியப்பாட்டிற்கு அடிப்படையாக உள்ள நிபந்தனைகள் யாவும் மாற்ற-மடையத்தக்க, இடத்திற்கு மற்றும் குழுக்களுக்கு ஏற்ப மாறுபாவையாக உள்ளன.

Feedback loop

In a feedback loop, rising temperatures on the Earth change the environment in ways that affect the rate of warming. Feedback loops can be positive (adding to the rate of warming), or negative (reducing it). The melting of Arctic ice provides an example of a positive feedback process. As the ice on the surface of the Arctic Ocean melts away, there is a smaller area of

பின்னூட்ட சுழல்

ஒரு பின்னூட்ட சுழற்சியில், பூமியின் வெப்பம் உயர்கையில் அது சுற்றுச்சூழலை மாறுதல்களுக்கு உட்படுத்தி வெப்பமயமாதலின் வேகத்தை பாதிக்கிறது. பின்னூட்ட சுழற்சி நேர்மறையாக இருக்கலாம் (அதாவது வெப்பமாவதின் வேகம் அதிகரித்தல்) அல்லது எதிர்மறையாக (வெப்பமாவத்தின் வேகம் குறைதல்) இருக்கலாம்.

white ice to reflect the Sun's heat back into space and more open, dark water to absorb it. The less ice there is, the more the water heats up, and the faster the remaining ice melts. (BBC)

ஆர்டிக் பனிக்கட்டிகள் உருகுவது நேர்மறை பின்னூட்ட சுழற்சிக்கு ஒரு எடுத்துக்காட்டாக அமைகிறது. ஆர்டிக் கடலில் உள்ள பனிகாட்டிகள் உருகுவதால், பனியில் உள்ள வெள்ளை சருமத்தின் அளவு குறையும். பனியின் வெள்ளை சருமம் அதிக சூரிய ஒளியை திருப்பி அனுப்புவதற்கு உதவுகிறது. பனி உருகி நீராக மாறுகையில், சருமம் கருநிறம் கொள்வதால் அதிக சூரிய ஒளியை உள்ளிழுத்து மேலும் வேகமாக பனி உருக வித்திடுகிறது. பனிப்பாறைகளின் இழப்பு கடலின் வெப்பத்தை உயர்த்தி, மேலும் பனிகட்டிகள் உருக வித்திடுகின்றது.

Flexible mechanism

Instruments that help countries and companies meet emission reduction targets by paying others to reduce emissions for them. The mechanism in widest use is emissions trading, where companies or countries buy and sell permits to pollute. The Kyoto Protocol establishes two flexible mechanisms enabling rich countries to fund emission reduction projects in developing countries - Joint Implementation (JI) and the Clean Development Mechanism (CDM). (BBC)

நெகிழ்வு தன்மையுடைய இயக்குமுறை

ஒரு நாடோ அல்லது நிறுவனமோ, பணம் செலுத்தி பிறரின் உமிழ்வைக் குறைப்பதான் மூலமாக தன் உமிழ்வு குறைப்பு இலக்கை அடைய வழிவகுக்கும் உத்தி இது அதிகமாக பயன்படுவது உமிழ்வு வர்த்தகத்தில் தான். அதாவது, நாடுகள் அல்லது நிறுவனங்கள் மாசுபடுத்துவதற்கான அனுமதியை வாங்குவதும் விற்பதும் ஆகும். கியோடோ பிரகடனம் வளர்ந்த நாடுகளுக்கு 'இணைந்து அமல்படுத்தல்' (JI) மற்றும் 'உமிழ்வற்ற வளர்ச்சி இயக்குமுறை' (CDM) என்னும் இரண்டு நெகிழ்வு தன்மையுடைய இயக்குமுறைகளை வழங்குகிறது. இதன்படி இவை வளரும் நாடுகளின் உமிழ்வு குறைப்பு திட்டங்களுக்கு நிதிகளை வழங்கலாம்.

Flood

The overflowing of the normal confines of a stream or other body of water, or the accumulation of water over areas not normally submerged. Floods include river (fluvial) floods, flash floods, urban floods, pluvial floods, sewer floods, coastal floods and glacial lake outburst floods. (AR5 SYR)

வெள்ளம்

நதி, ஓடை போன்ற நீர் நிலைகளின் கொள்ளளவை தாண்டி நீர் பெருக்கெடுத்து ஓடுவது. அல்லது நீரில் மூழ்காத இடங்களில் நீர் தேங்குவது. ஆற்றில் வரும் வெள்ளம், திடீரென வரும் வெள்ளம், நகரங்களில் புகும் வெள்ளம், அதீத மழையால் ஏற்படும் வெள்ளம், கழிவு நீர் பெருக்கெடுப்பது, கடல்நீர் உட்புகுவது, பனிப்பாறை குளங்கள் பெருக்கெடுப்பது போன்றவை வெள்ளங்களின் சில வகைகள் ஆகும்.

Flue gas

Flue gas (sometimes called exhaust gas or stack gas) is the gas that emanates from combustion plants and which contains the reaction products of fuel and combustion air and residual substances such as particulate matter (dust), sulfur oxides, nitrogen oxides, and carbon monoxide. (Science Direct)

புகைப்போக்கி வாயு

இது எரி உலைகளில் இருந்து வெளியேறும் வாயு. இந்த உலைகளில் எரிபொருளும், காற்றும் எரிவதால் உண்டாகும் பொருட்களுடன், தூசு, சல்பர் ஆக்சைடு, நைட்ரஜன் ஆக்சைடு போன்ற மிஞ்சிய பொருட்களும், இவ்வாயுவும் வெளியேறுகிறது.

Fly ash

Ash produced in small dark flecks by the burning of powdered coal or other materials, that is then carried into the air. (Indian Express)

புகை சாம்பல்

தூளாக்கப்பட்ட நிலக்கரி அல்லது பிற பொருட்களை எரிக்கையில் உருவாகி காற்றில் பரவும் சிறு கரிய துகள் போன்ற சாம்பல்.

Food security

A state that prevails when people have secure access to sufficient amounts of safe and nutritious food for normal growth, development and an active and healthy life. (IPCC)

உணவுப் பாதுகாப்பு

மக்களின் இயல்பான வளர்ச்சிக்கு, சுறுசுறுப்பான மற்றும் ஆரோக்கியமான வாழ்விற்கு தேவைப்படும் பாதுகாப்பான, சத்தான உணவு போதுமான அளவில் கிடைக்கும் நிலையை உணவுப்பாதுகாப்பு என்போம்.

Fossil fuels

Natural resources, such as coal, oil and natural gas, containing hydrocarbons. These fuels are formed in the Earth over millions of years and produce carbon dioxide when burnt. (BBC)

புதைப்படிம எரிப்பொருள்

கரி, எண்ணெய் மற்றும் இயற்கை வாயு போன்ற நீரியகரிமங்களான இயற்கை வளங்கள். இவை மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு உலகில் தோன்றியவை. இவற்றை எரிக்கையில் கரியமிலவா-யுவின் வெளியேற்றம் நடைபெறும்.

Fossil fuel emissions

Emissions of greenhouse gases (in particular carbon dioxide), other trace gases and aerosols resulting from the combustion of fuels from fossil carbon deposits such as oil, gas and coal. (IPCC)

புதைப்படிம எரிப்பொருளின் உமிழ்வு

நிலக்கரி, எண்ணெய், இயற்கை வாயு ஆகிய புதைபடிம கரிமங்களை எரிப்பதால் வெளியேறும் பசுமை இல்ல வாயுக்கள், பிற சொச்ச வாயுக்கள், மற்றும் தூசுக்கள் ஆகியவற்றை இச்சொல் குறிக்கிறது.

Fracking

Fracking involves drilling into the earth and directing a high-pressure mixture of water, sand and chemicals at a rock layer in order to release the gas inside. The wells can be drilled vertically or horizontally in order to release the gas. The term fracking refers to how the rock is fractured apart by the high-pressure mixture. (BBC)

உயர் அழுத்தத்தில் பாறையை உடைப்பது

பூமியைக் குடைந்து, பாறை அடுக்கினில் உள் இருக்கும் வாயுவை வெளியேற்ற அதிக அழுத்தத்தில் நீர், மண், மற்றும் ரசாயனங்களை செலுத்துவது. வாயுக்களை வெளியேற்ற கிணறுகளை நெட்டுக்குத்தாக அல்லது இடைமட்டமாக குடையலாம். இது உயர் அழுத்த கலவை வைத்து பாறை எப்படி உடைக்கப்படுகின்றது என்பதை குறிக்கிறது.

Fugitive emissions

Fugitive emission is defined as the unintentional and undesirable emission, leakage, or discharge of gasses or vapors from pressure-containing equipment or facilities, and from components inside an industrial plant. The term “fugitive” is used because these emissions are not taken into account and calculated during the design of the equipment and components. In addition, these emissions are unanticipated; as such, they are not detected by typical monitoring and control devices. Since the typical control equipment and facilities cannot detect them, fugitive emissions can also be called uncontrolled or unanticipated emissions. (Science Direct)

தற்செயல் உமிழ்வு

உயர் அழுத்தம் கொண்ட உபகரணங்கள் அல்லது வசதிகள் மற்றும் தொழிற்சாலைகளில் நடைப்பெறும் தேவையற்ற மற்றும் தற்செயலான வாயு அல்லது நீராவிக்களின் உமிழ்வு, கசிவு அல்லது வெளியேற்றம். இதில் ‘தற்செயல்’ என்ற பதம் பயன் படுத்தப்படுவதற்கான காரணம், இந்த உபகரணங்கள் மற்றும் வசதிகள் வடிவமைக்கப்படுகையில் இவ்வகை இந்த உமிழ்வுகள் கணக்கில் கொள்ளப்படவில்லை. மேலும், இந்த உமிழ்வுகள் எதிர் பார்க்கப்படாதவை என்பதால் இவை கண்காணிப்பு கட்டுப்பாட்டு சாதனங்களால் கண்டறியப் படுவதில்லை. ஆதலால் இவ்வகை உமிழ்வினை கட்டுப்படுத்த முடியாத அல்லது எதிர்பாராத உமிழ்வுகள் என்றும் வழங்குவர்.

G

G77

The main negotiating bloc for developing countries, allied with China (G77+China). The G77 comprises 130 countries, including India and Brazil, most African countries, the grouping of small island states (Aosis), the Gulf states and many others, from Afghanistan to Zimbabwe. (BBC)

G77

இது சீனாவுடன் அணிசேர்ந்து உலக காலநிலை கலந்துரையாடல்களில் பங்குபெறும் வளரும் நாடுகளை கொண்ட கூட்டமைப்பு. இதில் இந்தியா, பிரேசில் போன்ற நாடுகளையும் சேர்த்து 130 நாடுகள் உள்ளன. இது தவிர பல ஆப்பிரிக்க நாடுகள், சிறிய தீவு நாடுகள் கூட்டமைப்பு, வளைகுடா நாடுகள் போன்று ஆப்கானிஸ்தான் முதல் சிம்பாபுவே வரை பல நாடுகள் இந்த கூட்டமைப்பில் உள்ளன.

Gasification

It is the process of converting organic or fossil based carbonaceous materials into a mix of carbon monoxide and hydrogen that can serve as fuel. (Energy Efficiency and Renewable Energy)

வாயுவாக்குதல்

புதைபடிவ மற்றும் கரிம தாதுக்கள் அல்லது பொருட்களைக் கார்பன் மோனாக்சைடு மற்றும் ஹைட்ரஜன் கொண்ட கலவையாக மாற்றும் முறைகள். இந்த கலவை எரிபொருளாக பயன்படும்

Gas flaring

When natural gas is brought to the surface but cannot easily be used, it is burned for disposal or flared. Flaring mainly happens when gas is produced as a byproduct of oil extraction. If there is no infrastructure to put this associated gas to productive use, it is simply burned off. Flaring is a serious Environmental Problem. (Energy For Growth Hub)

வாயுவை எரித்தல்

நிலத்தடியில் இருந்து எடுக்கப்படும் இயற்கை எரிவாயுவை சுலபமாக எதற்கும் பயன்படுத்த முடியவில்லை என்றால், அது பொதுவாக அப்புறப்படுத்தப்படும் அல்லது எரிக்கப்படும். நிலத்தடியில் இருந்து எண்ணெய் எடுக்கையில் ஏதேனும் வாயு அதனுடன் உருவானால் அதனை பொதுவாக எரிக்கவே செய்வர். அதனை பயன்படுத்த உள்கட்டுமானம் உருவாக்கபட்டிருக்க வேண்டும். இப்படி எரிப்பது ஒரு தீவிர சூழல் பிரச்சனை ஆகும்.

Gender Action Plan

A Gender Action Plan is the road map for gender activities that an institution has adopted for itself. Its

பாலின செயல்திட்டம்

ஒரு நிறுவனத்தின் பாலினம் சார்ந்த செயல்பாடுகளுக்கு வழிகாட்டி திட்டம் .. இதன் நோக்கம் ஒரு

purpose is to make the institutions' activities gender responsive and transformative, and thus more effective, efficient and successful. (Gender & Chemicals)

நிறுவனத்தின் செயல்பாடுகளை பாலினம் சார்ந்த பொறுப்புகளுக்கும், மாறுதலுக்கும் உகந்ததாக மாற்றுவது. இதன் மூலமாகவோ அந்த நிறுவனம் மேலும் திறன் பெற்றதாக, வெற்றிகரமானதாக மாறும்.

Geological sequestration

The injection of carbon dioxide into underground geological formations. When CO2 is injected into declining oil fields it can help to recover more of the oil. (BBC)

புவியியல் தன்மயமாதல்

கரியமில வாயுவை நிலத்தின் அடியில் புவியியல் அடுக்களுக்குள் உட்செலுத்தி அன்பு சேமிப்பது. வற்றிக்கொண்டு வரும் எண்ணெய் கிணறுகளில் இதனை உட்செலுத்தினால் அதிக எண்ணையை பெறமுடியும்.

Glacial retreat

Glacial retreat is when glacial melt occurs faster than new seasonal snow and ice have time to accumulate. (Lifegate)

பனிப்பாறை சுருங்கல்

பனியாறின் மீது புதிய பனி படியும் வேகத்தை விட பனி உருகும் வேகம் அதிகமாக இருக்கும்போது பனியாற்றின் அளவு சுருங்கும்.

Glacier

A perennial mass of ice, and possibly firn and snow, originating on the land surface by the recrystallisation of snow and showing evidence of past or present flow. A glacier typically gains mass by accumulation of snow, and loses mass by melting and ice discharge into the sea or a lake if the glacier terminates in a body of water. (IPCC)

பனியாறு

பனிப்பாறை அழியாத பெருமளவு பனி நிறைந்த ஒரு அமைப்பு. முன்போ அல்லது தற்பொழுதோ இது நகர்ந்து கொண்டிருப்பதை காணலாம். தரைப்பரப்பில் துவங்கி மேலும் மேலும் வந்து படியும் பனியினால் இது உருவாகிறது. படியும் பனியினால் நிறை அதிகரிக்கும் பனியாறு, அதிலிருந்து உருகி ஓடும் தண்ணீரினால் நிறையை இழக்கிறது. இவ்வாறு உருகி ஓடும் தண்ணீர் கடலிலோ, அல்லது ஏரியிலோ சென்று தேங்குகிறது. சில நேரங்களில் தண்ணீர் தவிர பனிக்கட்டிகளையும் இது கடலிலோ, ஏரியிலோ வெளியேற்றுகிறது.



Glacial Lake Outburst Flood

A Glacial Lake Outburst Flood, or GLOF, is a sudden release of water from a lake fed by glacier melt that has formed at the side, in front, within, beneath, or on the surface of a glacier. (ICIMOD)

பனி ஏரி உடைந்து உருவாகும் வெள்ளம்

பனியேரியின் முன்போ, பக்கங்களிலோ, அடியிலோ, பரப்பிலோ பனி உருகியதால் ஏற்படும் உடைப்பில் இருந்து திடீரென பெருக்கெடுக்கும் தண்ணீர் GLOF என்று அழைக்கப்படுகிறது.

Glasgow Climate Pact

At COP26 in 2021, nations adopted the Glasgow Climate Pact, aiming to turn the 2020s into a decade of climate action and support. The package of decisions consists of a range of agreed items, including strengthened efforts to build resilience to climate change, to curb greenhouse gas emissions and to provide the necessary finance for both. Nations reaffirmed their duty to fulfill the pledge of providing 100 billion dollars annually from developed to developing countries. And they collectively agreed to work to reduce the gap between existing emission reduction plans and what is required to reduce emissions, so that the rise in the global average temperature can be limited to 1.5 degrees. For the first time, nations are called upon to phase down unabated coal power and inefficient subsidies for fossil fuels. (UNFCCC)

கிளாஸ்கோவ் காலநிலை உடன்படிக்கை

2021ஆம் ஆண்டு நடைபெற்ற 26ஆம் COPஇல் உலக நாடுகள் கிளாஸ்கோவ் காலநிலை உடன்படிக்கையை ஏற்றுக்கொண்டன. அதன்படி 2020இன் பத்தாண்டுகளை காலநிலை செயல்பாடு மற்றும் ஆதரவுக்கான பத்தாண்டுகளாக மாற்ற முடிவு செய்யப்பட்டது. இதனுள் காலநிலை மாற்றத்திற்கு தகவமைப்பது, பசுமையில்ல வாயுக்களின் உமிழ்வை குறைப்பது, மற்றும் மேற்கண்ட இரண்டிற்கும் தேவையான நிதியை அளிப்பது போன்றவை அடங்கும். வளர்ந்த நாடுகள் வளரும் நாடுகளுக்கு வருடாவருடம் நூறு பில்லியன் டாலர்கள் வழங்கும் தீர்மானம் மறுவுறுதி செய்யப்பட்டது. மேலும், தற்போது போடப்பட்டிருக்கும் உமிழ்வு குறைப்பு திட்டங்களின் இலக்குகளுக்கும், புவியின் வெப்பநிலை உயர்வை 1.5 டிகிரிக்குள் குறைப்பதற்கு தேவையான உமிழ்வு குறைப்பிற்கும் உள்ள இடைவெளியை குறைப்பதற்கும் முடிவு செய்யப்பட்டது. முதன்முறையாக உலக நாடுகள் அனைத்திற்கும் நிலக்கரி பயன்பாட்டை படிப்படியாக குறைக்கவும், புதைபடிவ எரிபொருட்களுக்கு வழங்கப்படும் மானியங்களையும் கைவிட அழைப்பு விடுக்கப்பட்டது.

Global average temperature

The mean surface temperature of the Earth is measured from three main sources: satellites, monthly readings from a network of over 3,000 surface temperature observation stations and sea surface temperature measurements taken mainly from the fleet of merchant ships, naval ships and data buoys. (BBC)

உலக சராசரி வெப்பநிலை

உலகின் மேற்பரப்பினது சராசாரி வெப்பநிலை மூன்று மூலங்களில் இருந்து கணக்கிடப்படுகிறது - செயற்கைகோள்கள், புவியின் தரைப்பரப்பில் 3000க்கும் மேற்பட்ட இடங்களில் அமைக்கப்பட்டிருக்கும் வெப்பநிலை அளவீட்டு நிலையங்களில் இருந்து பெறப்படும் மாதாந்திர தரவுகள், மற்றும் பயணிகள் கப்பல்கள், ராணுவ கப்பல்கள்,

மிதவைகள் போன்றவற்றில் இருந்து பெறப்படும் கடல் பரப்பு வெப்பநிலை தரவுகள்.

Global energy budget

The balance between the Earth's incoming and outgoing energy. The current global climate system must adjust to rising greenhouse gas levels and, in the very long term, the Earth must get rid of energy at the same rate at which it receives energy from the sun. (BBC)

உலக ஆற்றல் நிதிநிலை

உலகிற்குள் வரும் ஆற்றலுக்கும், வெளியேறும் ஆற்றலுக்கும் இடையிலான மிச்சம். இதுதான் உலகின் வெப்பநிலைக்கு காரணம். தற்போது உயர்ந்துவரும் பசுமைஇல்ல வாயுகளால், பிற்காலத்தில் உலகம் ஆற்றலை உள்வரும் வேகத்திற்கு வெளியேற்ற வேண்டியிருக்கும். அப்போது தான் உலகின் காலநிலை எந்த பாதிப்புமின்றி இருக்கும்.

Global dimming

An observed widespread reduction in sunlight at the surface of the Earth, which varies significantly between regions. The most likely cause of global dimming is an interaction between sunlight and microscopic aerosol particles from human activities. In some regions, such as Europe, global dimming no longer occurs, thanks to clean air regulations. (BBC)

உலக ஒளிமங்குதல்

இது உலகின் பரப்பில் சூரிய ஒளி குறைந்து காணப்படும் ஒரு நிகழ்வு. இதற்கு முக்கிய காரணமாக மனித செயல்பாடுகளால் வெளியேற்றப்படும் நுண்துகள்கள், வலிமைகரைசல்கள் போன்றவை சூரிய ஒளியுடன் வினைபுரிவது இருக்கிறது. தற்போது மாசற்ற காற்றுக்கான கட்டுப்பாடுகளால், ஐரோப்பா போன்ற சில பிரதேசங்களில் இந்த நிகழ்வு நடைபெறுவது இல்லை.

Global stocktake

The global stocktake of the Paris Agreement (GST) is a process for taking stock of the implementation of the Paris Agreement with the aim to assess the world's collective progress towards achieving the purpose of the agreement and its long-term goals (UNFCCC)

உலக மதிப்பாய்வு

பாரிஸ் ஒப்பந்ததத்தின் உலக மதிப்பாய்வு எனபது அதன் இலக்குகள் எந்த அளவு நிறைவேறியுள்ளன என்பதை ஆய்வு செய்யும் ஒரு முறை. இது உலக அளவில் அனைத்து நாடுகளும் சேர்ந்து பாரிஸ் ஒப்பந்தத்தின் இலக்குகளை நோக்கி எவ்வளவு முன்னேறுகிறது என்பதை கண்காணிக்கிறது.

Global warming

The steady rise in global average temperature in recent decades, which experts believe is largely caused by man-made greenhouse gas emissions. The long-term trend continues upwards, they suggest,

புவி வெப்பமயமாதல்

சமீபத்திய சில பத்தாண்டுகளில் புவியின் சராசரி வெப்பநிலை நிலையாக உயரும் தன்மையை இவ்வாறு குறிப்பிடுகின்றனர். இது பெரும்பாலும் மனித செயல்பாடுகளால் நடைபெறுகிறது என்பது

even though the warmest year on record, according to the UK's Met Office, is 1998. (BBC)

அறிஞர்களின் கணிப்பு. நெடுங்காலமாக நடந்து வரும் இந்த வெப்பநிலை உயர்வு தற்போதும் தொடர்கிறது. ஆனால் இதுவரை உலகின் வெப்ப-மான வருடமாக 1998ஆம் ஆண்டை கூறுகிறது பிரிட்டனின் வானிலை அலுவலகம்

Global Warming Potential (GWP)

A measure of a greenhouse gas's ability to absorb heat and warm the atmosphere over a given time period. It is measured relative to a similar mass of carbon dioxide, which has a GWP of 1.0. So, for example, methane has a GWP of 25 over 100 years, the metric used in the Kyoto Protocol. It is important to know the timescale, as gases are removed from the atmosphere at different rates. (BBC)

புவிவெப்ப கொள்திறன்

ஒரு குறிப்பிட்ட கால அளவில் வளிமண்டல-த்தில் இருக்கும் பசுமையில்ல வாயுக்களால் எந்த அளவு வெப்பத்தை உறிந்து, வளிமண்டலத்தை வெப்பமாக்க முடியும் என்பது. கரியமில வாயுவின் கொள்திறன் ஒப்பீட்டிற்காக 1.0 ஆகா கணக்கிட-ப்பட்டுள்ளது. இதன் நிறையுடன் ஒப்பிட்டு பிற வாயுக்களின் வெப்ப கொள்திறன் அளவிடப்படு-கிறது. எடுத்துக்காட்டாக க்யோடோ பிரகடனத்தில் மீத்தேனின் GWP 100 ஆண்டகளுக்கு 25ஆக அளவிட-ப்பட்டுள்ளது. இதில் குறிப்பிட்ட கால அளவை அறிந்து கொள்வதும் முக்கியமாகும். ஏனெனில், ஒவ்வொரு வாயுவை வெவ்வேறு வேகத்தில் வளிமண்டலத்தில் இருந்து நீக்கப்படுகின்றன.

GMO

A genetically modified organism contains DNA that has been altered using genetic engineering. Genetically modified animals are mainly used for research purposes, while genetically modified plants are common in today's food supply. (National Geographic)

மரபணு மாற்றப்பட்ட உயிரினங்கள்

இவை மரபணுப் பொறியியலின் உதவியுடன் அவற்றின் DNAவில் மாற்றம் செய்யப்பட்ட உயிரினங்கள். பொதுவாக மரபணு மாற்றம் செய்யப்பட்ட விலங்குகள் ஆய்விற்கு பயன்படுகிறது. மரபணு மாற்றப்பட்ட தாவரங்கள் நமது உணவாகிவிட்டன.

Green buildings

A 'green' building is a building that, in its design, construction or operation, reduces or eliminates negative impacts, and can create positive impacts, on our climate and natural environment. Green buildings preserve precious natural resources and improve our quality of life. (World Green Building Council)

பசுமை கட்டிடங்கள்

இயற்கை சுற்றுசூழல் மற்றும் காலநிலையின் மீது எதிர்மறை தாக்கத்தை ஏற்படுத்தாமல், நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தும் வண்ணம் வடிவமைப்பு, கட்டுமானம், இயக்கம் போன்ற அனைத்தையும் உள்ளடக்கிய கட்டிடம், இவ்வாறு அழைக்கப்படுகிறது. இவை விலைமதிப்பற்ற இயற்கை வளங்களை பாதுகாத்து, நமது வாழ்வின் தரத்தை உயர்த்துகிறது.

Green corridor

A ‘green corridor’ (also known as a wildlife corridor, biological corridor, or habitat corridor) is a strip of land that is established to enable the bridging of habitat populations that have been split by human development such as a road, settlement, or other human activity. If this is not undertaken, wildlife populations may become unstable and some species (animals and plants) could become vulnerable. Green corridors may also be created in the wake of natural disasters, such as wildfires and disease, to help re-establish the newly reduced wildlife populations. (Designing Buildings)

பசுமை வழித்தடம்

காட்டுயிர் வழித்தடம், உயிரியல் வழித்தடம், வாழிட வழித்தடம் என்று பல்வேறு பெயர்களால் குறிப்பிடப்படுகின்றது. பசுமை வழித்தடங்கள் என்பன் மனித வளர்ச்சி திட்டங்களான சாலை, குடியிருப்பு போன்றவற்றால் பிரிக்கப்பட்ட ஒரு வாழிடத்தின் உயிர்களை இணைக்கும் நிலம். இது இல்லாமல் போனால் வனவிலங்குகளின் மக்கட்தொகை பாதிக்கப்பட்டு, சில இனங்கள் அழியும் நிலையம் ஏற்படும்.இது இயற்கை பேரழிவுகளான காட்டுத்தீ, நோய்கள் போன்றவற்றினால் குறைந்த காட்டுயிர் மக்கட்தொகையை மீண்டும் அதிகரிக்கும் நோக்கத்திலும் உருவாக்கப்படும்.

Green hydrogen

Green hydrogen is when the energy used to power electrolysis comes from renewable sources like wind, water or solar. Electrolysis is the process of passing electricity through a substance to force a chemical change — in this case, splitting H2O into hydrogen and oxygen. (CNBC)

பசுமை ஹைட்ரஜன்/நீரியம்

நீரில் மின்சாரத்தை செலுத்தும் போது அது ஹைட்ரஜனாகவும், ஆக்ஸிஜனாகவும் பிளவுருகிறது. இவ்வாறு ஒரு தனிமத்தில் மின்சாரத்தை செலுத்தி பிளக்கும் முறை ‘மின்னாற் பகுப்பு’ (electrolysis) எனப்படுகிறது. இந்த முறையில் உபயோகிக்கப்படும் மின்சாரம் காற்று, நீர், சூரிய ஆற்றல் போன்ற புதுப்பிக்கத்தக்க ஆற்றலில் இருந்து எடுக்கப்பட்டிருந்தால் இந்த முறையில் உருவாக்கப்படும் ஹைட்ரஜன், பசுமை ஹைட்ரஜன் எனப்படுகிறது.

Green infrastructure

The interconnected set of natural and constructed ecological systems, green spaces and other landscape features. It includes planted and indigenous trees, wetlands, parks, green open spaces and original grassland and woodlands, as well as possible building and street-level design interventions that incorporate vegetation. Green infrastructure provides services and functions in the same way as conventional infrastructure. (IPCC)

பசுமை உள்கட்டுமானம்

இயற்கையான மற்றும் உருவாக்கப்பட்ட சூழல் அமைப்புகள், பசுமைவெளிகள் மற்றும் பிற நிலப்பரப்பு அம்சங்களை உள்ளடக்கிய கட்டுமானங்கள் இவை. இவை நடப்பட்ட மற்றும் உள்நாட்டு மரங்கள், ஈரநிலங்கள், பூங்காக்கள், பசுமையான திறந்தவெளிகள், உள்நாட்டு புல்வேய்கள், வனம் போன்றவற்றை உள்ளடக்கியதாக இருக்கும். கட்டிடங்கள், சாலைகள் போன்றவற்றின் திட்டங்களிலும் மரங்கள், செடிகள் ஆகியற்றை கொண்டிருக்கும். இயல்பான உள்கட்டுமானங்கள் கொடுக்கும் வசதிகளையும், சேவைகளையும் பசுமை உள்கட்டுமானமும் கொடுக்கும்.

Green economy

A green economy is defined as low carbon, resource efficient and socially inclusive. In a green economy, growth in employment and income are driven by public and private investment into such economic activities, infrastructure and assets that allow reduced carbon emissions and pollution, enhanced energy and resource efficiency, and prevention of the loss of biodiversity and ecosystem services. (United Nations Environment Programme)

பசுமைப் பொருளாதாரம்

குறைந்த கரிம பங்கு கொண்ட, வளங்களை திறனாக கையாளும், சமூக அளவில் அனைவரையும் உள்ளடக்கிய ஒரு பொருளாதாரம் பசுமை பொருளாதாரம் எனப்படுகிறது. இதில் வருமானம் மற்றும் வேலைவாய்ப்பில் வளர்ச்சி என்பது; குறைந்த கரிம உமிழ்வு மற்றும் மாசினை கொண்ட, மேம்படுத்தப்பட்ட வளம் மற்றும் ஆற்றல் மேலாண்மையை கொண்ட, பல்லுயிர் இழப்பு மற்றும் சூழல் சேவைகள் இழப்பு போன்றவை தடுக்கப்பட்ட பொருளாதார நடவடிக்கைகள், உள்கட்டுமானங்கள் மற்றும் சொத்துக்களில் செய்யப்படும் பொது மற்றும் தனியார் முதலீடுகள் மூலம் சாதிக்கப்படும்.

Green financing

Green finance is a broad term that can refer to financial investments flowing into sustainable development projects and initiatives, environmental products, and policies that encourage the development of a more sustainable economy. Green finance includes climate finance but is not limited to it. (German Development Institute)

பசுமை நிதி

நீடித்த பொருளாதாரத்தை உருவாக்க முயலும் திட்டங்கள், முன்னெடுப்புகள், சூழல்சார் பொருட்கள், கொள்கைகள் போன்றவற்றில் செய்யப்படும் நிதி முதலீடுகள் அனைத்தையும் குறிக்கும் விரிவான பதம் பசுமை நிதி. காலநிலை நிதி என்பது பசுமை நிதியில் ஒன்று; ஆனால் அதுமட்டும் பசுமை நிதி அல்ல.

Greenhouse gases (GHGs)

Natural and industrial gases that trap heat from the Earth and warm the surface. The Kyoto Protocol restricts emissions of six greenhouse gases: natural (carbon dioxide, nitrous oxide, and methane) and industrial (perfluorocarbons, hydrofluorocarbons, and sulphur hexafluoride). (BBC)

பசுமைஇல்ல வாயுக்கள்

இயற்கையான மற்றும் தொழிற்சாலைகளில் உருவாகும் சில வாயுக்களான இவை, புவியின் வெப்பத்தை தக்கவைத்து, புவிபரப்பின் வெப்பநிலையை அதிகரிக்க செய்கிறது. ஆறு பசுமைஇல்ல வாயுக்களின் உமிழ்வை க்யோடோ பிரகடனம் தடை செய்துள்ளது. அவை: இயற்கையாக உருவாவன (கரியமில வாயு, நைட்ரஸ் ஆக்ஸைட் மற்றும் மீத்தேன்) மற்றும் தொழிற்சாலைகளில் உருவாவன (பெர்ப்ளுரோ கார்பன், ஹைட்ரோப்ளுரோ கார்பன், சல்பர் ஹெக்ஸாப்ளுரைட்)

Greenhouse effect

The insulating effect of certain gases in the atmosphere, which allow solar radiation to warm the earth and then prevent some of the heat from escaping. See also Natural greenhouse effect. (BBC)

பசுமைஇல்ல விளைவு

வளிமண்டலத்தில் இருக்கும் சில வாயுக்கள் அதிகமான சூரிய வெப்பத்தை உள்ளிழுத்தும், பூமியில் இருந்து வெப்பம் வெளியேறா வண்ணம் தடுத்தும் பூமியை சூடாக்குகிறது. இயற்கையான பசுமை இல்ல விளைவையும் காண்க.

Green taxonomy

A green taxonomy identifies the activities or investments that deliver on environmental objectives, helping drive capital more efficiently toward priority environmentally sustainable projects. The guide can help banks and other financial institutions originate and structure green banking products (e.g., loans, credits, and guarantees). It can also help investors identify opportunities that comply with sustainability criteria for impact investments. (World Bank)

பசுமை வகைப்பாடு

சூழல் சார்ந்த இலக்குகளை சாதிக்கும் செயல்பாடுகள் முதலீடுகள் போன்றவற்றை பசுமை வகைப்பாடு அடையாளம் காண்கிறது. இதனை கண்டறிந்த பின், சூழல்சார் வளங்குன்றா திட்டங்களில் முதலீடுகளை பெருவாரியாக குவிய வைக்கிறது. இந்த வகைப்பாடு வங்கிகள் மற்றும் பிற நிதி நிறுவனங்கள் பசுமைசார் வங்கி சேவைகளை (கடன், உத்தரவாதம்) கட்டமைக்க ஒரு வழிகாட்டியாக உதவுகிறது. இது வளங்குன்றா வளர்ச்சி துறைகளில் உள்ள வாய்ப்புகளை முதலீட்டாளர்களுக்கு அடையாளம் காட்டுகிறது.

Gulf stream

Originating at the tip of Florida, the Gulf Stream is a warm and swift Atlantic Ocean current that follows the eastern coastline of the US and Canada before crossing the Atlantic Ocean towards Europe. It ensures that the climate of Western Europe is much warmer than it would otherwise be. (Met Office, UK)

வளைகுடா நீரோட்டம்

ப்ளோரிடா மாகாணத்தின் முனையில் உருவாகும் இந்த வளைகுடா நீரோட்டம் ஒரு வெப்பமான மற்றும் வேகமான நீரோட்டம். இது அமெரிக்கா மற்றும் கனடாவின் kizhakku கடற்கரையோரமாக ஓடி, அட்லாண்டிக் பெருங்கடலை கடந்து ஐரோப்பிய கண்டத்தின் மேற்கு கரையை அடைகிறது. இந்த வெப்ப நீரோட்டத்தினால் தான் மேற்கு ஐரோப்பா அது இயல்பாய் இருந்திருக்க வேண்டிய நிலையை விட வெப்பமாக உள்ளது.



H

Habitat

A habitat is a place where an organism makes its home. A habitat meets all the environmental conditions an organism needs to survive. (National Geographic)

வாழிடம்

ஒரு உயிரினம் தான் வாழ்வதற்கான எல்லா வகையான புறச் சூழல்களையும் கொண்ட ஒரு இடத்தை தேர்வு செய்து, அதனை தனது இல்லமாக மாற்றிக்கொள்ளும். அவ்விடம் வாழிடம் எனப்படும்.

Hard limits

Hard limits occur when adaptive actions become infeasible to avoid risks caused due to climate change. One prominent example is when small islands become uninhabitable due to sea level rise and lack of sufficient freshwater. In that case, inhabitants may have no other option than to abandon their homes. The natural world is passing some of the hard limits of what it can handle from climate change right now, leading to irreversible changes like extinction of species. (IPCC)

கடினமான இலக்குகள்

காலநிலை மாற்றத்தினால் உருவாகும் அபாயங்களை தடுக்கும் வண்ணம் செயல்படுத்தப்படும் தகவமைப்புகள் எதுவும் சாத்தியமற்றதாக மாறும் எல்லை Hard Limit எனப்படுகிறது. ஒரு குறிப்பிடத்தக்க உதாரணம், சிறிய தீவுகள் கடல்நீர் மட்ட உயர்வினாலும், நன்னீர் இன்மையாலும் வாழத்தகுதியற்ற இடமாக மாறுவது. அத்தகைய சூழலில் அங்கிருப்போருக்கு அந்த தீவை விட்டு வெளியேறுவதை தவிர வேறு வழியில்லை. நமது உலகம் காலநிலை மாற்றத்தில் இது போன்ற பல 'Hard Limit' களை தாண்டி சென்று கொண்டிருக்கிறது. இது உயிரினங்களின் முற்றழிவைப் போன்ற மீண்டுவர இயலாத மாற்றங்களை ஏற்படுத்தும்.

Hard-to-abate sectors

The term 'hard-to-abate sector' refers to any sector for which the transition is not nearly so straightforward, because they either lack the technology or its cost remains prohibitive. (Lombard Odier)

மாற்றுவதற்கு கடினமான துறைகள்

எந்தெந்த துறைகளில் படிம எரிபொருள்கள், ஆற்றல் போன்றவற்றின் தேவையும் பயன்பாடும் அதிகமாக உள்ளதோ, அந்த துறைகளில் மாற்றம் கொண்டுவந்து அப்பயன்பாட்டை குறைப்பது கடினமாகிறது. அத்தகைய துறைகளை hard-to-abate என்கிறோம்.

Hazard

The potential occurrence of a natural or human-induced physical event that may cause loss of life, injury, or other health impacts, as well as damage and loss to property, infrastructure, livelihoods, service provision, and environmental resources. (IPCC)

ஆபத்து

மனித செயல்பாடுகளால் ஏற்படும் உயிரிழப்பு, காயம், அல்லது பிற உடல்நலக் கேடுகள், சொத்து, வசதிகள், வாழ்வாதாரம், சேவை, இயற்கை வளம் ஆகியவற்றின் இழப்பு அல்லது பாதிப்பு போன்ற சாத்தியமான நிகழ்வுகள்.

Health impacts

Climate change impacts human health in both direct and indirect ways. Extreme heat waves, rising sea level, changes in precipitation resulting in flooding and droughts, and intense hurricanes can directly cause injury, illness, and even death. The effects of climate change can also indirectly affect health through alterations to the environment. (NIEHS)

உடல்நல தாக்கங்கள்

காலநிலை மாற்றத்தின் தாக்கம் மனிதர்களை நேரடியாகவும் மறைமுகமாகவும் பாதிக்கக் கூடியவை. தீவிர வெப்ப அலைகள், உயரும் கடல் மட்டம், மழைப்பொழிவின் மாற்றத்தால் உண்டாகும் வெள்ளம், வறட்சி, மற்றும் தீவர புயல்கள் நேரடியாக உடல்நலக் கேடு, காயம் அல்லது மரணத்தைக்கூட உண்டாக்கக் கூடியவை. காலநிலை மாற்றத்தினால் உண்டாகும் சூழல் மாற்றங்கள் மறைமுகமாகவும் மனித நலத்தை பாதிக்கின்றன.

Heat wave (also referred to as extreme heat event)

A heatwave is considered if the maximum temperature of an IMD weather station reaches at least 40C or more for plains and at least 30C or more for hilly regions. A 4.5 to 6.4-degree departure from normal is considered to declare a heatwave and a more than 6.4-degree departure for a severe heatwave. (IMD)

வெப்ப அலை

சமவெளிகளின் அதீத வெப்ப நிலை 40C அல்லது அதற்கு மேலாக உயர்ந்தால், மலைப்பகுதிகளின் அதீத வெப்ப நிலை 30C அல்லது மேலாக உயர்ந்தால் அந்நிலையினை வெப்ப அலையாக கருதுகிறோம். மேலும் சராசரி வெப்பநிலையில் இருந்து 4.5 - 6.4 C உயர்வு ஏற்பட்டால் அதனை வெப்ப அலையாகவும், 6.4C க்கு மேலாக உயர்ந்தால் பல்வேறு வெப்ப அலைகளாகவும் கருதுகின்றோம்.

Historic emissions

The term is used to indicate annual emissions for countries from 1850 - 2019. At the UN negotiations, historical emissions underpin the claims for climate justice made by developing nations, along with the disparity in wealth of nations. Countries that grew rich on fossil fuels have the greatest responsibility to act, developing nations say, and to provide funding for low-CO2 development and protection against the impacts of global heating. (Climate Equity Monitor + Guardian)

வரலாற்று உமிழ்வு

1850 - 2019 ஆகிய காலத்தில் நாடுகளின் வருடாந்திர உமிழ்வை இச்சொல் குறிக்கின்றது. நாடுகளின் வளத்தில் உள்ள ஏற்றத்தாழ்வுகலின் கூடவே இதனையும் பயன்படுத்தி ஐ.நா. சபையில் வளரும் நாடுகள் முன்வைக்கும் காலநிலை நீதிக்கான கோரிக்கைகளை அடிக்கோடிட முடியும். படிம எரிபொருட்களின் வளத்தை அதிகம் கொண்ட நாடுகளே நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டிய பொறுப்பை உடையவை என்றும், அவையே உலக வெப்பத்தை குறைக்க உதவும்

குறைந்த காரிமவாயு ஊமிழும் தொழில்நுட்ப வளர்ச்சிக்கான நிதிகளை வழங்க வேண்டும் என்றும் வளரும் நாடுகள் கூறுகின்றன.

Humidity

Humidity is the amount of water vapor in the air. If there is a lot of water vapor in the air, the humidity will be high. The higher the humidity, the wetter it feels outside. In terms of Climate Change, Humidity governs the increasing likelihood of heavier rainfall and more dangerous heatwaves. (National Geographic + Met Office, UK)

ஈரப்பதம்

காற்றில் உள்ள நீராவியைக் குறிக்க ஈரப்பதம் என்ற சொல் பயன்படுகின்றது. காற்றில் நீராவி அதிகமாக இருப்பின் ஈரப்பதம் அதிகமாக இருக்கும். காலநிலையைப் பொறுத்தவரை ஈரப்பதமே அதீத மழை வருவதற்கான சாத்தியங்களையும், ஆபத்தான வெப்ப அலை வருவதற்கான வாய்ப்புகளை நிர்ணயிக்கின்றது.

Hydrocarbons

Hydrocarbons are organic compounds containing carbon and hydrogen and found in crude oil and natural gas. Hydrocarbons are formed from the remains of marine animals and plants that lived in shallow inland seas, died, and drifted to the bottom. The term petroleum is used as a common denotation for crude oil (mineral oil) and natural gas, i.e., the hydrocarbons from which various oil and gas products are made. Petroleum is a collective term for hydrocarbons, whether solid, liquid or gaseous. (UNEP)

நீரகக்கரிமங்கள்

இயற்கை வாயு மற்றும் கச்சா எண்ணெய் போன்றவற்றில் உள்ள, கரிமம் மற்றும் நீரியம் (ஹைட்ராஜன்) கலந்த சேர்மங்களை குறிக்க இக்கூற்றை பயன்படுத்துகிறோம். ஆழம் குறைவான கடற்பகுதிகளில் வாழ்ந்த விலங்குகள் மற்றும் தாவரங்கள் இறந்த பின்பு, அவற்றின் எச்சங்கள் கடலின் அடியில் படிவதால் உருவாவதே நீரகக்கரிமங்கள். கல்லெண்ணெய் (petroleum) என்னும் சொல் கச்சா எண்ணெய் மற்றும் இயற்கை வாயு ஆகியவற்றை குறிக்க பொதுவாக பயன்படுகின்றது. கல்லெண்ணெயில் இருந்தே பல்வேறு எண்ணெய் மற்றும் வாயு பொருட்கள் பெறப்படுகின்றன. அதனால் இச்சொல் அனைத்து திட, திரவ, வாயு நீரகக்கரிமங்களையும் குறிக்க இச்சொல் குடைச் சொல்லாக பயன்படுகிறது.

Hydrogen

Hydrogen is a derived energy resource, obtained by the separation of hydrogen from water or natural gas. Technically, hydrogen is not an energy source but an energy carrier; it takes energy to derive hydrogen. However, it is a completely clean fuel if used in a fuel cell and a very low polluting fuel if burned directly in an internal combustion engine. (UNEP)

ஹைட்ரஜன்/நீரியம்

நீர் அல்லது இயற்கை வாயுவில் இருந்து பிரித்து பெறப்படும் ஆற்றலே நீரியம். தொழிழ்நுட்ப ரீதியில் நீரியம் என்பது ஆற்றலின் மூலம் அல்ல; அது ஆற்றல் கடத்தி. நீரியத்தை பிரித்து எடுக்கவும் ஆற்றல் தேவைப்படுகின்றது. நீரியத்தை நேரடியாக IC இயந்திரத்தில் எரித்தால் அது சுத்தமான, மாசு உமிழாத எரிபொருளாக விளங்கும்.

Hydropower/Hydel power

Hydropower is derived from turbines turned by flowing water. Water flow can be from rivers or from man-made installations, such as dams. Hydropower is a mature and cost-competitive renewable energy source. Hydropower contributes to decarbonising the energy mix. It often provides other benefits such as water supply, flood and drought control. (UNECE)

நீர் ஆற்றல்

ஓடும் நீரினால் விசை உருளைகளை சுழல செய்வதன் மூலம் நீர் ஆற்றல் கிடைக்கிறது. நீரின் ஓட்டம் இயற்கையான ஆறுகளிலும், மனிதனால் உருவாக்கப்பட்ட அணைக்கட்டுகளிலும் இருக்கும். நீர் ஆற்றல் என்பது ஒரு முழுமையடைந்த, சிக்கனமானதோர் புதுப்பிக்கத்தக்க ஆற்றல். ஆற்றல் தேவையில் உள்ள கரிமத்தின் பங்கை குறைப்பதில் நீர் ஆற்றல் பெரும்பங்காற்றுகிறது. நீர் விநியோகம், வெள்ளம் மற்றும் வறட்சி தடுப்பு போன்றவற்றிலும் இது பயன்படுகிறது.

Hydrosphere

A hydrosphere is the total amount of water on a planet. The hydrosphere includes water that is on the surface of the planet, underground, and in the air. A planet's hydrosphere can be liquid, vapor, or ice. On Earth, liquid water exists on the surface in the form of oceans, lakes and rivers. It also exists below ground—as groundwater, in wells and aquifers. Water vapor is most visible as clouds and fog. (National Geographic)

நீர்க்கோளம்

உலகில் உள்ள மொத்த நீரின் அளவைக் குறிக்க நீர்க்கோளம் என்கின்றனர். இது உலகின் பரப்பில் உள்ள நீர், நிலத்தடி நீர் மற்றும் காற்றில் உள்ள நீரையும் உள்ளடக்கியது. ஒரு கிரகத்தின் நீர்க்கோளம் திரவ, திட மற்றும் வாயு என்று எந்த நிலையிலும் இருக்கலாம். நமது புவியில், நீர் திரவ நிலையில் அதன் பரப்பில் காணப்படும் பெருங்கடல்கள், ஏரிகள் மற்றும் ஆறுகள் போன்றவற்றில் காணப்படுகிறது. நிலத்தின் அடியில் நிலத்தடி நீராக கிணறுகளிலும் நிலத்தடி நீர்தேக்கங்களிலும் காணப்படுகிறது. அது வாயு நிலையில் நீராவியாக மேகங்களிலும், மூடுபனியாகவும் காணப்படுகிறது.

I

Impact assessment

The practice of identifying and evaluating, in monetary and/or non-monetary terms, the effects of climate change on natural and human systems. (IPCC)

தாக்க மதிப்பீடு

இயற்கையான மற்றும் மனித அமைப்புகளின் மீது காலநிலை மாற்றத்தின் தாக்கத்தை, பொருளாதார மற்றும் பிற தளங்களில் கண்டறிந்து அளவிடுவது.

Impacts (consequences, outcomes)

The consequences of realized risks on natural and human systems, where risks result from the interactions of climate-related hazards (including extreme weather and climate events), exposure, and vulnerability. Impacts generally refer to effects on lives; livelihoods; health and well-being; ecosystems and species; economic, social and cultural assets; services (including ecosystem services); and infrastructure. Impacts may be referred to as consequences or outcomes, and can be adverse or beneficial. (IPCC)

தாக்கம்

இயற்கையான மற்றும் மனித அமைப்புகளின் மீது காலநிலை மாற்றத்தின் அபாயத்தால் நிகழும் தாக்கத்தை குறிக்கிறது. இது அதிதீவிர வானிலை மற்றும் காலநிலை மாற்ற நிகழ்வுகள், அதனால் எளிதில் பாதிப்படையும் தன்மை போன்றவற்றை உள்ளடக்கியது. இந்த தாக்கம் பொதுவாக உயிர், உடைமை, உடல்நலம், சூழல் அமைப்புகள் மற்றும் உயிரினங்கள், பொருளாதார, சமூக, கலாச்சார சொத்துக்கள், சூழல் முதலியவை வழங்கும் சேவைகள், கட்டுமானங்கள் போன்றவற்றில் இருக்கும்.தாக்கம் என்பது பொதுவாக ஒன்றின் விளைவையே குறிக்கிறது. அது பயனுள்ளதாகவும் இருக்கலாம்; பாதிப்பாகவும் இருக்கலாம்.

Indoor air pollution

Indoor air pollution is dust, dirt, or gases in the air inside buildings such as your home or workplace that could be harmful to breathe in. Poor indoor air quality has been linked to lung diseases like asthma, COPD and lung cancer. It has also been linked to increased risk of heart disease and stroke. Indoor air pollution can be caused by anything from gas stoves and wood burners, to damp and mould. (British Lung Foundation)

உட்புற காற்று மாசு

வீடு, அலுவலகம் போன்ற கட்டிடங்களின் உட்புறம் இருக்கும் சுவாசத்திற்கு தீங்கு விளைவிக்கக்கூடிய தூசு, துகள்கள், வாயுக்கள் போன்றவற்றை உட்புற காற்று மாசு என்கின்றனர். உட்புற காற்றின் தரம் மோசமாக இருப்பது ஆஸ்துமா, நுரையீரல் அடைப்பு, நுரையீரல் புற்றுநோய் போன்றவற்றை விளைவிப்பதாக உள்ளது. மேலும் இருதய நோய்கள் மற்றும் மாரடைப்பு போன்றவை வருவதற்கான வாய்ப்புகளை அதிகரிப்பதாகவும் கண்டறியப்பட்டுள்ளது. இது எரிவாயு அடுப்புகள்

முதல் மாற அடுப்புகள் வரை பலவற்றினால் உருவாக்கப்படுகிறது.

Industrial emissions

Gas-borne pollutants discharged into the atmosphere from smokestacks of industrial plants. (GEMET)

தொழிற்சாலை உமிழ்வு

தொழிற்சாலைகளின் புகைபோக்கிகளின் வழியே வளிமண்டலத்தில் வெளியேற்றப்படும் காற்று சார் மாசுகள் தொழிற்சாலை உமிழ்வு எனப்படுகிறது.

Integrated coastal zone management

An integrated approach for sustainably managing coastal areas, taking into account all coastal habitats and uses. (IPCC)

ஒன்றிணைந்த கடலோர மண்டல மேலாண்மை

கடலோர வாழிடங்கள், அதன் பயன்கள் போன்றவற்றை உள்ளடக்கிய, கடலோர பிரதேசங்களை வளங்குன்றா வகையில் மேலாண்மை செய்யும் ஒரு திட்டமுறை.

Integrated water resource management

A process which promotes the coordinated development and management of water, land and related resources in order to maximize economic and social welfare in an equitable manner without compromising the sustainability of vital ecosystems. (UN)

ஒன்றிணைந்த நீர்வள மேலாண்மை

நீர், நிலம் மற்றும் அது சார்ந்த வளங்கள் போன்றவற்றை பாதுகாக்க, மேலாண்மை செய்ய ஒன்றிணைந்த திட்டமாக உருவாக்கபடுவது. இது அடிப்படை தேவையான சூழல் அமைப்புகளை சீர்குலைக்காமல் பொருளாதார, சமூக நலன்களை சமமான முறையில் அதிகரித்து மக்களுக்கு வழங்க முயல்கிறது.

Intended Nationally Determined Contributions (INDC)

INDCs pair national policy setting — in which countries determine their contributions in the context of their national priorities, circumstances and capabilities — with a global framework under the Paris Agreement that drives collective action toward a zero-carbon, climate-resilient future.

INDCs are the primary means for governments to communicate internationally the steps they will take to address climate change in their own countries. INDCs reflect each country's ambition for reducing emissions, taking into account its domestic

தேசங்கள் தீர்மானிக்கும் பங்களிப்பு

பாரிஸ் ஒப்பந்தத்தின் ஒவ்வொரு நாடும் காலநிலை மாற்றத்தை கட்டுப்படுத்த தங்களால் செய்யமுடியும் பங்களிப்புகளை அந்தந்த நாட்டின் முன்னுரிமைகள், சூழ்நிலை மற்றும் திறன் ஆகியவற்றின் அடிப்படையில் முன்வைக்கும். இதனை நாம் என்கிறோம். இது தேசங்களின் கொள்கை அமைப்பை நிர்ணயிக்கின்றன.

circumstances and capabilities. Some countries also address how they'll adapt to climate change impacts, and what support they need from, or will provide to, other countries to adopt low-carbon pathways and to build climate resilience. (WRI)

Intergenerational equity/justice

Intergenerational justice is the idea that present generations have certain duties towards future generations. Climate change raises particularly pressing issues, such as which risks those living today are allowed to impose on future generations, and how available natural resources can be used without threatening the sustainable functioning of the planet's ecosystems. Moreover, when one talks about the rights of future generations this inevitably seems to raise the issue of how to balance the rights' claims of those alive today against the rights' claims of future generations. (UNICEF)

தலைமுறை கடந்த நீதி

இது தற்போதைய தலைமுறைக்கு வருங்காலத்தில் வரவிருக்கும் தலைமுறைக்கு ஆற்ற வேண்டிய கடமைகள் பற்றி கூறுகிறது. காலநிலை மாற்றம் இது போன்ற சில முக்கிய பிரச்சனைகளை உருவாக்கும். இதன் மூலம் எவ்வாறு வருங்கால தலைமுறைக்கு வரவிருக்கும் அபாயத்தை குறைப்பது; அவர்களுக்கு போதாமை வராமல் இருக்கும் வளங்களை வளங்-குன்றா முறைகள் மூலம் பயன்படுத்துவது; புவியின் சூழல் அமைப்புகள் தொடர்ந்து இயங்கு-வதற்கு வழிசெய்வது போன்றவற்றை முன்னிலை படுத்து-கிறது. மேலும் இது பற்று பேசுகையில், வருங்கால தலைமுறையின் உரிமைகளையும் தற்போது இருக்கும் தலைமுறையின் உரிமைகளையும் ஒன்றையொன்று பாதிக்காமல் எவ்வாறு சமநிலை படுத்துவது என்பது பற்றும் பேசவேண்டியது உள்ளது.

International Solar Alliance (ISA)

Conceived as a joint effort by India and France, ISA is a platform for increased deployment of solar energy technologies as a means for bringing energy access, ensuring energy security, and driving energy transition in its member countries.The ISA strives to develop and deploy cost-effective and transformational energy solutions powered by the sun to help member countries develop low-carbon growth trajectories. It aims to mobilise USD 1,000 billion of investments in solar energy solutions by 2030, while delivering energy access to 1,000 million people using clean energy solutions and resulting in installation of 1,000 GW of solar energy capacity. (ISA)

சர்வதேச சூரியஆற்றல் கூட்டமைப்பு

இந்தியா, பிரான்ஸ் நாடுகளின் ஒன்றிணைந்த முன்னெடுப்பான இது, உலக ஆற்றல் தேவை, ஆற்றல் பாதுகாப்பு, ஆற்றல் மாற்றம் போன்றவற்றில் சூரிய ஆற்றல் தொழில்நுட்பத்தை ஒரு வழிமுறையாக உருவாக்குகிறது. இதன் உறுப்பு நாடுகள் குறைந்த கரிம வளர்ச்சித் திட்டங்கள் வகுக்க; குறைந்த விலையிலான, ஆற்றல் மாற்று தீர்வுகளை வழங்க முயல்கிறது. 2030ஆம் ஆண்டிற்குள் சூரிய ஆற்றல் தொழில்நுட்பத்தில் சுமார் ஆயிரம் பில்லியன் அமெரிக்க டாலர் முதலீட்டை பெறுவதை இலக்காக கொண்டுள்ளது. இது ஆயிரம் மில்லியன் மக்களுக்கான தூய ஆற்றலை வழங்கும் கனவை நனவாக்க ஆயிரம் GW கொள்திறன் கொண்ட சூரிய ஆற்றல் கட்டுமானங்களை உருவாக திட்டமிடுகிறது.

IPBES

The Intergovernmental Science-Policy Platform on Biodiversity and Ecosystem Services (IPBES) is an independent intergovernmental body established by States to strengthen the science-policy interface for biodiversity and ecosystem services for the conservation and sustainable use of biodiversity, long-term human well-being and sustainable development (IPBES)

IPBES

பல்லுயிர் பாதுகாப்பு, நெடுங்கால மனித நலவாழ்வு மற்றும் நீடித்த வளர்ச்சி போன்றவற்றை சாதிக்க பல்லுயிர் மற்றும் சூழல் சேவைகள் மேலாண்மையில் அறிவியல் மற்றும் கொள்கை சார் முடிவுகள் எடுக்க அரசுகளால் உருவாக்கப்படும் ஒரு உலக அளவிலான தன்னிச்சையான அமைப்பு இது.

Intergovernmental Panel on Climate Change (IPCC)

IPCC is an intergovernmental body of the United Nations charged with advancing scientific knowledge about climate change caused by human activities. The IPCC informs governments about the state of knowledge on climate change, including possible response options, by examining all relevant scientific literature on the subject, including natural, economic, and social impacts and risks. (BBC)

காலநிலை மாற்றத்திற்கான சர்வதேச கூட்டமைப்பு (IPCC)

IPCC என்பது மனித செயல்பாடுகளால் ஏற்படும் காலநிலை மாற்றம் குறித்த அறிவியல் பூர்வமான புரிதல்களை ஏற்படுத்த ஐக்கிய நாடுகளின் சபையினால் உருவாக்கப்பட்ட சர்வதேச அமைப்பாகும். இது காலநிலை மாற்றத்தின் அறிவு-த்தளத்தில் இயற்கையான, பொருளாதார மற்றும் சமூக தாக்கங்கள் மற்றும் அபாயங்கள் உள்ளிட்ட அனைத்து அறிவியல் வெளியீடுகளையும் ஆய்வு செய்து, காலநிலை மாற்றம் குறித்து அரசுகளுக்கு தெரிவிப்பதோடு, அதற்கான செயல்பாடுகளுக்கும் வழிகாட்டுகிறது.

ITMO

Internationally Transferred Mitigation Outcomes (ITMO) are units from the new mechanism for the international emissions trading between Parties to the Paris Agreement. ITMOs use a carbon dioxide equivalent [CO2e] metric for a new set of greenhouse gas (GHG) mitigation results defined in Article 6 of the Paris Agreement. ITMOs differ from the previous compensation schemes in a few different ways. First, they are integrated within the participating countries' Nationally Determined Contributions (NDC). Second, they support the mitigation of global emissions (not only those of one territory), and lastly, the public

உலகளவில் இடமாற்றம் செய்யப்படும் தணிப்பு விளைவுகள் (ITMO)

பாரிஸ் ஒப்பந்தத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டதை போல உலகளாவிய உமிழ்வு வர்த்தகத்தில் நாடுகளுக்கு இடையே நடக்கும் வர்த்தகத்திற்கு உருவாக்கப்பட்ட புதிய அலகுகள் இவை. பாரிஸ் ஒப்பந்தத்தின் ஆறாம் சரத்தில் கூறப்பட்டதை போல ITMOவில் கரியமில வாயுவின் இணைமதிப்பு (equivalent) அலகாக பயன்படுத்தப்படுகி-றது. இதற்கு முந்திய திட்டத்தின் அலகுகளை ஒப்பிடுகையில் இது மிகவும் வேறுபட்டது. முதலில் இது உறுப்பு நாடுகளின் தேசிய பங்களிப்பில்

sector has a crucial role in leading negotiations. (Europian Union Emissions Trading Scheme)

இணைக்கப்படுகிறது. இரண்டாவதாக ஒரு குறிப்பிட்ட இடத்தை அல்லது உலக அளவில் உமிழ்வை குறைக்க இது முனைகிறது. இறுதியாக இதனை முடிவு செய்யும் பேச்சுவார்த்தை-களை முன்னெடுப்பதில் பொதுத்துறை பெரிய பங்காற்றுகிறது.

J

JET-P

At COP26 South Africa, with France, the EU, UK, US and Germany launched a long-term Just Energy Transition Partnership (JETP) to support South Africa's de-carbonization and the transitioning of its economy towards renewable energy sources.

நீதியான ஆற்றல்மாற்ற கூட்டமைப்பு

தென்ஆப்பிரிக்காவில் நடைபெற்ற 26ஆம் COP மாநாட்டில் பிரான்ஸ், ஐரோப்பிய யூனியன், இங்கிலாந்து, அமெரிக்கா மற்றும் ஜெர்மனி போன்ற நாடுகள் இணைந்து தென்ஆப்பிரிக்கா சரியான நீதியான முறையில் தனது பொருளாதாரத்தை புதுப்பிக்கத்தக்க ஆற்றல் மூலங்களில் இருந்து பெறுவதற்கான மாற்றத்தை நிகழ்த்த நெடுங்கால திட்டத்தை தீட்டி கொடுத்தது. இந்த நெடுங்கால திட்டகூட்டமைப்பு JET-P எனப்படுகிறது.

Joint implementation (JI)

An agreement between two parties whereby one party struggling to meet its emission reductions under the Kyoto Protocol earns emission reduction units from another party's emission removal project. The JI is a flexible and cost-efficient way of fulfilling Kyoto agreements while also encouraging foreign investment and technology transfer. (BBC)

இணைந்து அமல்படுத்துவது

இரண்டு தரப்பினர் இடையே போடப்படும் உமிழ்வு குறைப்பு ஒப்பந்தம் இது. இதில் ஒரு தரப்பு அதன் உமிழ்வு இலக்குகளை அடைய தடுமாறும்; மற்றொன்று உமிழ்வு குறைப்பு திட்டங்கள் மூலம் 'உமிழ்வு குறைப்பு புள்ளிகளை' பெற்றிருக்கும். முதல் தரப்பு இந்த புள்ளிகளை வாங்கி தனது இலக்கின் அளவை கூடிக்கொள்ளும். இந்த திட்டம் க்யோடோ நெறிமுறைகளின் இலக்கினை அடைய

மிகவும் நெகிழ்வுத்தன்மை உடைய, செலவு குறைந்த வழியாகும். இது பன்னாட்டு முதலீடு, தொழில்நுட்ப பரிமாற்றம் போன்றவற்றையும் ஊக்குவிக்கிறது.

Just transition

A Just Transition means greening the economy in a way that is as fair and inclusive as possible to everyone concerned, creating decent work opportunities and leaving no one behind. A Just Transition involves maximizing the social and economic opportunities of climate action, while minimizing and carefully managing any challenges – including through effective social dialogue among all groups impacted, and respect for fundamental labour principles and rights. (ILO)

நீதியான/சரியான மாற்றம்

சரியான மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய வழிகளில் ஒரு பொருளாதாரத்தை பசுமையாக்குவது. இதில் அனைவரையும் இயன்றவரை உள்ளடக்கி அவர்களுக்கான தொழில் வாய்ப்புகளை உருவாக்கி தருவது. காலநிலை செயல்திட்டத்தில் அதிகபட்ச சமூக பொருளாதார வாய்ப்புகளை உருவாக்குவது; தடைகளை கவனமாக மேலாண்மை செய்வது; பாதிக்கப்படும் குழுக்கள் அனைத்தையும் உள்ளடக்கி அவர்களுடன் கலந்தாலோசித்து முடிவெடுத்து; அடிப்படை தொழிலாளர் உரிமைகள் மற்றும் நெறிமுறைகளை மதித்து நிறைவேற்றுவது அநீதியற்ற மாற்றம் எனப்படுகிறது.

K

Kyoto Protocol

A protocol attached to the UN Framework Convention on Climate Change, which sets legally binding commitments on greenhouse gas emissions. Industrialised countries agreed to reduce their combined emissions to 5.2% below 1990 levels during the five-year period 2008-2012. It was agreed by governments at a 1997 UN conference in Kyoto,

க்யோடோ நெறிமுறை

பசுமை இல்ல வாயுக்களின் உமிழ்விற்கு சட்டரீதியாக கட்டுப்படுத்தப்படும் ஒப்புதலை உருவாக்கும், UNFCCC உடன் உருவாக்கப்பட்ட நெறிமுறை இது. தொழில்-மயப்பட்ட நாடுகள் 2008-2012 ஐந்தாண்டிற்குள், தமது கூடு உமிழ்வின் அளவை 1990ஆம் ஆண்டு அளவில் 5 சதவிகிதம் குறைக்க ஒப்புக்கொண்டது. இது 1997ஆம் ஆண்டே க்யோடோ நகரில் நடைபெற்ற

Japan, but did not legally come into force until 2005. A different set of countries agreed a second commitment period in 2013 that will run until 2020. (BBC)

ஐ.நா. சபை கூட்டத்தில் முடயு செய்யப்பட்டது. ஆனால் 2005ஆம் ஆண்டு வரை அது சட்டரீதியாக கட்டுப்படுத்தும் ஒப்பந்தம் அல்ல. சில நாடுகள் இதன் இரண்டாம் கட்டமாக 2013ஆம் ஆண்டு 2020வரை செயல்படுத்தக்கூடிய நெறிமுறை ஒன்றை உருவாக்கியது.

L

La Nina

La Niña refers to the large-scale cooling of the ocean surface temperatures in the central and eastern equatorial Pacific Ocean, coupled with changes in the tropical atmospheric circulation, namely winds, pressure and rainfall. It usually has the opposite impacts on weather and climate as El Niño, which is the warm phase of the so-called El Niño Southern Oscillation (ENSO). (WMO)

லா நினா

இது மத்திய மற்றும் கிழக்கு வெப்பமண்டல பசிபிக் பெருங்கடல் பரப்பின் வெப்பநிலையில் ஏற்படும் அதிதீவிர குளிரினை குறிக்கிறது. இது மேலும் வெப்பமண்டலத்தின் வளிமண்டல சுழற்சி, காற்று, மலைபோழிவு, காற்றழுத்தம் போன்றவற்றுடனும் தொடர்புடையது. 'எல் நினோ-தெற்கத்திய அலைவின்' வெப்பப்பிரிவான எல்-நினோவின் வானிலை மற்றும் காலநிலை விளைவுகளுக்கு எதிர்மறையாக லா-நினா செயல்படுகிறது.

Land use

Land use refers to the total of arrangements, activities and inputs undertaken in a certain land cover type (a set of human actions). The term land use is also used in the sense of the social and economic purposes for which land is managed (e.g., grazing, timber extraction, conservation and city dwelling). In national greenhouse gas inventories, land use is classified according to the IPCC land use categories

நிலப் பயன்பாடு

ஒரு குறிப்பிட்ட நிலத்தில் நடைபெறும் மனித நடவடிக்கைகள், ஏற்பாடுகள், உள்ளீடுகள் போன்றவற்றின் மொத்தத்தை குறிப்பது நிலப்பயன்பாடு. ஒரு நிலம் எவ்வாறான சமூக பொருளாதார தேவைகளுக்கு உபயோகப்படுத்தப்படுகிறது (உதாரணமாக மேய்ச்சல், மரம், பாதுகாப்பு நடவடிக்கை, நகரமயம் போன்றவை) என்பதை குறிக்கவும் இந்த பதம் பயன்படுகிறது.

of forest land, cropland, grassland, wetland, settlements, other. (IPCC)

தேசிய பசுமைஇல்ல வாயுக்கள் அட்டவணையில் நிலப்பயன்பாடு IPCCயின் நிலப்பயன்பாடு பிரிவுகளின் படி காட்டு நிலம், பயிர்/விவசாய நிலம், புல்வெளி, ஈரநிலம், குடியிருப்பு என்று பிரிக்கப்பட்டுள்ளது.

LDCs

Least Developed Countries represent the poorest and weakest countries in the world. The current list of LDCs includes 49 countries - 33 in Africa, 15 in Asia and the Pacific, and one in Latin America.

மிகவும் வளர்ச்சி குன்றிய நாடுகள் (LDCs)

மிகவும் வளர்ச்சி குன்றிய நாடுகள் என்பது உலகின் மிகவும் ஏழ்மையான, பலமற்ற நாடுகளை குறிக்கிறது. இந்த குழுவில் 49 நாடுகள் தற்போது உள்ளன: ஆப்பிரிக்காவில் 33 நாடுகள், ஆசியா மற்றும் பசிபிக்கில் 15 நாடுகள், லத்தின் அமெரிக்காவில் ஒரு நாடும் உள்ளன.

LEED

LEED (Leadership in Energy and Environmental Design) is the most widely used green building rating system in the world. Available for virtually all building types, LEED provides a framework for healthy, highly efficient, and cost-saving green buildings. LEED enables green buildings to prove their potential to mitigate climate change through a holistic focus on efficiency and sustainability—and beyond merely cutting down on energy and resources, LEED rewards projects that get to net zero, or even generate positive energy returns to the grid. (U.S. Green Building Council)

LEED

ஆற்றல் மற்றும் சூழல் வடிவமைப்பில் முன்மாதிரி என்று குறிப்பிடப் படும் இது, உலக அளவில் பசுமை கட்டுமானங்களின் முக்கிய அளவுகோலாக இருக்கின்றது. அனைத்து கட்டிடங்களுக்குமான இந்த அளவீடு, ஆரோக்கியமான, அதிகதிறன் கொண்ட, விலை குறைந்த பசுமை கட்டிடங்களை உருவாக உதவுகிறது. இது பசுமை கட்டிடங்கள் காலநிலை மாற்ற பாதிப்புகளை குறைக்கும் திறன் உடையதாக முன்மொழிகிறது. திறன் மற்றும் வளங்குன்றா வளர்ச்சிக்கு முக்கியத்துவம் அளிக்கும் இது, ஆற்றல் மற்றும் வளங்களின் பயன்பாட்டை தடுக்காமல், நிகர இழப்பற்ற ஒரு திட்டமாக; சில இடங்களில் மத்திய மின்விநியோக அமைப்பிற்கு கூடுதல் ஆற்றலை வழங்கும் திட்டமாக இருக்கின்றது.

Lignite

Lignite also referred to as brown coal, contains 25%–35% carbon and has the lowest energy content of all coal ranks. Lignite coal deposits tend to be relatively young and were not subjected to extreme heat or pressure. Lignite is crumbly and has high moisture content, which contributes to its low heating value. (US Energy Information Administration)

பழுப்பு நிலக்கரி

இந்த நிலக்கரியின் வகை பழுப்பு நிறத்தில் இருக்கும். இதில் 25 முதல் 35 சதவிகிதம் மட்டுமே கரிமம் இருக்கும். நிலக்கரி வகைகளிலேயே மிகவும் குறைவான ஆற்றல் கொள்கலன் கொண்டது. இதன் கிடங்குகளும் சமீபத்தில் உருவானதாக இருக்கும். இதனால் பெரிய அழுத்ததிற்கோ, வெப்பநிலைக்கோ உட்பட்டிருக்காது. எழிதில் நொறுங்கக்கூடியதாகவும்,

அதிக ஈரப்பதமும் கொண்டதால் இதன் வெப்ப ஆற்றல் அளவு மிகவும் குறைவே.

Liquefied Natural Gas (LNG)

LNG is natural gas that has been cooled to a liquid state (liquefied), at about -260° Fahrenheit, for shipping and storage. This liquefaction process makes it possible to transport natural gas to places natural gas pipelines do not reach and to use natural gas as a transportation fuel. (US Energy Information Administration)

திரவமாக்கப்பட்ட இயற்கை எரிவாயு

இது -260°F என்ற அளவிற்கு குளிர்விக்கப்பட்டு திரவ நிலையை அடைந்த இயற்கை எரிவாயு ஆகும். சேமிப்பதற்கும், இடம்பெயர்வதற்கும் இயற்கை எரிவாயு இவ்வாறு மாற்றப்படுகிறது. இது திரவமாக்கும் முறை, இயற்கை வாயு குழாய்கள் செல்ல முடியாத இடத்திற்கு இவற்றை கொண்டு செல்லவும்; போக்குவரத்திற்கான எரிவாயுவாக உபயோகப்படுத்தவும் பயன்படுகிறது.

Litigation (Climate)

Climate litigation refers to cases that relate specifically to climate change mitigation, adaptation, or the science of climate change. (UNEP)

காலநிலை பற்றி வழக்காடல்

காலநிலை வழக்காடல் என்பது காலநிலை மாற்ற பாதிப்புகள் குறைப்பு, தகவமைப்பு, மற்றும் அதன் அறிவியலோடு தொடர்புகொண்ட வழக்குகளை குறிக்கிறது.

Livelihood

The resources used and the activities undertaken in order to live. Livelihoods are usually determined by the entitlements and assets to which people have access. Such assets can be categorised as human, social, natural, physical or financial. (IPCC)

வாழ்வாதாரம்

இருத்தலுக்காக பயன்படுத்தப்படும் வளங்களும், அது சார்ந்த செயல்பாடுகளும். வாழ்வாதாரம் என்பது பொதுவாக மக்களுக்கு என்னென்ன சொத்துக்கள், வளங்கள் போன்றவற்றின் மீது உரிமை உள்ளது என்பதை வைத்து கணக்கிடப்படுகிறது. இந்த சொத்துக்கள் மானிட, சமூக, இயற்கை, பருப்பொருள் மற்றும் பொருளாதார தன்மையதாக பிரிக்கப்படுகிறது.

Lock-in

A situation in which the future development of a system, including infrastructure, technologies, investments, institutions, and behavioural norms, is determined or constrained ("locked in") by historic developments. (IPCC AR6)

கட்டுப்பட்ட ஒன்று

ஒரு அமைப்பின் உள்கட்டமைப்பு, தொழில்நுட்பம், முதலீடு, நிறுவனம், செயல்பாடு போன்ற எந்த ஒரு வருங்கால முன்னேற்றமும் அதன் கடந்தகால நிகழ்வுகளால் கட்டுப்பட்ட ஒன்றாக இருப்பது.

Long-term strategies

Long-term strategies are central to achieving the goal of reaching net-zero global emissions, limiting warming, and preventing some of the worst impacts of climate change. These strategies set out long-term goals for climate and development and direct short-term decision-making to support the necessary shifts to limit global warming and lift people out of poverty. (WRI)

நெடுங்கால திட்டங்கள்

உலகளவில் நிகர உமிழ்வின்மையை அடைவதற்கும், புவி வெப்பமாதலை குறைப்பதற்கும், காலநிலை மாற்றத்தின் சில மோசமான பாதிப்புகளை தடுப்பதற்கும் இந்த நெடுங்கால திட்டங்கள் மையமாக உள்ளன. இவை காலநிலை மற்றும் வளர்ச்சி போன்றவற்றில் சில நெடுங்கால இலக்குகளை வைக்கும் அதே நேரம்; புவி வெப்பமாதல், வறுமை ஒழிப்பு போன்றவற்றில் தேவையான மாற்றங்களை உருவாக்க குறுகிய கால முடிவெடுத்தலையும் மேற்கொள்கிறது.

Loss and Damage

Research has taken Loss and Damage to refer to political debate under the UNFCCC following the establishment of the Warsaw Mechanism on Loss and Damage in 2013, which is to 'address loss and damage associated with impacts of climate change, including extreme events and slow onset events, in developing countries that are particularly vulnerable to the adverse effects of climate change.' (IPCC)

இழப்பும் சேதமும்

2013ஆம் ஆண்டு UNFCCCஇல் உருவாக்கப்பட்ட இழப்பு மற்றும் சேதத்திற்கான வார்சா முறையின் படி, இந்த இழப்பு மற்றும் சேதத்திற்கான ஆய்வுகள் அரசியல் விவாதமாக மாறியது. இது காலநிலை பாதிப்புகளால் எளிதில் பாதிக்கப்படக் கூடிய வளரும் நாடுகளில் காலநிலை மாற்றம், (அதிதீவிர மாற்றங்கள் மற்றும் மெதுவான மாற்றங்கள்) போன்றவற்றினால் உருவாகும் இழப்பு மற்றும் சேதத்தினை குறிப்பிட்டு பேசுகிறது.

Low-carbon scenarios

Greenhouse gas emissions slow, peak mid-century, and then drop rapidly, leading to lower emissions that cause less severe warming.

This scenario assumes that greenhouse gas emissions increase until about 2050 and then rapidly decline. This decline in emissions leads to less severe global warming than the alternative "business as usual" or high carbon scenario. This is also called the "low carbon" future, and is based on the RCP4.5 emissions scenario. (Climate Atlas)

குறைகரிம காட்சிமாதிரிகள்

உலகளாவிய பசுமை இல்ல வாயுக்களின் உமிழ்வின் வேகம் குறைந்து, நூற்றாண்டின் மத்தியில் உச்சம் பெற்று அதன் பின்னர் சரிகின்றது. இந்த குறைவான உமிழ்வு குறைவான வெப்பமயமாதலையே உருவாக்குகிறது. இந்த காட்சி மாதிரி 2050ஆம் ஆண்டு வரை பசுமைஇல்ல வாயுக்களின் உமிழ்வு அதிகரித்து பின்னர் வீழும் என்கிறது. இது இதற்கு எதிரான காட்சி மாதிரியான 'இயல்பான அதிகரிப்பு' அல்லது அதிககரிம காட்சிமாதிரியை மறுக்கிறது. இது RCP4.5 காட்சிமாதிரியின் அடிப்படையில், 'குறைகரிம வருங்காலமாக' குறிக்கப்படுகிறது.

LULUCF

This refers to Land Use, Land-Use Change, and Forestry. Activities in LULUCF provide a method of offsetting emissions, either by increasing the removal of greenhouse gases from the atmosphere (i.e. by planting trees or managing forests), or by reducing emissions (i.e. by curbing deforestation and the associated burning of wood). (BBC)

LULUCF

நிலப்பயன்பாடு, நிலப்பயன்பாட்டில் மாற்றம் மற்றும் வனமேலான்மை ஆகியவற்றை ஒருங்கே குறிக்கிறது. இது வளிமண்டலத்தில் இருந்து பசுமைஇல்ல வாயுக்களை நீக்கியோ (மரம் வளர்ப்பு மற்றும் வனப்பாதுகாப்பு) அல்லது உமிழ்வை குறைத்தோ (காடழிப்பை தடுத்தல் மற்றும் மரத்தை எரிப்பதை குறைபப்து) செயல்பட திட்டங்களை வகுக்கிறது.



M

Major economies forum on energy and climate

A forum established in 2009 by US President Barack Obama to discuss elements of the agreement that will be negotiated at Copenhagen. Its members - Australia, Brazil, Canada, China, the European Union, France, Germany, India, Indonesia, Italy, Japan, Mexico, Russia, South Africa, South Korea, the UK and the US - account for 80% of greenhouse gas emissions. The forum is a modification of the Major Economies Meeting started by the former President George Bush, which was seen by some countries as an attempt to undermine UN negotiations. (BBC)

ஆற்றல் மற்றும் காலநிலை குறித்து முக்கிய பொருளாதார கூட்டமைப்பு

ஆண்டு அமெரிக்க அதிபர் பராக் ஒபாமாவினால் உருவாக்கப்பட்ட கூட்டமைப்பு இது. கோபன்ஹெகனில் விவாதிக்கப்பட்ட ஒப்பந்தங்களின் கூறுகளை முக்கிய பள்ளிகளை விவாதிக்க இது உருவாக்கப்பட்டது. இதன் உறுப்பு நாடுகளான: ஆஸ்திரேலியா, பிரேசில், கனடா, சீனா, ஐரோப்பிய யூனியன், பிரான்ஸ், ஜெர்மனி, இந்தியா, இந்தோனேசியா, இத்தாலி, ஜப்பான், மெக்சிகோ, ரஷ்யா, தென் ஆப்பிரிக்கா, தென் கொரியா, பிரிட்டிஷ் மற்றும் அமெரிக்கா போன்றவை மட்டும் உலகின் 80 சதவிகித உமிழ்வை அளிக்கின்றன. இந்த கூட்டமைப்பு முன்னாள் அதிபர் ஜார்ஜ் புஷ்ஷினால் உருவாக்கப்பட்ட முக்கிய பொருளாதார கூட்டமைப்பின் மாற்றியமைக்கப்பட்ட வடிவம். ஐ.நா சபையின் உரையாடல்களை இந்த கூட்டமைப்பு குறைத்து காட்டுவதாக சில நாடுகள் எண்ணியிருந்தன.

Maladaptive actions (Maladaptation)

Actions that may lead to increased risk of adverse climate-related outcomes, including via increased GHG emissions, increased vulnerability to climate change, or diminished welfare, now or in the future. Maladaptation is usually an unintended consequence. (IPCC)

தவறான தகவமைப்பு செயல்திட்டங்கள்

காலநிலை சார்ந்த பாதிப்புகள், பசுமை இல்ல வாயுக்களின் உமிழ்வு, காலநிலை மாற்றத்தால் எளிதில் பாதிக்கும் தன்மை, நலன் குறைவு போன்றவற்றை குறைப்பதற்கு பதிலாக அதனை அதிகரிக்கும் செயல்திட்டம். இது பொதுவாக எதிர்பார்க்கபடாத விளைவாக இருக்கும்.

Market-based mechanisms

Policy instruments that use markets, price and other economic variables to provide incentives for greenhouse gas emitters to reduce their emissions or achieve carbon neutrality by addressing negative externalities. (IISD)

சந்தைசார் அமைப்புகள்

சந்தை, விலை மற்றும் பிற பொருளாதார காரணிகளின் மூலம் பசுமை இல்ல வாயுவை உமிழ்பவர்களுக்கு அவற்றை குறைப்பதற்கான ஊக்கத் தொகையை வழங்கி கார்பன் சமநிலையை அடைய உருவாக்கப்படும் திட்டங்கள்.

Meteorology

Meteorology is the science dealing with the atmosphere and its phenomena, including both weather and climate. (IPCC)

வானிலையியல்

வளிமண்டலத்தின் தன்மை மற்றும் அதன் இயக்கங்கள் (வானிலை மற்றும் காலநிலை) போன்றவற்றை படிக்கும் அறிவியல்.

Methane

Methane is the second most important man-made greenhouse gas. Sources include both the natural world (wetlands, termites, wildfires) and human activity (agriculture, waste dumps, leaks from coal mining). (BBC)

மீத்தேன்

மனிதன் உருவாக்கிய இரண்டாவது மிக முக்கியமான பசுமையில்ல வாயு. இதன் உருவாக்கம், ஈரநிலங்கள், கரையான்கள், காட்டுத்தீ போன்ற இயற்கையான ஒன்றாகவோ; விவசாயம், குப்பைகூளம், நிலக்கரி சுரங்க உமிழ்வு போன்ற செயற்கையான ஒன்றாகவோ இருக்கலாம்.

Microclimate

The term microclimate describes the condition of air in a certain closed space, usually referring to an occupational setting. The principle parameters of microclimate are air temperature, air pressure, air velocity, air humidity, and heat radiation, and their interactions. (Encyclopedia of Public Health)

நுண் காலநிலை

ஒரு மூடப்பட்ட அறையில் (பொதுவாக தொழில் நடைபெறும் இடம்) உள்ள காற்றின் தன்மையை இந்த பதம் விளக்குகிறது. இதன் முக்கிய காரணிகள் காற்றின் வெப்பநிலை, காற்றின் அழுத்தம், காற்றின் வேகம், காற்றின் ஈரப்பதம், வெப்ப கதிர்வீச்சு மற்றும் இவற்றின் இடையிலான தொடர்பு ஆகியவை.

Migration

The International Organization for Migration (IOM) defines migration as 'The movement of a person or a group of persons, either across an international border, or within a State. It is a population movement, encompassing any kind of movement of people, whatever its length, composition and causes; it includes migration of refugees, displaced persons, economic migrants, and persons moving for other purposes, including family reunification.' (IPCC)

புலம்பெயர்தல்

ஒரு அரசின் எல்லைக்குள்ளோ, அல்லது உலகளாவிய எல்லைகளுக்கு இடையிலோ தனிநபராகவோ அல்லது குழுவாகவோ நகர்தலை இடம்பெயர்த்த என்கிறது புலம்பெயர்தலுக்கான சர்வதேச அமைப்பு. இது மக்களின் இடம்பெயர்வு. எவ்வளவு தூரமாக இருப்பினும், வேறுபட்ட மக்கள் கலவையாக இருப்பினும், இடம்பெயர்தலுக்கான காரணம் அகதியாகவோ, அப்புறப்படுத்தப்பட்ட மக்களாகவோ, பொருளாதார இடம்பெயர்வாகவோ, குடும்பத்தை மீண்டும் சந்திக்க என்று எந்த காரணமாகவும் அது இருக்கலாம்.

Minimum Support Price (MSP)

The Indian Government's price policy for major agricultural commodities seeks to ensure remunerative prices to the growers for their produce with a view to encouraging higher investment and production and to safeguard the interest of consumers by making available supplies at reasonable prices. Towards this end, Government announces Minimum Support Prices (MSPs) for 22 mandated crops. (Department of Agriculture and Farmers Welfare)

குறைந்தபட்ச ஆதார விலை

முக்கியமான விவசாய உற்பத்தி பொருட்களுக்கு இந்திய அரசாங்கத்தினால் நிர்ணயிக்கப்படும் குறைந்தபட்ச விலை இது. இது விவசாயிகளுக்கு அவர்களின் உற்பத்தியில் நஷ்டம் வராமல் இருப்பதற்கும், அவர்களை மேலும் விவசாயத்தில் முதலீடு செய்யவும், உற்பத்தியை பெருக்கவும் ஊக்கப்படுத்துவதாக உள்ளது. மேலும் இது நுகர்வோரையும் பாதிக்காத வண்ணம் நிர்ணயம் செய்யப்படுகின்ற விலை. தற்போது அரசு 22 முக்கிய பயிர்களுக்கு குறைந்தபட்ச ஆதார விலையை நிர்ணயம் செய்கிறது.

Mitigation (of climate change)

A human intervention to reduce the sources or enhance the sinks of greenhouse gases. (IPCC)

விளைவை தணித்தல் (காலநிலை மாற்றம்)

காலநிலை மாற்றத்தில் இது பசுமை இல்ல வாயுக்களின் ஆதாரங்களை குறைப்பதற்கான அல்லது அதன் உறிஞ்சிகளை அதிகரிப்பதற்கான மனித தலையீடு.

Mitigation (of disaster risk and disaster)

The lessening of the potential adverse impacts of physical hazards (including those that are human-induced) through actions that reduce hazard, exposure, and vulnerability. (IPCC)

விளைவை தணித்தல் (பேரழிவு அல்லது அதற்கான அபாயங்களின் விளைவுகளை தணித்தல்):

நடைபெறும் ஆபத்துக்களில் இருந்து செயல்திட்டங்கள் மூலம் அதன் அபாயம், எளிதில் பாதிக்கும் தன்மை போன்றவற்றை குறைப்பது.

Montreal protocol

The Montreal Protocol on Substances that Deplete the Ozone Layer is the landmark multilateral environmental agreement that regulates the production and consumption of nearly 100 man-made chemicals referred to as ozone depleting substances (ODS). When released to the atmosphere, those chemicals damage the stratospheric ozone layer, Earth's protective shield that protects humans and the environment from harmful levels of ultraviolet radiation from the sun. Adopted on 16 September 1987, the Protocol is to date the only UN treaty ever that has been ratified every country on Earth - all 198 UN Member States. The Montreal Protocol phases down the consumption and production of the different ODS in a stepwise manner, with different timetables for developed and developing countries. September 16 each year is commemorated as World Ozone Day. (UNEP)

மாண்ட்ரியல் நெறிமுறை

இந்த நெறிமுறை ஓசோன் படலத்தை பாதிக்கக் கூடிய பொருட்களை பற்றிய மிகவும் பிரசித்தி பெற்ற பல்முனை சூழல் ஒப்பந்தம். இது ஒசோனை பாதிக்க கூடிய நூற்றுக்கும் மேற்பட்ட வேதிப்பொருட்களின் உற்பத்தியையும் உபயோகத்தையும் தடை செய்துள்ளது. இந்த பொருட்கள் வெளியிடப்படும் போது அது வளிமண்டலத்தில் உள்ள சூரியனின் ஆபத்தான புறஊதா கதிர்களில் இருந்து மனிதர்களையும் சூழலையும் பாதுகாக்கும் ஓசோன் படலத்தை அழிக்கின்றன. 87ஆம் ஆண்டு செப்டம்பர் 16இல் ஏற்றுக்கொள்ளப்பட்ட இந்த ஒப்பந்தம் மட்டுமே ஐ.நாவின் 198 உறுப்பினர் நாடுகளும் கையெழுத்திட்ட ஒரே உலக சூழல் ஒப்பந்தம் ஆகும். இந்த நெறிமுறை ஒசோனை பாதிக்கும் பொருட்களின் உற்பத்தி மற்றும் பயன்பாட்டை படிப்படியாக குறைக்க வளரும் மற்றும் வளர்ந்த நாடுகளுக்கு வெவ்வேறு விதமான வழிமுறைகளை அளிக்கிறது. இதனால் செப்டம்பர் 16 உலக ஓசோன் தினமாக அனுசரிக்கப்படுகிறது.

Multilateral finance

Multilateral climate funds play an important role in supporting countries to adopt low-emission, climate resilient development trajectories. They have a role in capacity building, research, piloting and demonstrating new approaches and technologies, and removing barriers to other climate finance flows.

The multilateral climate funds also hold critical political significance, reflecting an acknowledgement by developed countries for historical greenhouse gas emissions and in line with the commitments made by developed countries under the UNFCCC to support developing countries mitigate and adapt to climate change. (Climate Funds Update)

பல்தரப்பு காலநிலை நிதி

இது உலக அளவில் நாடுகள் உமிழ்வை குறைப்பதற்கும், காலநிலை மாற்றம் அபாயமற்ற வளர்ச்சி பாதையில் செல்வதற்கும் மிக முக்கிய துணையாக உள்ளது. மேலும் இவை திறன் வளர்ப்பிலும், ஆராய்ச்சியிலும், புதிய வழிமுறைகள் மற்றும் தொழில்நுட்பங்களை முன்னிறுத்தவும் உருவாக்கவும், மற்றும் பிற காலநிலை நிதிகள் செல்வதற்கான தடைகளை தாண்டவும் உதவுகிறது.

இந்த பலதரப்பு காலநிலை நிதி மேலும் ஒரு முக்கிய அரசியல் முக்கியத்துவம் பெற்றது. இதனை ஏற்பதன் மூலம் வளர்ந்த நாடுகள் வரலாற்றில் அதிக பசுமை இல்ல வாயுக்களை வெளியேற்றியதை ஒப்புக்கொண்டு, தற்போது அதனால் பாதிக்கப்படும் வளரும் நாடுகளுக்கு காலநிலை மாற்ற பாதிப்புகளில் இருந்து தப்பவும் தகவமைக்கவும் உதவ முன்வர வேண்டிய பொறுப்பையும் ஏற்றுக்கொண்டதாக பார்க்கலாம்.

N

National action plan (NAPCC)

The National Action Plan on Climate Change (NAPCC) was released on 30th June 2008. It outlines a national strategy that aims to enable the country to adapt to climate change and enhance the ecological sustainability of India's development path. It stresses that maintaining a high growth rate is essential for increasing living standards of the vast majority of people of India and reducing their vulnerability to the impacts of climate change. There are eight — National Mission which form the core of the National Action Plan. (PIB India)

தேசிய செயல்திட்டம்

காலநிலை மாற்றத்திற்கான தேசிட செயல்திட்டம் 2008ஆம் ஆண்டு ஜூன் 30 அன்று வெளியிடப்ப-ட்டது. இது காலநிலை மாற்றத்திற்கு ஏற்றாற்போல் தகவமைக்கவும், இந்தியாவின் வளர்ச்சிப் பாதையில் சூழலின் வளங்குன்றா தன்மையை மேம்படுத்தவும் தேசிய அளவில் இலக்குகளை வரிசைப்படு-த்தியது. இந்தியாவின் பல்தரப்பட்ட மக்களின் வாழ்வின் தரத்தை அதிகரிக்கவும், காலநிலை மாற்றத்தின் பாதிப்புகளை குறைக்கவும் இந்தியா அதிவேக வளர்ச்சியை தக்கவைக்க வேண்டும் என்று முன்மொழிந்தது. இந்த செயல்திட்டத்தின் அடிப்படையாக எட்டு இலக்குகள் உள்ளன.

Nationally Determined Contributions (NDCs)

A term used under the United Nations Framework Convention on Climate Change (UNFCCC) whereby a country that has joined the Paris Agreement outlines its plans for reducing its emissions. Some countries' NDCs also address how they will adapt to climate change impacts, and what support they need from, or will provide to, other countries to adopt low-carbon pathways and to build climate resilience. (IPCC)

தேசங்கள் தீர்மானிக்கும் பங்களிப்பு

பாரிஸ் ஒப்பந்தத்தில் இணைந்த நாடுகள் உமிழ்வைக் குறைக்க தாமே உருவாக்கிய திட்டங்களை குறிக்க UNFCCஇல் பயன்படுத்தப்படும் பதம். சில நாடுகளின் இந்த பங்களிப்பு திட்டங்களில் காலநிலை மாற்றங்களுக்கு அவை எவ்வாறு தகவமைத்துக் கொள்ளும், அதற்கு எத்தகைய உதவி வேண்டும், குறைவான கரிம பயன்பாட்டினை அடைய, காலநிலை மீள்தன்மையை உருவாக்க பிற நாடுகளுக்கு எத்தகைய உதவிகளை வழங்கும் போன்றவையும் குறிப்பிடப் பட்டிருக்கும்.

Natural greenhouse effect

The natural level of greenhouse gasses in our atmosphere, which keeps the planet about 30C warmer than it would otherwise be - essential for life as we know it. Water vapour is the most important component of the natural greenhouse effect. (BBC)

இயற்கையான பசுமை இல்ல விளைவு

இயற்கையாகவே நமது வளிமண்டலத்தில் உள்ள பசுமைஇல்ல வாயுக்கள்தான் புவியின் வெப்பநிலையை 30°C க்கு மேல் நிலைபெற உதவுகிறது. இது புவியில் உயிரினங்களின்

இருத்தலுக்கு மிக முக்கிய தேவை. நீராவி இந்த இயற்கையான பசுமைஇல்ல விளைவின் மிக முக்கிய கூறு.

Nature-based solutions

Nature-based solutions are actions to protect, sustainably manage, or restore natural ecosystems, that address societal challenges such as climate change, human health, food and water security, and disaster risk reduction effectively and adaptively, simultaneously providing human well-being and biodiversity benefits. (World Bank)

இயற்கைசார் தீர்வுகள்

காலநிலை மாற்றம், மனித நலம், உணவு மற்றும் நீர் பாதுகாப்பு போன்ற சமூக சவால்களை நிறைவேற்ற இயற்கையான சூழல் அமைப்புகளை பாதுகாப்பது, வளங்குன்றா வகையில் மேலாண்மை செய்வது, மீட்டெடுப்பது போன்றவு இயற்கை சார் தீர்வுகளில் வரும். மேலும் இது பேரழிவு அபாயத்தை குறைத்து, அதற்கு தகவமைக்க செய்கிறது. இதனால் மனித நலம், உயிர்ச்சூழல் போன்றவை பலனடைகின்றன.

Negative emissions

Carbon dioxide removal (CDR) refers to the process of removing CO2 from the atmosphere. Since this is the opposite of emissions, practices or technologies that remove CO2 are often described as achieving 'negative emissions'.

There are two main types of CDR: either enhancing existing natural processes that remove carbon from the atmosphere (e.g., by increasing its uptake by trees, soil, or other 'carbon sinks') or using chemical processes to, for example, capture CO2 directly from the ambient air and store it elsewhere (e.g., underground). (IPCC)

எதிர்மறை உமிழ்வு

வளிமண்டலத்தில் இருக்கும் கரியமில வாயுவை நீக்கும் முறையை இவ்வாறு கூறலாம். இது உமிழ்விற்கு எதிராக அதை நீக்குவதால் இந்த முறைகளை 'எதிர்மறை உமிழ்வு' என்கின்றனர்.

இந்த முறையில் இரண்டு முக்கியமான வகைகள் உள்ளன: ஒன்று இயற்கையாகவே கரியமில வாயுவை நீக்கும் முறைகளை வலுப்படுத்துவது. (உதாரணமாக, மரங்கள், கரியமில வாயுவை உரியும் மண், பிற உறிஞ்சுகளை அதிகரிப்பது). இன்னொன்று வேதியியல் முறைகளை பயன்படுத்தி கரியமில வாயுவை பிரித்து தனியே சேகரிப்பது. (நிலத்தடியில் சேமிப்பது)

Net zero CO2 emissions

Net zero carbon dioxide (CO2) emissions are achieved when anthropogenic CO2 emissions are balanced globally by anthropogenic CO2 removals over a specified period. Net zero CO2 emissions are also referred to as carbon neutrality. (IPCC)

நிகர கரியமில வாயு உமிழ்வின்மை

ஒரு குறிப்பிட்ட காலஅளவில் மனிதனால் உருவாக்கப்பட்ட கரியமில வாயுவின் வெளியேற்றமும் அதன் நீக்கமும் சரிசமம் ஆக்கபட்டால் உலக அளவில் கரியமில வாயு நிகர உமிழ்வின்மை அடைந்துவிட்டதாகிறது. இதனை கார்பன் அல்லது கரிம சார்பின்மை என்றும் அழைக்கின்றனர்.

Net zero emissions

Net zero emissions are achieved when anthropogenic emissions of greenhouse gases to the atmosphere are balanced by anthropogenic removals over a specified period. Where multiple greenhouse gases are involved, the quantification of net zero emissions depends on the climate metric chosen to compare emissions of different gases (such as global warming potential, global temperature change potential, and others, as well as the chosen time horizon). (IPCC)

நிகர உமிழ்வின்மை

ஒரு குறிப்பிட்ட காலஅளவில் பசுமை இல்ல வாயுக்களின் வெளியேற்றமும் அதன் நீக்கமும் சரிசமம் ஆக்கபட்டால் நிகர உமிழ்வின்மை அடைந்துவிட்டதாகிறது. அதாவது மொத்த உமிழ்வு பூஜ்யம் ஆகிறது. பல்வேறு விதமான பசுமை இல்ல வாயுக்கள் இருப்பின், நிகர உமிழ்வின்மை அளவீடு அந்த பல்வேறு வாயுக்களை ஒப்பீடு செய்ய எந்த விதமான காலநிலை அலகு பயன்படுத்தபடுகிறது என்பதை பொறுத்துள்ளது. (உதாரணமாக, புவி வெப்பமயமாக்குதல் திறன், புவியின் வெப்பநிலையை மாற்றும் திறன் போன்றவை; குறிப்பிட்ட கால வரையறையும் இதில் அடங்கும்).

Nitrogenous emissions

Nitrogen Oxides are a family of poisonous, highly reactive gases. These gases form when fuel is burned at high temperatures. NOx pollution is emitted by automobiles, trucks and various non-road vehicles (e.g., construction equipment, boats, etc.) as well as industrial sources such as power plants, industrial boilers, cement kilns, and turbines. (EPA)

நைட்ரஜனிய உமிழ்வு

நைட்ரஜன் ஆக்சைடுகள் விஷத்தன்மை கொண்ட, அதிகம் வினைபுரியக்கூடிய வாயுவகை. அதிக வெப்பநிலையில் எரிபொருள் எரியும்போது இந்த வாயுக்கள் வெளிவரும். நைட்ரஜன் ஆக்சைட் மாசு வாகனங்கள், கனரக வாகனங்கள் மற்றும் பிற இயந்திரங்களில் (கட்டுமான இயந்திரங்கள், படகுகள் முதலியன) இருந்து வெளிவரும். இது தவிர மின்நிலையங்கள், தொழிற்சாலை கொதிகலன்கள், சிமண்ட் காலங்கள், டர்பைன்கள் போன்றவற்றிலும் இருந்தும் வெளியேற்றப்படுகிறது.

Non-annex I countries

The group of developing countries that have signed and ratified the Kyoto Protocol. They do not have binding emission reduction targets. (BBC)

அட்டவணை ஒன்றில் இல்லாத நாடுகள்

க்யோடோ செயல்திட்டத்தை ஏற்றுக்கொண்டு கையொப்பமிட்ட வளரும் நாடுகளின் ஒரு குழு. இந்த குழுவிற்கு செயல்திட்டத்தின் உமிழ்வுக் குறைப்பு இலக்குகளை அடைய வேண்டும் என்பது கட்டாயம் இல்லை.

O

Ocean acidification

The ocean absorbs approximately one-fourth of man-made CO2 from the atmosphere, which helps to reduce adverse climate change effects. However, when the CO2 dissolves in seawater, carbonic acid is formed. Carbon emissions in the industrial era have already lowered the pH of seawater by 0.1. Ocean acidification can decrease the ability of marine organisms to build their shells and skeletal structures and kill off coral reefs, with serious effects for people who rely on them as fishing grounds. (BBC)

கடல் அமிலமாதல்

மனிதர் உற்பத்தி செய்யும் கரியமில வாயுவில் நான்கில் ஒரு பங்கை கடல் உறிந்துகொள்கிறது. இது அதிதீவிர காலநிலை மாற்ற பாதிப்புகளைக் குறைக்கிறது. ஆனால், இந்த கரியமில வாயு கடலில் கரைகையில் கரியமிலத்தை உருவாகுகிறது. இதனால் கடல் அமிலத்தன்மை பெறுகிறது. தொழில்புரட்சிக்கு பிந்தைய உலகில் கடலின் pH என்னை 0.1 குறைத்து, அதன் அமிலத்தன்மை அதிகரித்துள்ளதை குறிக்கிறது. இந்த கடல் அமிலமாதல் கடல் வாழ் உயிர்கள் தம்மை சுற்றி ஓடுகளும், எழும்புகளும் அமைப்பதை தடுக்கிறது; பவளப்பூச்சிகளை கொல்கிறது. இது இதனை மீன்பிடி போன்றவற்றை நம்பியிருக்கும் மக்களையும் பாதிக்கிறது.

Offshore drilling

Offshore drilling is the process of extracting petroleum from reserves located beneath the Earth's oceans instead of reserves located on the mainland. (Energy Education)

கடலில் தோண்டியெடுத்தல்

நிலத்தில் இருக்கும் பெட்ரோலிய வளங்களுக்கு பதிலாக கடலின் அடியில் இருக்கும் பெட்ரோலிய வளங்களை தோண்டியெடுக்கும் முறை.

Offshore wind energy

Offshore wind energy is the clean and renewable energy obtained by taking advantage of the force of the wind that is produced on the high seas, where it reaches a higher and more constant speed than on land due to the absence of barriers. (IBERDROLA)

கடலோர காற்று ஆற்றல்

கடலின் பரப்பில் வீசும் காற்றும் ஆற்றலைக் கொண்டு உற்பத்தி செய்யப்படும் தூய்மையான, புதுப்பிக்கத்தக்க ஆற்றல் இது. கடலின் பரப்பில் காற்றின் வேகம் அதிகமாகவும், ஒரே அளவிலும் இருக்கும். நிலத்தினை போன்று பெருமளவு தடைகள் இல்லாதது இதற்கு முக்கிய காரணம்.

Ozone depleting substances

When chlorine and bromine atoms come into contact with ozone in the stratosphere, they destroy ozone molecules. Ozone can be destroyed more quickly than it is naturally created. Some compounds release chlorine or bromine when they are exposed to intense UV light in the stratosphere. These compounds contribute to ozone depletion, and are called ozone-depleting substances (ODS) (US EPA)

ஓசோனை பாதிப்பவைகள்

க்ளோரின், ப்ரோமின் அணுக்கள் வளிமண்டல-த்தின் ஸ்ரடோஸ்பியர் அடுக்கில் இருக்கும் ஓசோன் படலத்தை அடைகையில் அதில் உள்ள ஓசோன் மூலக்கூறுகளை அழிக்கிறது. ஓசோன் அணுக்கள் இயற்கையாய் உற்பத்தி ஆகும் வேகத்தை காட்டிலும் வேகமாக அழிக்கப்பட்டுவிடுகிறது. இதனால் ஓசோன் படலம் அழிகிறது. வளிமண்டலத்தில் இருக்கும் சில மூலக்கூறுகள் அதிக புறஊதா கதிர்களுடன் சேர்கையில், க்ளோரின், ப்ரோமின் அணுக்களை வெளியிடுகிறது. இந்த மூலக்கூறுகள் ஓசோனை பாதிப்பவை பொருட்கள் என குறிப்ப்டப்படுகின்றது.

Ozone layer

The ozone layer is a thin part of the Earth's atmosphere that absorbs almost all of the sun's harmful ultraviolet light. (National Geographic)

ஓசோன் படலம்

ஓசோன் படலம் புவியின் வளிமண்டலத்தில் காணப்படும் ஒரு சிறு பகுதி. இது சூரியனின் ஆபத்தான புற ஊதா கதிர்களை உறிந்துகொள்கிறது



P

Paleoclimate

Paleoclimatology is the study of past climates. It combines history, anthropology, archaeology, chemistry, physics, geology, atmospheric, and ocean sciences. Clues about past climate conditions are obtained from proxy indicators, which are indirect forms of evidence that can be used to infer climate. (University of Michigan)

தொன்மைக் காலநிலை

இது கடந்த காலத்தின் காலநிலைகளை படிக்கும் ஒரு துறை. இது வரலாறு, மானுடவியல், தொல்லியல், வேதியியல், இயற்பியல், புவியியல், வளிமண்டல மற்றும் கடல் அறிவியல் போன்ற துறைகளை உள்ளடக்கியது. கடந்த கால காலநிலையை பற்றிய தகவல்கள் மறைமுக ஆதாரங்களில் இருந்து இந்த துறையின் அறிஞர்களால் கண்டுபிடிக்கப் படுகிறது.

Paris Agreement

The Paris Agreement under the United Nations Framework Convention on Climate Change (UNFCCC) was adopted on December 2015 in Paris, France, at the 21st session of the Conference of the Parties (COP) to the UNFCCC. The agreement, adopted by 196 Parties to the UNFCCC, entered into force on 4 November 2016 and as of May 2018 had 195 Signatories and was ratified by 177 Parties. One of the goals of the Paris Agreement is 'Holding the increase in the global average temperature to well below 2°C above pre-industrial levels and pursuing efforts to limit the temperature increase to 1.5°C above pre-industrial levels', recognising that this would significantly reduce the risks and impacts of climate change. Additionally, the Agreement aims to strengthen the ability of countries to deal with the impacts of climate change. (IIHS)

பாரிஸ் ஒப்பந்தம்

பாரிஸ் ஒப்பந்தம் UNFCCCஆள் 2015ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் பிரான்ஸ் நாட்டின் பாரிஸ் நகரத்தில் ஏற்றுகொள்ளப்பட்டது. UNFCCCin 196 உறுப்பினர் நாடுகளாலும் ஏற்றுகொள்ளபட்டு, 2016 நவம்பர் 4 அன்று அமலுக்கு வந்தது. 2018 மே மாதம் வரை 177 உறுப்பினர்கள் இதில் கையெழுத்திட்டு உள்ளனர். பாரிஸ் ஒப்பந்தத்தின் முக்கிய நோக்கங்களுள் ஒன்று 'உலக சராசரி வெப்பநிலை அதிகரிப்பை தொழில்புரட்சிக்கு முந்தைய நிலையை ஒப்பிடுகையில் 2°C க்கு குறைவாக மட்டுமே அனுமதிப்பது. மேலும் 1.5°C ஆகா அதனை நிலைநிறுத்த நடவடிக்கைகள் மேற்கொள்வது.' இதன் மூலம் காலநிலை மாற்றத்தினால் உலகம் சந்திக்கவிருக்கும் அபாயத்தை தடுக்கும் நோக்கம் கொண்டது இந்த ஒப்பந்தம். மேலும், தனி நாடுகள் இந்த காலநிலை பாதிப்புகளில் இருந்து தம்மை தற்காத்துக் கொள்ளும் வலிமையை அளிப்பது போன்றவையும் உள்ளன.

Participatory governance

It widely refers to the democratic mechanisms which are intended to involve citizens in public policy-making processes. In other words, participatory governance is aimed at establishing a bridge between public institutions and ordinary people, in an attempt to increase the effectiveness and responsiveness of public policy-making activities. (Global Encyclopedia of Public Administration, Public Policy, and Governance)

பங்களிப்பு நிர்வாகம்

பொதுத் திட்ட உருவாக்கங்களில் பொதுமக்களை பங்குபெற வழிசெய்யும் ஒரு ஜனநாயக அமைப்பினை இவ்வாறு குறிப்பிடுகிறோம். வேறாகக்கூறின், இது பொது அரசியல் நிறுவனங்களுக்கும், பொதுமக்களுக்கும் இடையில் உள்ள இடைவெளியை குறைத்து, பொதுத்திட்ட உருவாக்கத்தை இன்னும் திறனாக, பொறுப்பாக நடைபெறச் செய்யும் வழி.

Particulate matter

Particle pollution — also called particulate matter (PM) — is made up of particles (tiny pieces) of solids or liquids that are in the air. These particles may include dust, dirt, soot, smoke, drops of liquid etc. Some particles are big enough (or appear dark enough) to see and others are so small that you can't see them in the air. Coarse (bigger) particles, called PM10, can irritate your eyes, nose, and throat. Dust from roads, farms, dry riverbeds, construction sites, and mines are types of PM10. Fine (smaller) particles, called PM2.5, are more dangerous because they can get into the deep parts of your lungs — or even into your blood. (CDC)

துகள் பொருட்கள்

துகள் மாசு என்பது காற்றில் இருக்கும் திட அல்லது திரவ துகள்களால் உருவாக்கப்படும் ஒரு விதமான மாசு. இது தூசு, அழுக்கு, புகைக்கரி, புகை, நீர்த்துளிகள் போன்ற எந்த வித துகளாகவும் இருக்கலாம். சில துகள்கள் கண்களால் காணும் அளவு பெரியதாய் இருக்கும். சிலவை மிக சிறியதாக வெறும் கண்களால் பார்க்க முடியாத அளவு இருக்கும். இதில் பெரிய துகள்கள் PM10 எனப்படுகிறது. இது கண்கள், மூக்கு, தொண்டை போன்றவற்றை பாதிக்கும். சாலைகள், வயல்வெளிகள், காய்ந்த ஆற்றுபடுகைகள், கட்டுமான இடங்கள் மற்றும் சுரங்கங்கள் போன்றவற்றில் இருந்து வரும் தூசு இந்த PM10 வகையை சார்ந்தவை. PM2.5 என்பது அளவில் சிறிய, மிகவும் ஆபத்தான துகள்கள். ஏனென்றால் அளவில் சிறியதாக இருப்பதால் உடலின் ஆழமான உறுப்புகளான நுரையீரலிலோ அல்லது இரத்ததிலோ கூட இவை கலந்துவிடும் தன்மையுடையன.

Parts per million (ppm)

An abbreviation for parts per million, usually used as short for ppmv (parts per million by volume). The Intergovernmental Panel on Climate Change (IPCC) suggested in 2007 that the world should aim to stabilise greenhouse gas levels at 450 ppm CO2 equivalent in order to avert dangerous climate change. Some scientists, and many of the countries most vulnerable to climate change, argue that the safe

மில்லியனில் ஒரு துகள்/பாகம்

பசுமை இல்ல வாயுக்களின் உமிழ்வு இதில் அளவிடப்படுகிறது. (ஒரு மில்லியனில் எத்தனை பாகங்கள் என்று கொள்ளளவில் அளக்கப்படுகிறது.) அதன் சுருக்கமே ppm எனப்படுகிறது. IPCC 2007ஆம் ஆண்டு, பெரும் அழிவுகளில் இருந்து தப்பிக்க உலகம் அதன் உமிழ்வை 450 ppm கரிம சமநிலைக்குள் கட்டுப்படுத்த வேண்டும் என்று கூறியது. ஆனால் நிறைய அறிவியல்

upper limit is 350ppm. Current levels of CO2 only are about 380ppm. (BBC)

அறிஞர்கள் மற்றும் எளிதில் பாதிப்படையக்கூடிய நாடுகள் பாதுகாப்பான உச்சநிலையாக 350ppmஐ முன்மொழிந்தது. ஆனால் தற்போதைய உமிழ்வின் அளவே 380ppm ஆக உள்ளது.

Passive cooling (passive climate control)

Passive cooling uses free, renewable sources of energy such as the sun and wind to provide cooling, ventilation and lighting needs for a household. This additionally removes the need to use mechanical cooling. Applying passive cooling means reducing differences between outdoor and indoor temperatures, improving indoor air quality and making the building both a better and more comfortable environment to live or work in. It can also reduce levels of energy use and environmental impacts such as greenhouse gas emissions. (Frontiers of Architectural Research)

மறைமுக குளிர்வித்தல்

இது காற்று மற்றும் சூரிய ஆற்றல் போன்ற பொதுவான, புதுப்பிக்கத்தக்க ஆற்றல் மூலங்களை உபயோகித்து ஒரு வீட்டிற்கு குளிர், காற்று வசதி, வெளிச்சம் போன்றவற்றை கொடுக்கும். இது இயந்திரங்களின் மூலம் குளிர்வித்தலின் தேவையை நீக்குகிறது. இது வீட்டிற்கு உள்ளும் வெளியிலும் உள்ள வெப்பநிலையின் வேறுபாட்டினை குறைக்கிறது. உட்புற காற்றின் தரத்தை உயர்த்தி, வாழ்வதற்கும் பனிசெய்வதற்கும் ஏற்ற சூழலை உருவாகுகிறது. இது பிற ஆற்றலின் தேவையையும், பசுமைஇல்ல வாயுக்களின் உமிழ்வையும் பெருமளவு குறைக்கிறது.

Pathways

The temporal evolution of natural and/or human systems towards a future state. Pathway concepts range from sets of quantitative and qualitative scenarios or narratives of potential futures to solution-oriented decision-making processes to achieve desirable societal goals. Pathway approaches typically focus on biophysical, techno-economic, and/or socio-behavioural trajectories and involve various dynamics, goals and actors across different scales. (IPCC)

வழிமுறைகள்

வருங்காலத்தை நோக்கிய இயற்கையான அல்லது மனிதன் உருவாக்கிய அமைப்புகளின் கால ரீதியான பரிணாம வளர்ச்சி/மாற்றம். இந்த முறையில் பலவிதமான எண்ணிக்கை மற்றும் தன்மை அடிப்படையிலான காரணிகளை வைத்து உருவாக்கிய பல்வேறு வருங்கால காட்சிமாதிரிகளில் இருந்து தேவையான சமூக இலக்குகளை திட்டமிடுதல் மூலம் அடைய முயல்கின்றனர். இந்த முறை உயிரி-இயற்பியல், தொழில்நுட்ப-பொருளாதாரம் மற்றும் சமூக-தனிமனித மாற்றங்களையும்; மேலும் பல்வேறு இயக்கங்களையும், இலக்குகளையும், செயல் நபர்களையும் சார்ந்து உருவாக்கபடுகிறது.

Per-capita emissions

The total amount of greenhouse gas emitted by a country per unit of population. (BBC)

தனிநபர் உமிழ்வு

ஒரு நாட்டின் மொத்த பசுமை இல்ல வாயுக்கள் உமிழ்வை அந்த நாட்டின் மக்கள்தொகையுடன் வகுத்தால் கிடைக்கும் அளவு.

Periodic review

The periodic review is a science-based process under the UNFCCC that dates back to COP16 in Cancun2. It is mandated to assess the adequacy of the long-term (temperature) goal in light of the ultimate objective of the UNFCCC: that is, "to prevent dangerous anthropogenic interference with the climate system. (Nature)

காலமுறை மீளாய்வு

இது அறிவியல் பூர்வமான ஒரு முறை. இதனை UNFCCC முதன்முதலில் கான்கனில் நடைபெற்ற COP16 ஆம் மாநாட்டில் அறிமுகம் செய்தது. நெடுங்கால இலக்குகளை சரியான காலஇடைவெளியில் அதன் செயல்பாடு போதுமானதாக இருக்கிறதா என்பதை ஆய்வு செய்வது கட்டாயமாக்கப்பட்டது. இதன் மூலம் UNFCCCஇன் இலக்கான "காலநிலை அமைப்புகளில் ஆபத்தான மனித தலையீடுகளை தடுத்தல்' போன்றவற்றை சாதிக்க முடியும்.

Peri-urban areas

Peri-urban areas are those parts of a city that appear to be quite rural but are in reality strongly linked functionally to the city in its daily activities. (IPCC)

புறநகர் பகுதிகள்

கிராமத்தின் தோற்றம் கொண்டிருந்தாலும் அன்றாடம் நகரத்தின் இயக்கத்தை சார்ந்து இயங்கக்கூடிய பகுதிகள் இவ்வாறு குறிப்பிடப்படுகின்றன.

Permafrost

Permafrost is a permanently frozen layer on or under Earth's surface. It consists of soil, gravel, and sand, usually bound together by ice. Permafrost usually remains at or below 0°C (32°F) for at least two years. (National Geographic)

நிரந்தர உறைபனி

புவியின் நில அடுக்குகளில் நிரந்தரமாக உறைந்து போன அடுக்குகளை இவ்வாறு குறிப்பிடுகிறோம். இந்த அடுக்கில் மண், கற்கள், மணல் போன்றவை பனியினால் பிணைக்கப்பட்டிருக்கும். 0°C (32 F) க்கு குறைவாக குறைந்தபட்சம் இரண்டு வருடம் உள்ள புவியடுக்கினை நிரந்தர உறைபனி என்கிறோம்.

Pre-industrial levels of carbon dioxide

The levels of carbon dioxide in the atmosphere prior to the start of the Industrial Revolution. These levels are estimated to be about 280 parts per million (by volume). The current level is around 380ppm. (BBC)

தொழில் புரட்சிக்கு முந்தைய கரியமில அளவு

இது தொழில் புரட்சி துவங்குவதற்கு முன்பு வளிமண்டலத்தில் இருந்த கரியமில வாயுவின் அளவை குறிக்கிறது. கொள்ளளவில் ஒரு மில்லியனில் 280 பகுதிகள் (ppm) இது இருந்ததாக அளவிடப்படுகிறது. தற்போது இது 380 ஆகா உள்ளது.



Projections (estimating future scenarios)

The term projection is used in two senses in the climate change literature. In general usage, a projection can be regarded as any description of the future and the pathway leading to it. However, a more specific interpretation has been attached to the term "climate projection" by the IPCC when referring to model-derived estimates of future climate. (IPCC)

கணிப்பு

இது காலநிலை எழுத்துக்களில் இரண்டு விதமாக பார்க்கப்படுகிறது. பொதுவாக கணிப்பு என்பது வருங்காலத்தை விளக்குவதாகவும், அதற்கான பாதையை கூறுவதாகவும் புரிந்துகொள்ளப் படுகிறது. ஆனால் குறிப்பாக கூறினால், IPCCஇன் 'காலநிலை கணிப்பு' என்ற பதமாக கூறுகையில் அது வருங்காலத்தில் காலநிலையின் தன்மையை கண்டறியும் மாதிரிகளை குறிக்கிறது.

R

Radiative forcing

Radiative forcing is the change in the net, downward minus upward, radiative flux (expressed in W m-2) at the tropopause or top of atmosphere due to a change in a driver of climate change, such as a change in the concentration of carbon dioxide (CO2) or the output of the Sun. (IPCC)

கதிரியக்க மாறுபாடு/கதிரியக்க அளவுமாற்றம்

வளிமண்டலத்தின் உச்சியில் இருக்கும் கதிர்வீச்சின் காந்தபுலத்தில் ஏற்படும் மாறுதல்கள் இவ்வாறு குறிப்பிடப்படுகிறது. இது கரியமில வாயுவின் செறிவில் ஏற்படும் மாற்றம்; சூரியனின் கதிர்வீச்சு வெளிப்பாடு போன்ற காலநிலை காரணிகள் போன்றவற்றால் நிகழ்கிறது.

Recycling

Recycling is the process of collecting and processing materials that would otherwise be thrown away as trash and turning them into new products. Recycling can benefit your community and the environment. (US EPA)

மறுசுழற்சி

குப்பை என்று தூக்கி எறியப்படும் பொருட்களை சேகரித்து, அதனை மறுபயன்பாட்டிற்கு ஏற்றாற்போல் மற்றும் வழிமுறைக்கு மறுசுழற்சி என்று பெயர். மறுசுழற்சி நமது சமூகத்திற்கும், சூழலிற்கும் நன்மை செய்யக்கூடியது.

Radiative forcing

Radiative forcing is the change in the net, downward minus upward, radiative flux (expressed in W m-2) at the tropopause or top of atmosphere due to a change in a driver of climate change, such as a change in the concentration of carbon dioxide (CO2) or the output of the Sun. (IPCC)

கதிரியக்க மாறுபாடு/கதிரியக்க அளவுமாற்றம்

வளிமண்டலத்தின் உச்சியில் இருக்கும் கதிர்வீச்சின் காந்தபுலத்தில் ஏற்படும் மாறுதல்கள் இவ்வாறு குறிப்பிடப்படுகிறது. இது கரியமில வாயுவின் செறிவில் ஏற்படும் மாற்றம்; சூரியனின் கதிர்வீச்சு வெளிப்பாடு போன்ற காலநிலை காரணிகள் போன்றவற்றால் நிகழ்கிறது.

Recycling

Recycling is the process of collecting and processing materials that would otherwise be thrown away as trash and turning them into new products. Recycling can benefit your community and the environment. (US EPA)

மறுசுழற்சி

குப்பை என்று தூக்கி எறியப்படும் பொருட்களை சேகரித்து, அதனை மறுபயன்பாட்டிற்கு ஏற்றாற்போல் மற்றும் வழிமுறைக்கு மறுசுழற்சி என்று பெயர். மறுசுழற்சி நமது சமூகத்திற்கும், சூழலிற்கும் நன்மை செய்யக்கூடியது.

Reducing Emissions from Deforestation and Forest Degradation (REDD+)

An effort to create financial value for the carbon stored in forests, offering incentives for developing countries to reduce emissions from forested lands and invest in low-carbon paths to sustainable development (SD). It is therefore a mechanism for mitigation that results from avoiding deforestation. REDD+ goes beyond deforestation and forest degradation, and includes the role of conservation, sustainable management of forests and enhancement of forest carbon stocks. The concept was first introduced in 2005 in the 11th Session of the Conference of the Parties (COP) in Montreal. (Duke)

காடழிப்பு

மற்றும் காடு தரமிழப்பின் உமிழ்வை குறைத்தல்: காடுகளில் சேமித்து வைக்கப்பட்டுள்ள கரிமத்திற்கு பொருளாதார மதிப்பி அளித்து, காடுகள் உள்ள நிலங்களில் இருந்து உமிழ்வை குறைக்கும் வளரும் நாடுகளுக்கு ஊக்கத்தொகை அளித்து, கரிமம் குறைவாக தேவைப்படும் வளங்குன்றா வளர்ச்சி-ப்பாதையில் அவற்றை முன் தள்ளும் ஒரு முயற்சி இது. இது காடழிப்பை குறைக்கும் தன்மையதான ஒரு தணிக்கை அமைப்பு. காடழிப்பு தடுத்தல் என்பதை தாண்டி REDD+ பாதுகாப்பு, காடுகளுக்கு வளங்குன்றா மேலாண்மை, காட்டின் கார்பன் சேமிப்பை அதிகரிப்பது போன்றவற்றையும் குறிக்கிறது. இது முதன்முதலில் 2005ஆம் ஆண்டு, மாண்ட்ரியலில் நடைபெற்ற COP மாநாட்டில் அறிமுகம் செய்யப்பட்டது.

Reforestation

Planting of forests on lands that have previously contained forests but that have been converted to some other use. (IPCC)

காட்டை புதுப்பித்தல்

காடாக இருந்து அவை அழிக்கப்பட்டு வேறு பயன்பாட்டிற்கு மாற்றப்பட்ட நிலங்களில் மீண்டும் காடு வளர்ப்பது.

Region

A region is a relatively large-scale land or ocean area characterized by specific geographical and climatological features. The climate of a land-based region is affected by regional and local scale features like topography, land use characteristics and large water bodies, as well as remote influences from other regions, in addition to global climate conditions. (IPCC)

வட்டாரம்

ஒரு வட்டாரம் என்பது அதற்கான தனித்த புவியியல், காலநிலை தன்மைகளை உடைய ஒப்பீட்டளவில் பெரிய அளவிலான நிலத்தையோ, கடலையோ குறிப்பது. நிலம் சார்ந்த வட்டாரத்தின் காலநிலையை அந்த பிராந்தியத்தின் நில அமைப்பு, நிலப்பயன்பாடு, பெரிய நீர்நிலைகள் போன்றவையும்; உலக அளவிலான காலநிலை கூறுகளும் பாதிக்கும். இவை சார்ந்தே அந்த பிராந்தியத்தின் காலநிலை இருக்கும்.

Relative sea level rise

The relative sea level rise index represents the changes in the height of sea water relative to land with respect to the average conditions over a reference period. The index includes geophysical sources that drive long-term changes, such as ice components, ocean-related components, land water storage and glacial isostatic adjustment, but it does not account for local subsidence due to human activities. The index can be calculated from the sea level height derived from global and regional climate models, including ocean, atmosphere, land and cryosphere components. (European Environment Agency)

ஒப்பீட்டு கடல்மட்ட உயர்வு

ஒரு குறிப்பிட்ட காலத்தின் சராசரியை ஒப்பிடுகையில் ஒரு நிலப்பரப்பின் அருகில் கடல்நீர் மட்டத்தில் ஏற்படும் மாற்றங்கள். இந்த அளவீடு கடல் சார்ந்த காரணிகள், பனிசார் காரணிகள், நிலத்தடி நீர் சேமிப்பு, பனியாரின் மாறுபாடுகள் போன்ற புவி-இயற்பியல் தளங்களில் ஏற்படும் நெடுங்கால மாற்றங்களை உள்ளடக்கியது. மனித காரணங்களால் ஏற்படும் நில தாழ்வு போன்றவை கணக்கில் எடுத்துக்கொள்ளப் படுவதில்லை. இந்த அளவீடு உலக மற்றும் பிராந்திய காலநிலை மாதிரிகளின் (பெருங்கடல், வளிமண்டலம், நிலம், பனிமண்டல காரணிகளை உள்ளடக்கியது) கடல் மட்ட உயரக் கணக்கீடுகளில் இருந்தும் பெறப்படும்.

Renewable energy

Renewable energy is energy created from sources that can be replenished in a short period of time. The five renewable sources used most often are: biomass (such as wood and biogas), the movement of water, geothermal (heat from within the earth), wind, and solar. (BBC)

புதுப்பிக்கத்தக்க ஆற்றல்

குறுகிய காலத்தில் மீண்டு வரக்கூடிய ஆற்றல் மூலங்களில் இருந்து பெறப்படும் சக்தி/ஆற்றல் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் எனப்படுகிறது. பரவலாக அறியப்படும் ஐந்து புதுப்பிக்கத்தக்க ஆற்றல் இவை: உயிர்பொருள் (மரம், உயிரிவாயு போன்றவை), நீரின் ஆற்றல், காற்று, சூரிய ஆற்றல் மற்றும் புவியின் வெப்ப ஆற்றல்.



Representative Concentration Pathways (RCPs)

Scenarios that include time series of emissions and concentrations of the full suite of greenhouse gases (GHGs) and aerosols and chemically active gases, as well as land use/land cover. (IPCC)

பிரதிநிதித்துவ காட்சிமாதிரிகள்

கால வரிசையில் இருக்கும் உமிழ்வு பற்றிய தகவல்கள், பசுமையில்ல வாயுக்கள் மற்றும் வளிமக்கரைசல்களின் முழுமையான செறிவு மற்றும் நிலப் பயன்பாடு/ நிலப்பரப்பின் தாவரபரவல் போன்றவற்றை உள்ளடக்கிய காட்சிமாதிரிகள்.

Resilience

The capacity of social, economic, and environmental systems to cope with a hazardous event or trend or disturbance, responding or reorganizing in ways that maintain their essential function, identity, and structure, while also maintaining the capacity for adaptation, learning, and transformation. (IPCC)

மீள்தன்மை

ஒரு ஆபத்தான நிகழ்வோ, போக்கோ அல்லது செயல்பாடோ; அவற்றில் இருந்து தாக்குப்பிடிக்கக்கூடிய, தமது செயல்பாட்டின் திறனை குறைக்காத வண்ணம் ஒரு சமூக, பொருளாதார, சூழலியல் அமைப்பின் மீண்டு வரக்கூடிய திறன். இது அந்த அமைப்பின் அடிப்படை நோக்கத்தையோ, இயக்கத்தையோ, அடையாளத்தையோ, அமைப்பையோ தக்கவைத்துக்கொள்ளும். அதே நேரம் புதிதாக பரிணமிக்க கற்றுக்கொள்ளும்.

Resource efficiency

Resource efficiency means using the Earth's limited resources in a sustainable manner while minimizing impacts on the environment. It allows us to create more with less and to deliver greater value with less input. (European Commission)

திறனான வளப்பயன்பாடு

புவியின் வரையறுக்கப்பட்ட/குறைவான வளங்களை சூழலுக்கான பாதிப்புகளை குறைத்து வளங்குன்றா வண்ணம் பயன்படுத்துவது. இது குறைவான வளத்தில் நிறைய, மிகவும் தேவையான பொருட்களை விநியோகிக்க பயன்படும்.

Risk

The potential for consequences where something of value is at stake and where the outcome is uncertain, recognizing the diversity of values. Risk is often represented as probability of occurrence of hazardous events or trends multiplied by the impacts if these events or trends occur. Risk results from the interaction of vulnerability, exposure, and hazard. In this report, the term risk is used primarily to refer to the risks of climatechange impacts. (IPCC)

அபாயம்

மதிப்புகளின் பலதரப்பட்ட தன்மையை கருத்தில் கொண்டு, அவ்வாறு மதிப்பு அதிகம் உள்ள ஒன்று பாதிக்கப்பட போவதற்கான வாய்ப்புகள் உள்ளதையும், முடிவு கணிக்க முடியாதபடி இருப்பதையும் குறிப்பது. அபாயம் என்பது பொதுவாக ஆபத்து அதிகமாக உள்ள ஒரு நிகழ்வோ, போக்கோ நடைபெற போவதையும், அதன் பாதிப்பினை பலமடங்கு அதிகரிக்க கொடியதாக அது இருப்பதற்கான வாய்ப்பையும் குறிக்க பயன்படுகிறது. பாதிப்பு, ஆபத்து மற்றும் அதனால் பாதிப்படையும் தன்மையதான நிலை போன்றவற்றின் மத்தியில் அபாயம் நிகழ்கிறது. இந்த அறிக்கையில் குறிக்கப்பட்டுள்ள அபாயம்

என்பது காலநிலை மாற்றத்தினால் நிகழக்கூடிய அபாயம் ஆகும்.

Risk assessment

The qualitative and/or quantitative scientific estimation of risks. (IPCC)

அபாய அளவீடு

ஒரு அபாயத்தின் அறிவியல் அடிப்படையிலான அளவு அல்லது தன்மை அளவீடுகள்.

Risk perception

The subjective judgment that people make about the characteristics and severity of a risk. (IPCC)

ஆபத்து உணர்தல்

ஒரு அபாயத்தின் தன்மையையும் தீவிரத்தையும் பற்றிய மக்களின் எண்ணம் சார்ந்த அளவீடுகள் அல்லது முடிவுகள்.

Runoff

The flow of water over the surface or through the subsurface, which typically originates from the part of liquid precipitation and/or snow/ice melt that does not evaporate or refreeze, and is not transpired. (IPCC)

ஓடும் தண்ணீர்

மழைப்பொழிவினாலோ அல்லது பனி உருகியதாலோ உருவாகி மீண்டும் உறையாமல்/ ஆவியாகாமல் இருக்கும் தண்ணீர், நிலத்தின் மேற்பரப்பிலோ அல்லது சிறிது ஆழத்திலோ ஓடுவதை இவ்வாறு குறிப்பிடுகின்றனர்.

S

Saline water ingress/Salt water intrusion

As sea levels rise along the coasts, saltwater can move onto the land. Known as saltwater intrusion, this occurs when storm surges or high tides overtop areas low in elevation. It also occurs when salt water infiltrates freshwater aquifers and raises the groundwater table below the soil surface. (USDA)

கடல் நீர் உட்புகுதல்

கடலோரங்களில் கடல் நீர் மட்டம் உயர்வதால், நிலத்திற்குள் கடல்நீர் புகுகிறது. உயரம் குறைவான இடங்களில் உயர்ஓதம், புயல் எழுச்சி போன்றவை நிகழும்போது இந்த கடல்நீர் உட்புகுதல் நடைபெறுகிறது. நிலத்தடி நன்னீர் தேக்கங்களில் உப்புநீர் உட்புகுவதன் மூலம் இது நிலத்தடி மட்டத்தை உயர்த்துகிறது.

Scenario

A plausible description of how the future may develop based on a coherent and internally consistent set of assumptions about key driving forces (e.g., rate of technological change, prices) and relationships. Note that scenarios are neither predictions nor forecasts, but are used to provide a view of the implications of developments and actions. (IPCC)

காட்சி மாதிரி

அடிப்படை இயக்க காரணிகள் மற்றும் அதற்கிடையிலான உறவுகளின் அடிப்படையில் வருங்காலம் எவ்வாறு உருவாகும் என்பதை விளக்க முற்படுவது. இது வருங்காலம் குறித்த கணிப்போ, முன்பிரகடனமோ அல்ல, மாறாக தற்போதைய செயல்கள் மற்றும் முன்னேற்றங்களின் விளைவுகள் குறித்த ஒரு பார்வை மட்டுமே.

Sea ice

Ice found at the sea surface that has originated from the freezing of seawater. Sea ice may be discontinuous pieces (ice floes) moved on the ocean surface by wind and currents (pack ice), or a motionless sheet attached to the coast (land-fast ice). Sea ice concentration is the fraction of the ocean covered by ice. (IPCC)

கடல் பனி

கடல்நீர் குளிர்வதன் மூலம் கடலின் பரப்பில் காணப்படும் பனிக்கட்டிகள். இது தனித்தனியே கடலின் பரப்பில் மிதக்கும் கட்டிகள் போன்றும் இருக்கலாம் அல்லது நிலத்தோடு இணைந்து உறைந்த பனித்திட்டுகளாகவும் இருக்கலாம். பனியால் மூடப்பட்ட பெருங்கடல்களில் இந்த கடல்பனி ஒரு சிறிய பிரிவு தான்.

Sea level change (sea level rise/sea level fall)

Sea level can change, both globally and locally (relative sea level change) due to (1) a change in ocean volume as a result of a change in the mass of water in the ocean, (2) changes in ocean volume as a result of changes in ocean water density, (3) changes in the shape of the ocean basins and changes in the Earth's gravitational and rotational fields, and (4) local subsidence or uplift of the land. (IPCC)

கடல் மட்ட மாறுபாடு (கடல் மட்ட உயர்வு/குறைவு)

கடல் மட்ட மாறுபாடு உலக அளவிலும் உள்ளூர் அளவிலும் நிகழும் மாற்றமே ஆகும். அதற்கு அடிப்படை காரணிகள் 1) கடலின் நிறை அதிகரிப்பதன் மூலம் அதன் கொள்ளளவு அதிகரிப்பது, 2) கடல் நீரின் அடர்த்தி அதிகரிப்பதன் மூலம் அதன் கொள்ளளவு அதிகரிப்பது, 3) கடலோர நிலப்பரப்புகளில் ஏற்படும் மாற்றம் மற்றும் புவியின் ஈர்ப்புவிசை மற்றும் சுழற்சியில் ஏற்படும் மாற்றம் 4) சிறிய அளவில் நிலம் மேலெழுவது அல்லது வீழ்வது.

Sea surface temperature (SST)

The sea surface temperature is the subsurface bulk temperature in the top few meters of the ocean, measured by ships, buoys, and drifters. From ships, measurements of water samples in buckets were mostly switched in the 1940s to samples from engine intake water. Satellite measurements of skin temperature (uppermost layer; a fraction of a millimeter thick) in the infrared or the top centimeter or so in the microwave are also used, but must be adjusted to be compatible with the bulk temperature. (IPCC)

கடல்பரப்பின் வெப்பநிலை

கடலின் மேலடுக்கில் சில மீட்டர் ஆழம்வரை உள்ள மொத்த வெப்பநிலை. இது கப்பல்கள், இழுவைப்படகுகள், மிதவை அமைப்புகள் போன்றவற்றால் அளவிடப்படுகிறது. கப்பல்களில், வாளிகள் மூலம் மாதிரிகள் எடுத்து அளவிடும் முறை 1940களில் எஞ்சின் உள்ளெடுக்கும் நீரை அளவிடும் முறைக்கு மாறியது. செயர்க்கைகோள்கள் மூலம் மேலடுக்கின் வெப்பநிலையை அளவிடும் முறையும் தற்போது உள்ளது. மில்லிமீட்டர் அளவு ஆழத்திற்கு அகச்சிவப்பு கதிர்களும், சென்டிமீட்டர் ஆழத்திற்கு மைக்ரோ அலைக்கதிர்களும் பயன்படுத்தப்படுகிறது.

Science based target initiative (SBTi)

The SBTi is a global body enabling businesses to set ambitious emissions reductions targets in line with the latest climate science. It is focused on accelerating companies across the world to halve emissions before 2030 and achieve net-zero emissions before 2050. (Science Based Targets)

அறிவியல் பூர்வமான இலக்கு முன்னெடுப்புகள் (SBTi)

SBTi என்பது காலநிலை அறிவியலுக்கு ஏற்ப கரிம உமிழ்வு குறைப்பு இலக்குகளை அமைக்க, வணிக நிறுவனங்களுக்கு உதவும் ஒரு சர்வதேசிய அமைப்பாகும். 2030க்கு முன் உமிழ்வை பாதியாகக் குறைக்கவும், 2050க்கு முன் நிகர பூஜ்ஜிய உமிழ்வை அடையவும் உலகெங்கிலும் உள்ள நிறுவனங்களை விரைவுபடுத்துவதில் இது கவனம் செலுத்துகிறது.

SBTi's Corporate Net-Zero Standard

SBTi's Corporate Net-Zero Standard (also referred to as the Net-Zero Standard) provides guidance, criteria, and recommendations to support corporates in setting net-zero targets through the SBTi. The main objective of this standard is to provide a standardized and robust approach for corporates to set net-zero targets that are aligned with climate science. (Science Based Targets)

SBTi இன் கார்ப்பரேட் நிகர-ஜீரோ தரநிலை

SBTi இன் கார்ப்பரேட் நிறுவன நிகர-ஜீரோ தரநிலை (நிகர-ஜீரோ தரநிலை என்றும் குறிப்பிடப்படுகிறது) என்பது நிகர-பூஜ்ஜிய இலக்குகளை அமைக்க கார்ப்பரேட்டுகளுக்கு வழிகாட்டுதல், அளவுகோல்கள் மற்றும் பரிந்துரைகளை வழங்குகிறது. இந்த தரநிலையின் முக்கிய நோக்கம், அறிவியல் பூர்வ காலநிலை தகவல்களைக் கொண்டு இலக்குகளை அமைக்க, கார்ப்பரேட்டுகளுக்கு தரப்படுத்தப்பட்ட மற்றும் வலுவான அணுகுமுறையை வழங்குவதாகும்.

Scope 1 emissions

Scope 1 emissions are direct greenhouse (GHG) emissions that occur from sources that are controlled or owned by an organization (e.g., emissions associated with fuel combustion in boilers, furnaces, vehicles). (US EPA)

ஸ்கோப் 1 உமிழ்வுகள்

ஸ்கோப் 1 உமிழ்வுகள் என்பது ஒரு நிறுவனத்திற்கு உட்பட்ட அல்லது சொந்தமான மூலங்களிலிருந்து நிகழும் நேரடி பசுமைஇல்ல வாயு (GHG) உமிழ்வுகள் ஆகும். (எ.கா., கொதிகலன்கள், உலைகள், வாகனங்களின் படிம எரிபொருள் எரிப்புடன் தொடர்புடைய உமிழ்வுகள்).

Scope 2 emissions

Scope 2 are emissions that a company causes indirectly when the energy it purchases and uses is produced. For example, for our electric fleet vehicles the emissions from the generation of the electricity they're powered by would fall into this category. (US EPA)

ஸ்கோப் 2 உமிழ்வுகள்

ஸ்கோப் 2 உமிழ்வுகள் என்பது ஒரு நிறுவனம் தான் வாங்கி பயன்படுத்தும் ஆற்றலை உற்பத்தி செய்யும் இடங்களில் மறைமுகமாக ஏற்படுத்தும் உமிழ்வுகள் ஆகும். எடுத்துக்காட்டாக, மின்வாகனங்களைப் பொறுத்தவரை, அவை இயக்கப்படும் மின்சாரத்தின் உற்பத்தியிலிருந்து வெளியேறும் உமிழ்வுகள் இந்த வகைக்குள் அடங்கும்.

Scope 3 emissions

Scope 3 encompasses emissions that are not produced by the company itself, and not the result of activities from assets owned or controlled by them, but by those that it's indirectly responsible for, up and down its value chain. An example of this is when we buy, use and dispose of products from suppliers. (National Grid Group)

ஸ்கோப் 3 உமிழ்வுகள்

ஸ்கோப் 3 என்பது நிறுவனத்தால் உற்பத்தி செய்யப்படும் உமிழ்வுகள் இல்லாது, அவற்றிற்கு சொந்தமான அல்லது கட்டுப்பாட்டில் உள்ள மூலங்களின் செயல்பாடுகளின் விளைவுகள் அல்லாது, ஆனால் அதன் உற்பத்தி மற்றும் மதிப்பூட்டு சங்கிலியில் இணையும் மறைமுகமான உமிழ்வுகள் ஆகும். விநியோகர்களிடமிருந்து பொருட்களை வாங்குவது, பயன்படுத்துவது மற்றும்

அகற்றுவதில் உள்ள கரிம உமிழ்வுகள் இதற்கு ஒரு எடுத்துக்காட்டு.

Sendai Framework for Disaster Risk Reduction 2015–2030

The Sendai Framework for Disaster Risk Reduction 2015–2030 outlines seven clear targets and four priorities for action to prevent new, and to reduce existing, disaster risks. The voluntary, non-binding agreement recognizes that the State has the primary role to reduce disaster risk but that responsibility should be shared with other stakeholders, including local government and the private sector. Its aim is to achieve 'substantial reduction of disaster risk and losses in lives, livelihoods and health and in the economic, physical, social, cultural and environmental assets of persons, businesses, communities and countries.' (IPCC)

செண்டாய் பேரழிவு அபாயக் குறைப்பு திட்டம் (2015-2030)

இது ஏழு முக்கிய இலக்குகளையும், நான்கு முக்கிய செயல்திட்டங்களையும் வரையறுக்கிறது. இந்த தன்னிச்சையான, சட்டரீதியான பிணைப்பற்ற திட்டம், அரசினை பேரழிவு அபாய குறைப்பு நடவடிக்கையின் அடிப்படை பங்காற்றுபவ-ராக அடையாளம் காண்கிறது. ஆனால் அதில் பிற பங்குதாரர்களான உள்ளாட்சிகள் மற்றும் தனியார் பிரிவுகளையும் இணைத்துக்கொள்ள-லாம். இதன் நோக்கம் - உயிர், உடைமை, உடல்நலம் போன்றவற்றின் மீதும்; தனிநபர், நிறுவன, குழு மற்றும் தேசிய சமூக, கலாச்சார, பொருளாதார, இயல் மற்றும் சூழல் அமைப்புகளின் மீதான பேரழிவுகளின் தாக்கத்தை மற்றும் அபாயத்தை குறைப்பது என்பதாகும்.

Sequestration

The uptake (i.e., the addition of a substance of concern to a reservoir) of carbon containing substances, in particular carbon dioxide (CO2), in terrestrial or marine reservoirs. Biological sequestration includes direct removal of CO2 from the atmosphere through land-use change (LUC), afforestation, reforestation, revegetation, carbon storage in landfills and practices that enhance soil carbon in agriculture (cropland management, grazing land management). (IPCC)

தன்மயமாக்கல்

கார்பன் உள்ள தனிமங்கள் அல்லது பொருட்களை (குறிப்பாக கரியமில வாயு) நிலம் அல்லது கடல் போன்ற ஒன்றில் தேக்கமாக சேமித்து வைப்பது. உயிரியல் தன்மயமாக்கள் என்பது வளிமண்டலத்தில் இருக்கும் கரியமில வாயுவை நிலப் பயன்பாட்டில் மாற்றம் ஏற்படுத்துவதன் மூலம் பிரித்து தனியே சேமிப்பது. பொதுவாக காடுவளர்ப்பு, காடுகளின் மீட்டுருவாக்கம், நில அடுக்குகளில் கரிம சேமிப்பு, நிலத்தில் கரிமத்தை சேமிக்கும் வகையான விவசாய செயல்பாடுகள் (விவசாய நிலமேலாண்மை, மேய்ச்சல் நிலமேலாண்மை).

Short-Lived Climate Forcers (SLCFs)

Short-lived climate forcers (SLCFs) like methane, ozone and aerosols have a shorter atmospheric lifetime than CO2 and are often assumed to have a short-term effect on the climate system: should their emissions cease, so would their radiative forcing. (Nature)

குறுகிய கால கால்நிலை விசைகள்

மீத்தேன், ஒசான் மற்றும் சில வளிமக்கரைசல் போன்றவை கரியமில வாயுவை விட மிகக்குறுகிய காலம் மட்டுமே வளிமண்டலத்தில் இருக்கும். இதனால் காலநிலை அமைப்புகளில் அதன் தாக்கமும் மிகக்குறுகிய காலம் மாட்டுமே இருக்கும். இதனை குறுகிய கால காலநிலை காரணிகள் எனப்படுகிறது.

Sink

Any process, activity or mechanism that removes a greenhouse gas (GHG), an aerosol or a precursor of a GHG or aerosol from the atmosphere. (IPCC)

மடு

வளிமண்டலத்தில் இருந்து பசுமைஇல்ல வாயுக்களையோ, அதற்கான ஆதார மூலக்கூறு-களையோ, வலிமைக்கரைசலயோ நீக்கும் செயல்முறை, நடவடிக்கை அல்லது செயல்பாடு.

Slow onset events (climate change impacts)

Slow onset events refer to the risks and impacts associated with: increasing temperatures; desertification; loss of biodiversity; land and forest degradation; glacial retreat and related impacts; ocean acidification; sea level rise; and salinization. (UNFCCC)

மெதுவாக மாறும் இயக்கங்கள்

இது உயரும் வெப்பநிலை, பாலைவனமாதல், உயிரிபன்மைய இழப்பு, நிலம் மற்றும் காட்டின் சீரழிவு, பனியாறு சுருங்குதல், கடல்நீர் அமிலமாதல், கடல்மட்ட உயர்வு, உப்பாதல் போன்ற மெதுவாக நடைபெறும் மாற்றங்களினால் ஏற்படும் அபாயங்களையும், பாதிப்புகளையும் குறிக்கிறது.

Small island developing states (SIDS)

Small Island Developing States (SIDS) are a distinct group of 38 UN Member States and 20 Non-UN Members/Associate Members of United Nations regional commissions that face unique social, economic and environmental vulnerabilities. (United Nations)

வளரும் சிறிய தீவு நாடுகள்

இந்த தனித்துவமான குழுவில் 38 ஐக்கிய நாடுகளின் உறுப்பினர் நாடுகள் மற்றும் 20 உறுப்பினரற்ற நாடுகள் ஆகியவை உள்ளன. இவை காலநிலை மாற்றத்தினால் தனித்துவமான சமூக, பொருளாதார, சூழல் பாதிப்புகளை சந்திக்கும் சிறிய-தீவு நாடுகளாகும்.

Soil carbon

Soil carbon, a fundamental component of soil organic matter (SOM), is commonly recognized as one of the key parameters of soil quality. It has been linked to ecosystem productivity because it is a sensitive indicator for monitoring programs. It is a critical pool in the carbon cycle, and through its influence on many fundamental biological and chemical processes, it plays a pivotal role in nutrient release and availability. (Science Direct)

நிலக்கரிமம்

நிலத்தின் வளத்தை நிர்ணயிப்பதில் மண்ணில் காணப்படும் இந்த கரிமம் மிகவும் முக்கிய பங்களிக்கிறது. அந்தந்த சூழல் அமைப்பின் உற்பத்தி திறனுடன் இது இணைத்து பார்க்கப்படுகி-றது. கரிம சுழற்சியில் இது முக்கிய பங்கு வகிக்கிறது. அடிப்படையான உயிரியல் மற்றும் வேதியியல் இயக்கங்களை பாதிப்பதன் மூலம் சாது பரிமாற்றம் மற்றும் வெளியீட்டில் மிக முக்கிய இடம்வகிக்கிறது.

Soil Carbon Sequestration (SCS)

Land management changes which increase the soil organic carbon content, resulting in a net removal of CO2 from the atmosphere. (IPCC)

நிலக்கரிம தன்மயமாக்கல்

நிலத்தில் கரிம மூலக்கூறுகளின் அளவை அதிகரிக்கும் வண்ணம் செய்யப்படும் நில மேலாண்மை மாற்றங்கள். இது வளிமண்டலத்தில் இருந்து மொத்த மதிப்பில் கரியமில வாயுவின் பிரித்தலை குறிக்கும்.

Solar Radiation Management or modification (SRM)

Solar radiation modification refers to the intentional modification of the Earth's shortwave radiative budget with the aim of reducing warming. (IPCC)

சூரிய கதிர்வீச்சு மேலாண்மை/ மாறுபாடு

புவியின் சூடேற்றத்தை குறைக்கும் பொருட்டு, புவி உள்வாங்கும் குறுகிய அலைநீளம் கொண்ட கதிர்வீச்சை திட்டமிட்டு குறைப்பது.

Special Report on Emissions Scenarios (IPCC SRES)

The Intergovernmental Panel on Climate Change (IPCC) Special Report on Emissions Scenarios describes new scenarios of the future, and predicts greenhouse gas emissions associated with such developments. The scenarios provide the basis for future assessments of climate change and possible response strategies. (IPCC)

உமிழ்வு காட்சிமாதிரிகள் பற்றிய சிறப்பு அறிக்கை

இந்த அறிக்கையில் உள்ள காட்சிமாதிரிகள் வருங்காலத்தில் புதிய வளர்ச்சி நிலைகளையும் மற்றும் அந்த வளர்ச்சியுடன் இணைந்து நடக்கும் பசுமை இல்ல வாயுக்களின் உமிழ்வு போன்றவற்றையும் அவதானிக்கிறது. இது வருங்காலத்தின் காலநிலை மாற்றத்தின் அளவீடுகள் மற்றும் அதற்கான மறுமொழி போன்றவற்றை பேசுகிறது.

Stabilization (of GHG or CO2-equivalent concentration)

A state in which the atmospheric concentrations of one greenhouse gas (GHG) (e.g., carbon dioxide) or of a CO2-equivalent basket of GHGs (or a combination of GHGs and aerosols) remains constant over time. (IPCC)

நிலைப்படுத்துதல்

ஒரு கால அளவில், வளிமண்டலத்தில் இருக்கும் பசுமை இல்ல வாயுக்கள் அல்லது கரியமில வாயுவின் பசுமைஇல்ல தன்மையுடன் சமன்செய்யப்பட்ட பிற பசுமைஇல்ல வாயுக்கள் போன்றவை ஒரே அளவில் இருப்பது.

Stock take

The global stocktake of the Paris Agreement (GST) is a process for taking stock of the implementation of the Paris Agreement with the aim to assess the

பங்கெடுப்பு

பாரிஸ் ஒப்பந்தத்தை நிறைவேற்றும் பொருட்டு, பூமியின் அனைத்து நாடுகளும் ஒன்றிணைந்து அந்த ஒப்பந்தத்தின் அடிப்படை தேவை மற்றும்

world's collective progress towards achieving the purpose of the agreement and its long-term goals. (UNFCC)

அதன் நீண்ட கால குறிக்கோள் போன்றவற்றை அடைவதற்கு, தனிநாடுகள் தமது பங்குகளை எடுத்துக்கொள்வது.

Stranded assets

Assets exposed to devaluations or conversion to 'liabilities' because of unanticipated changes in their initially expected revenues due to innovations and/or evolutions of the business context, including changes in public regulations at the domestic and international levels. (IPCC)

சிக்கிய சொத்துகள்

மதிப்பிழப்பினாலும், கடனாகவும் மாறிப்போன சொத்துக்கள். இவை பொருளாதார உலகில் உற்படும் எதிர்பாராத மாற்றங்கள், உள்ளூர் மற்றும் உலக அளவில் பொதுக்கட்டுப்பாடுகளில் கொண்டுவரப்படும் புதிய முன்னெடுப்புகள் போன்றவற்றால் இந்த மாற்றத்தை அடைகின்றன.

Stratosphere

The highly stratified region of the atmosphere above the troposphere extending from about 10 km (ranging from 9 km at high latitudes to 16 km in the tropics on average) to about 50 km altitude. (IPCC)

அடுக்கு மண்டலம்

வளிமண்டலத்தில் அடிவிள மண்டலத்துக்கு மேல் இருக்கும் அடுக்கு. இது பொதுவாக 10 கி.மீ.க்கு மேல் (சரியாக சொன்னால் துருவ பிரதேசங்களில் 9 கி.மீ. ஆகவும், வெப்பமண்டல பகுதிகளில் 16 கி.மீ. ஆகவும்) 50 கி.மீ. வரை உயரத்தில் இருக்கும் ஒரு அடுக்கு.

Stern review

A report on the economics of climate change led by Lord Nicholas Stern, a former World Bank economist. It was published on 30 October 2006 and argued that the cost of dealing with the consequences of climate change in the future would be higher than taking action to mitigate the problem now. (BBC)

ஸ்டெர்ன் ஆய்வு

முன்னாள் உலகவங்கி பொருளாதார அறிஞரான நிக்கோலஸ் ஸ்டென் என்பவரால் காலநிலை மாற்றத்தின் பொருளாதாரம் என்ற அடிப்படையில் 2006ஆம் ஆண்டு அக்டோபர் 30 அன்று வெளியிடப்பட்ட அறிக்கை. இந்த அறிக்கையில், வருங்காலத்தில் காலநிலை மாற்றத்தின் விளைவுகளுக்கு கொடுக்கப்படப்போகும் விலை, தற்போது அதனை சரிசெய்ய செலவாகும் அளவை விட குறைவே என்கிறது.

Storm surge

The temporary increase, at a particular locality, in the height of the sea due to extreme meteorological conditions (low atmospheric pressure and/or strong winds). The storm surge is defined as being the excess above the level expected from the tidal variation alone at that time and place. (IPCC)

புயல் எழுச்சி

காற்றழுத்த தாழ்வு நிலை, பலத்த காற்று போன்ற அதிதீவிர வானிலைகளால் கடலின் மட்டம் ஒரு சிறிய பரப்பில் மட்டும் உயர்வாக தெரியும். இது அந்த இடத்தில் எதிர்பாக்கப்படும் கடல் ஓத (tidal) விளைவினையும் தாண்டியதாக இருக்கும்.

Stressors

Events and trends, often not climate related, that have an important effect on the system exposed and can increase vulnerability to climate-related risk. (IPCC)

அழுத்தங்கள்

காலநிலை சாராத நிகழ்வுகள் அல்லது போக்குகள், காலநிலை பாதிப்பு அபாயங்களில் பெரிய அளவில் தாக்கத்தை ஏற்படுத்துவது.

Sustainability

A dynamic process that guarantees the persistence of natural and human systems in an equitable manner. (IPCC)

நீடித்த தன்மை

இயற்கை மற்றும் மானுட அமைப்புகளின் நீடித்த நிலைப்பை சமஅளவில் உறுதிசெய்துபடி நிகழும் ஒரு இயக்கம்.

Sustainable development

Development that meets the needs of the present without compromising the ability of future generations to meet their own needs. (IPCC)

நீடித்த வளர்ச்சி

எதிர்கால சந்ததிகள் தனது தேவைகளை நிறைவேற்றிக்கொள்ள தடையிடா வண்ணம் தற்போதைய தேவைக்கு நிகழ்த்தப்படும் வளர்ச்சி.

Sustainable Development Goals (SDGs)

The 17 global goals for development for all countries established by the United Nations through a participatory process and elaborated in the 2030 Agenda for Sustainable Development. (IPCC)

நீடித்த வளர்ச்சி இலக்குகள்

ஐக்கிய நாடுகள் சபையால் உருவாக்கப்பட்ட உலக அளவிலான வளங்குன்றா வளர்ச்சிக்கான பதினேழு இலக்குகள். இது 2030ஆம் திட்டத்தில் விரிவாக விளக்கப்பட்டது.

Sub-national actor

Sub-national actors include state/provincial, regional, metropolitan and local/municipal governments as well as non-party stakeholders, such as civil society, the private sector, cities and other sub-national authorities, local communities and indigenous peoples. (IPCC)

துணை-தேசிய செயல்பாட்டாளர்

மாநில/வட்டார மாநகர, உள்ளூர்/நகர அரசுகள்; அரசியல் கட்சி இல்லாத அமைப்புகள், தனியார் துறை, உள்ளூர் குழுக்கள், பூர்வ குடிகள் முதலியவற்றை உள்ளடக்கியது.

Subsidence

Sinking of the ground because of underground material movement—is most often caused by the removal of water, oil, natural gas, or mineral resources out of

மூழ்குதல்

நிலத்தடியில் ஏற்படும் பொருட்களின் இடப்பெயர்வினால் நிலம் கீழிறங்கும். இது பொதுவாக நிலத்தடி நீரை உறிஞ்சுதல், எண்ணெய், இயற்கை எரிவாயு,

the ground by pumping, fracking, or mining activities.

Subsidence can also be caused by natural events such as earthquakes, soil compaction, glacial isostatic adjustment, erosion, sinkhole formation, and adding water to fine soils deposited by wind. (National Ocean Service)

பிற தாதுக்களை சுரங்க செயல்பாடுகள் மூலம் தோண்டி எடுப்பதால் நிகழ்கிறது.

இயற்கையாக நிலநடுக்கம், மண் இருக்குதல், பனியாரின் இடமாற்றம், அரிப்பு, நிலகுழி விழுதல், காற்றினால் படிந்த மணலின் மீது தண்ணீர் சேர்வது போன்றவற்றால் நிகழும்.

T

The Task Force on Climate-Related Financial Disclosures (TCFD)

TCFD was created in 2015 by the Financial Stability Board (FSB) to develop consistent climate-related financial risk disclosures for use by companies, banks, and investors in providing information to stakeholders. (UNEPFI)

காலநிலை தொடர்பான நிதி வெளியீடுகளுக்கான பணிக்குழு (TCFD)

TCFD என்பது நிதி நிலைத்தன்மை வாரியத்தால் (FSB) 2015ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. இது நிறுவனங்கள், வங்கிகள் மற்றும் முதலீட்டாளர்கள் பங்குதாரர்கள் போன்றோருக்கு காலநிலை சார்ந்த நிதி அபாயம் தொடர்பான தகவல்களை வழங்குவதற்காக உருவாக்கப்பட்டது.

Technology transfer

The process whereby technological advances are shared between different countries. Developed countries could, for example, share up-to-date renewable energy technologies with developing countries, in an effort to lower global greenhouse gas emissions. (IPCC)

தொழில்நுட்ப பரிமாற்றம்

தொழில்நுட்பத்தில் உண்டாகும் முன்னேற்றங்களை வெவ்வேறு நாடுகளுக்கிடையே பரிமாறிக்கொள்ளுதல். உதாரணத்திற்கு, வளர்ந்த நாடுகள் புதுப்பிக்கத் தக்க ஆற்றலில் நவீன தொழில்நுட்பங்களை உலக பசுமை இல்ல வாயுவின் அளவினைக் குறைப்பதற்காக வளரும் நாடுகளுடன் பகிர்தல்.

Temperature overshoot

The temporary exceedance of a specified level of global warming, such as 1.5°C. Overshoot implies a peak followed by a decline in global warming, achieved through anthropogenic removal of CO2 exceeding remaining CO2 emissions globally. (IPCC)

வெப்பநிலை உச்சமடைதல்

உலக வெப்பநிலை அளவு தற்காலிகமாக ஒரு உச்சத்தை அடைவது. உதாரணமாக 1.5C போன்ற அளவை அடைந்து பிறகு குறையும். இந்த குறைவு அல்லது வீழ்ச்சி, உலக கரியமில உமிழ்வை விட மனிதரின் திட்டமிட்ட கரியமில வாயு நீக்கம் மூலம் நிகழ்கிறது.

Tipping point

A level of change in system properties beyond which a system reorganizes, often abruptly, and does not return to the initial state even if the drivers of the change are abated. For the climate system, it refers to a critical threshold T S T when global or regional climate changes from one stable state to another stable state. The tipping point event may be irreversible. (IPCC)

முனைப்புள்ளி

ஒரு அமைப்பு குறிப்பிட்ட எல்லையை கடந்து மாறுதல்களுக்கு உட்செல்கையில் மீட்டெடுக்க முடியாத அளவில் திடீர் மாற்றம் அடைந்து புதுநிலைக்கு செல்லும். காலநிலை அமைப்பில், உலக அளவில் அல்லது பிராந்திய (regional) அளவில் காலநிலை அமைப்பு ஒரு நிலையில் இருந்து இன்னொரு நிலைக்கு மாறும் முக்கிய எல்லையை (Critical Threshold) T S T முனைப்புள்ளியாக கொள்கிறோம்.

Twenty-twenty-twenty (20-20-20)

This refers to a pledge by the European Union to reach three targets by 2020: (a) a 20% reduction in greenhouse gas emissions from 1990 levels; (b) an increase in the use of renewable energy to 20% of all energy consumed; and (c) a 20% increase in energy efficiency. The EU says it will reduce emissions by 30%, by 2020, if other developed countries also pledge tough action. (BBC)

இருபது-இருபது-இருபது

2020 ஆம் ஆண்டிற்குள் 3 இலக்குகளை அடைவதாக ஐரோப்பிய ஒன்றியம் எடுத்த உறுதிமொழியை இது குறிக்கிறது. 1) பசுமை இல்ல வாயு உமிழ்வின் அளவை 1990ஆம் ஆண்டின் அளவில் 20% குறைக்க வேண்டும். 2) புதுப்பிக்கத்தக்க ஆற்றலின் பயன்பாட்டை 20% அதிகரிக்க வேண்டும். 3) ஆற்றல் பயன்பாட்டின் திறனை 20% அதிகரிக்க வேண்டும். வளரும் நாடுகளும் இவ்வாறான கடினமான உறுதிமொழிகளை ஏற்றால் 2030க்குள் ஐரோப்பிய ஒன்றியம் உமிழ்வினை 30% குறைப்பதாக கூறியுள்ளது.

Thermal expansion

Thermal expansion happens when water gets warmer, which causes the volume of the water to increase. About half of the measured global sea level rise on Earth is from warming waters and thermal expansion. (NASA)

வெப்ப விரிவாக்கம்

தண்ணீர் வெப்பமாகும் போது, அதன் கொள்ளளவு அதிகரிப்பதை வெப்ப விரிவாக்கம் என்கின்றோம். உலகின் கடல்மட்ட உயர்வில் கிட்டத்தட்ட சரிபாதி இது போன்ற கடல்நீர் வெப்பமாவதாலும், வெப்ப விரிவாக்கத்தாலும் நடைபெறுகிறது.

Transition

The process of changing from one state or condition to another in a given period of time. Transition can be in individuals, firms, cities, regions and nations, and can be based on incremental or transformational change. (IPCC)

மாற்றம்

குறிப்பிட்ட ஒரு கால அளவில், ஒரு நிலையில் இருந்து இன்னொரு நிலைக்கு மாற்றம் அடைவது. இந்த மாற்றம் தனிமனிதர்களிடம், நிறுவனங்களிடம், நகரங்களிடம், பிராந்தியங்களிடம் மற்றும் தேசங்களிடம் கூட காணப்படுகிறது. இது அளவில் ஏற்படும் மாற்றமாகவும் இருக்கலாம். அதன் தன்மையே அடியோடு மாறும் மாற்றமாகவும் இருக்கலாம்.

Transit-Oriented Development (TOD)

An approach to urban development that maximizes the amount of residential, business and leisure space within walking distance of efficient public transport, so as to enhance mobility of citizens, the viability of public transport and the value of urban land in mutually supporting ways. (IPCC)

போக்குவரத்து-சார் முன்னேற்றம்

ஒரு நகர வளர்ச்சியில் மக்கள் வசிக்கின்ற, தொழில் செய்கின்ற மற்றும் ஓய்வெடுக்கின்றன இடங்களை அதிகபட்சம் பொதுப்போக்குவரத்து வசதிகளில் இருந்து நடக்கும் தூரத்தில் அமையும் வண்ணம் திட்டமிடுவது. இது பொதுமக்களின் போக்குவரத்து, பொதுப்போக்குவரத்தின் சாத்தியக்கூறுகள் மற்றும் நகர நிலங்களின் விலை போன்றவற்றை ஒருசேர முன்னேற்றும்.

Transport emissions

The transport sector contributes approximately one quarter of all energy related greenhouse gas (GHG) emissions. Today's transport sector is predominantly based on the combustion of fossil fuels, making it one of the largest sources of both urban and regional air pollution.

போக்குவரத்தின் உமிழ்வு

ஆற்றல்சார் கரியமில உமிழ்வின் மொத்த அளவில், போக்குவரத்து துறை மட்டும் கிட்டத்தட்ட நான்கில் ஒரு பங்காக உள்ளது. இன்றைய போக்குவரத்து துறை கிட்டத்தட்ட முற்றிலும் படிம எரிபொருட்களை நம்பியே இயங்குவதால் நகர மற்றும் பிராந்திய காற்று மாசின் மிகப்பெரும் ஆதாரமாக உள்ளது.

Tropical cyclone

The general term for a strong, cyclonic-scale disturbance that originates over tropical oceans. Distinguished from weaker systems (often named tropical disturbances or depressions) by exceeding a threshold wind speed. A tropical storm is a tropical cyclone with one-minute average surface winds between 18 and 32 m s-1. Beyond 32 m s-1, a tropical cyclone is called a hurricane, typhoon, or cyclone, depending on geographic location. (IPCC)

வெப்பமண்டல புயல்

வெப்பமண்டல பிரதேச கடல்களில் உருவாகும் வலிமையான, காற்றழுத்த தாழ்வு மண்டலத்தை/ சுழற்சியை குறிக்கும் பதம். வலிமையற்ற மண்டலங்களில் இருந்து இதனை வேறுபடுத்த ஒரு குறிப்பிட்ட காற்றின் வேகத்தை இது தாண்ட வேண்டும். 18 முதல் 32 ms-1 என்ற அளவில் காற்றின் வேகம் உள்ள மண்டலங்கள் வெப்பமண்டல சுழற்சி எனவும்; 32 m s-1 க்கு மேல் காற்றின் வேகம் இருப்பின் புயல் எனவும் அழைக்கப்படுகிறது. இது இடத்திற்கு தகுந்தார்போல் ஹரிகேன், டைபூன் மற்றும் சைச்லோன் என்று அழைக்கப்படுகிறது.

Troposphere

The lowest part of the atmosphere, from the surface to about 10 km in altitude at mid-latitudes (ranging from 9 km at high latitudes to 16 km in the tropics on average), where clouds and weather phenomena occur. In the troposphere, temperatures generally decrease with height. (IPCC)

அடிவிளமண்டலம்

வளிமண்டலத்தின் அடிப்பகுதி இவ்வாறு அழைக்கப்படுகிறது. இது மத்திய அட்சரேகைகளில் (latitudes) நிலப்பரப்பில் இருந்து சுமார் 10 கி.மீ. உயரம் வரை உள்ள வளிமண்டல அடுக்கு (இது துருவ பிரதேசங்களில் 9 கி.மீ. ஆகவும், வெப்பமண்டல பகுதிகளில் 16 கி.மீ. ஆகவும் இருக்கும்). இங்கு தான் மேகங்கள் மற்றும் பிற வானிலை நிகழ்வுகள் நடைபெறும். இந்த அடுக்கில் பொதுவாக உயரம் அதிகரிக்க அதிகரிக்க வெப்பநிலை குறையும்.



U

UNFCCC

The United Nations Framework Convention on Climate Change is one of a series of international agreements on global environmental issues adopted at the 1992 Earth Summit in Rio de Janeiro. The UNFCCC aims to prevent “dangerous” human interference with the climate system. It entered into force on 21 March 1994 and has been ratified by 192 countries. (BBC)

ஐக்கிய நாடுகளின் காலநிலை மாற்றத்துக்கான வரையறை மாநாடு

உலகளாவிய சுற்றுச்சூழல் பிரச்சனைகளுக்காக நடைப்பெற்ற பல சர்வதேச ஒப்பந்ததங்களின் வரிசையில் ஒன்றான இந்த மாநாடு, 1992ஆம் வருடம் ரியோ-டி-ஜெனீரோ வில் நடைப்பெற்ற புவிக்கான மாநாட்டில் (Earth Summit) ஏற்றுக்கொள்ளப் பட்டது. இம்மாநாடு, காலநிலை அமைப்பை பாதிக்கும் அளவில் உள்ள மானிட இடையூறுகளை தடுப்பதை நோக்கமாக கொண்டுள்ளது. இது 1994 மார்ச் மாதம் 21 இல் அமலுக்கு வந்கொண்டுவரப்பட்டு, 192 நாடுகளால் ஏற்றுக்கொள்ளப் பட்டது.

Urban heat island

Structures such as buildings, roads, and other infrastructure absorb and re-emit the sun’s heat more than natural landscapes such as forests and water bodies. Urban areas, where these structures are highly concentrated and greenery is limited, become “islands” of higher temperatures relative to outlying areas. These pockets of heat are referred to as “heat islands.” Heat islands can form under a variety of conditions, including during the day or night, in small or large cities, in suburban areas, in northern or southern climates, and in any season. (EPA)

நகர்ப்புற வெப்ப தீவு

கட்டிடங்கள், சாலைகள், பிற உள்கட்டமைப்பு போன்ற கட்டமைப்புகள் ஆகியவை காடுகள் நீர்நிலை,கள் போன்ற இயற்கை நிலப்பரப்புகளை விட அதிகமாக சூரியனின் வெப்பத்தை உறிஞ்சி மீண்டும் வெளியிடுகின்றன. இந்த கட்டமைப்புகள் மிக அடர்த்தியாகவும் பசுமை குறைவாகவும் இருக்கும் நகர்ப்புற பகுதிகள், வெளிப்புற பகுதிகளுடன் ஒப்பிடும் போது அதிக வெப்பநிலைக்கான “தீவுகளாக” மாறும். இந்த வெப்பத் தொகுதிகள், “வெப்பத் தீவுகள்” என்று குறிப்பிடப்படுகின்றன. பகல் அல்லது இரவு, சிறிய அல்லது பெரிய நகரங்கள், புறநகர்ப் பகுதிகள், வடக்கு அல்லது தெற்கு காலநிலைகள் மற்றும் எந்த பருவத்திலும் பல்வேறு நிலைமைகளின் கீழ் வெப்பத் தீவுகள் உருவாகலாம்.

V

Vulnerability

The propensity or predisposition to be adversely affected. Vulnerability encompasses a variety of concepts and elements including sensitivity or susceptibility to harm and lack of capacity to cope and adapt. (AR5 WG2)

பாதிப்படையக்கூடிய நிலை

ஒரு விஷயம் பாதிப்பை சந்திக்கும் வாய்ப்பு உள்ளது என்பதை முன்கூட்டியே அறிந்திருப்பது. இது எளிமையாக பாதிப்படையும் நிலை, தீங்கு ஏற்பட சாதகமாக இருப்பது மற்றும் திறனற்று இருப்பது போன்ற பல்வேறு விசயங்களை உள்ளடக்கியது.

W

Weather

The state of the atmosphere with regard to temperature, cloudiness, rainfall, wind and other meteorological conditions. It is not the same as climate, which is the average weather over a much longer period. (BBC)

வானிலை

வெப்பநிலை, மேகமூட்டம், மழைப்பொழிவு, காற்று, மற்றும் பிற தினசரி மாறுதல்களைப் பொறுத்து அமையும் வானத்தின் நிலையை நாம் வானிலை என்கிறோம். காலநிலை என்பது வானிலையில் இருந்து வேறுபட்டது. நீண்ட கால வானிலையின் சராசரியையே நாம் காலநிலை என்கிறோம்.

Wet bulb temperature

Wet bulb temperature is the lowest temperature to which air can be cooled by the evaporation of water into the air at a constant pressure. (Science Direct)

ஈரக்குமிழ் வெப்பநிலை

ஒரு குறிப்பிட்ட அழுத்தத்தில், நீர் ஆவியாகி காற்றில் கலக்கும்போது காற்றின் வெப்பநிலை எந்த அளவிற்கு குளிர்ச்சியடைய முடியும் என்பதை இது குறிக்கின்றது.

The Tamil Nadu Government, under the Department of Environment, Climate Change & Forest has set up the **Tamil Nadu Green Climate Company (TNGCC)**, a Section (8) Not-for-Profit Company and a Unique Platform to respond to Climate Change in the State. TNGCC is a first of its kind ambitious initiative by the State Government and will act as a Special Purpose Vehicle (SPV) to address the Climate Crisis in the State.

தமிழ்நாடு அரசு, சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறையின் கீழ், தமிழ்நாடு பசுமை காலநிலை நிறுவனம் **(TNGCC)**, பிரிவு (8) இலாப நோக்கற்ற நிறுவனம் மற்றும் காலநிலை மாற்றத்திற்கு பதிலளிக்க ஒரு தனித்துவமான தளத்தை அமைத்துள்ளது. டிஎன்ஜிசிசி என்பது மாநில அரசின் முதல் லட்சிய முயற்சியாகும், மேலும் மாநிலத்தின் காலநிலை நெருக்கடியை எதிர்கொள்ள சிறப்பு நோக்க வாகனமாக **(SPV)** செயல்படும்.

Climate Trends LLP is a research-based consulting and capacity building initiative that aims to bring greater focus on issues of the environment, climate change, and sustainable development. We specialise in developing comprehensive analyses of complex issues to enable effective decision-making in the private and public sectors.

Climate Trends என்பது சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் நிலையான மேம்பாடு ஆகியவற்றில் அதீத கவனம் செலுத்தும் வகையில் ஆய்வு ரீதியிலான ஆலோசனை மற்றும் கட்டமைப்புகளை உருவாக்கும் நிறுவனமாகும். நாங்கள் பொது மற்றும் தனியார் துறைகளுக்கு காலநிலை தொடர்பாக சிக்கலான விஷயங்களை பகுப்பாய்வு செய்து எளிதாக முடிவெடுக்க உதவுகிறோம்.

For more information, please visit:
மேலதிக தகவலுக்கு, இணைப்பை பின் தொடரவும்:

www.climatetrends.in